இன்று
காலை
ஆரம்பம்
aat SRI LANKA
6000.00 for 6 Months
Veal Business College
No.159, Sea View Road, Trincomalee
026 222 76 22 - 077 02 03 201


அறைவு 03 இயம் 07 September 13-19 , 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 16 விலை : 30.00

CCTV Installation
&
Maintenance
PHOTONTECH
175, Main Street
Trincomalee
075 6602486

# தென்கிழக்கு பல்கலைக்கழகம் தேசத்திற்கு அச்சுறுத்தல் !




## அஞ்சுகின்றது பொதுபலசேனா!

ஷரி-ஆ சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இயங்கிவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இந்த நாட்டுக்கு மிகவும் பயங்கரமானவொன்றாகும். இப் பல்கலைக்கழகத்தில் உள்ள சகல பீடங்களும் ஷரி-ஆ சட்டத்தை அடிப்படையாக்க கொண்டதாகவே காணப்படுகின்றன. 13



## தமிழரசுக் கட்சியின் தீர்மானங்கள் தனிநாட்டுக்கான தீர்மானங்களே!

தமிழரசுக் கட்சியின் 15வது தேசிய மாநாட்டில் வெளியிடப்பட்ட 15 தீர்மானங்களிற் பெரும்பாலானவை தனிநாட்டுக் கோரிக்கையை வலுப்படுத்துவதாக

### வடக்கு கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது

இருப்பதாக இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராசபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார். 13

### இனமுறுகலை ஏற்படுத்த முயற்சிப்போர் யார்?

## பாரதிபுரத்தில் உருவாகுமா "அக்ஷ்க்ஷவ்பா-பாரதிபுர முச்சக்கர வண்டிச் சங்கம் "

மூதூர் பாரதிபுரம் சந்தியில் இற்றைவரை நிறுத்தப்பட்டு வந்த தமிழ் மற்றும் முஸ்லிம் முச்சக்கர வண்டி உரிமையாளர்களிடையே திட்டமிட்டுச் சிலர் இனமுறுகலை ஏற்படுத்து முனைவதாக செய்தி கிடைத்துள்ளது.

பாரதிபுரச் சந்தியில் திடீரென அஷ்ஷவ்பா-பாரதிபுரம் ஆட்டோ சங்கம் என்றோர் அமைப்பை உருவாக்கச் சிலர் முயற்சித்துள்ளனர். இவ்வாறு முயற்சிப்பவர்கள் இம்முயற்சிக்குப் பக்கபலமாக ஈரப்பவர்களாக ஒரு பிரதி அமைச்சரின் பெயரையும் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரின் பெயரையும் பயன்படுத்துவதாக அச் செய்தி தெரிவிக்கின்றது. அதையடுத்து சிறிய 13


## இந்தியாவில் ஓர் இரட்டைக் கோபுரத் தாக்குதல் - திட்டமிட்டவர் இலங்கைத் தமிழரா?



இந்தியாவில் கைதாகியுள்ள இலங்கைத் தமிழர் ஒருவரின் மீது இரட்டைக் கோபுரத் தாக்குதல் ஒன்றை இந்தியாவின் முக்கிய மாநிலங்களான தமிழ்நாடு மற்றும் ஆந்திராவில் நடாத்தத் திட்டமிட்டார் என இந்தியத் தேசியப் புலனாய்வுத்துறை குற்றம் சுமத்தியுள்ளது.

இத்தாக்குதலுக்குத் தேவையான தகவல்களை அவர் படங்களாகவும் கோப்புக்களாகவும் பாகிஸ்தானின் உளவாளியொருவருக்கு ஸ்கைப் மற்றும் வைபர் தொடர்பு 13

## கடற்படை கடத்திய குதிரைகள்



நெடுந்தீவில் இருந்து கடத்திச் செல்லப்பட்டதாகப் பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்ட நான்கு குதிரைகளும் கடற்படையினரால் திருகோணமலைக் கடற்படை முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். 13



# போராடுவோம்

## தமிழரசுக் கட்சியின் தலைவர் அறைகூவல்

" எம் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகவும், விடிவிற்காகவும், அவ்வினத்தின் தன்னாட்சிக்காகவும், நாம் போராடுவோம்" என்று தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள மாவை சேனாதிராசா அவர்கள் அறைகூவலொன்றை விடுத்துள்ளார்.

கடந்த 7ம் திகதி வவுனியாவில் கூடிய தமிழரசுக் கட்சியின் 15வது தேசிய மாநாட்டில் தலைவராகத் தேர்வான மாவை அவர்கள் தனது கன்னி உரையிலேயே அனைவரையும் போராட வருமாறு அழைப்பு விடுத்தார்.

இப்போராட்டம் சாத்வீக வழியில் காந்தியப் 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ, கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# போராட உடன்படுமா தமிழினம் ??

தமிழரசுக் கட்சியின் 15வது தேசிய மாநாட்டில் புதிய தலைவராக அக்கட்சியின் சிரேட்ட உறுப்பினர் மாவை சேனாதிராசா அவர்கள் தெரிவாகிய பின்னர் அவரது உரை மிக முக்கியம் வாய்ந்ததாக இருந்தது.

அவ்வுரையின் தொனிப்பொருளாக சுய நிர்ணய உரிமைக்காகவும் சுயாட்சி அதிகாரத்திற்காகவும் மக்கள் மீண்டும் போரிட வேண்டும் என்ற கருத்து ஒலித்தோய்ந்திருந்தது.

உண்மையில் அவரது கருத்து மிகச் சரியாகவே உள்ளது. ஏனெனில் எதையும் போராடமல் பெற்றுக் கொள்ள முடியாது என்பதையே பேரோய்ந்திருந்த இந்த 5 வருடங்களிலும் தமிழர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் இந்தத் தலைமுறையில் ஆயுதப் போராட்டத்திற்குத் திரும்பப் போவதில்லை. ஏனெனில் ஆயுதப் போராட்டத்திற்கான விலையினை, அதற்காகச் செலுத்திய பெறுமதியினை தமிழர்களின் இந்தத் தலைமுறை நன்றாகவே உணர்ந்துள்ளது.

ஆகவே இருக்கின்ற ஒரே வழி அகிம்சைப் போராட்டமே! இப் போராட்டத்தினை நோக்கி மக்களை அடுத்த மூன்று மாதங்களின் பின்னர் அணி திரளுமாறு மாவை விடுத்த வேண்டுகோளினை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா? என்பதையிட்டுச் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

போராட்டமொன்றின் வெற்றி அப்போராட்டத்தினை முன்னெடுக்கின்ற மக்களின் உணர்வு பூர்வமான நம்பிக்கையில் தங்கியுள்ளது. உணர்வற்ற நிலையில் போராடப் புறப்பட மக்களைத் திரட்ட வேண்டுமாயின் அம் மக்களுக்கு வேறுவழியின்றிய நிலைமை உருவாக வேண்டும். தற்போது மக்களுக்கு வேறு வழிகள் பலவற்றை அரசு படைத்து விட்டுள்ளது. மதுவும், கேபிள் தொலைக்காட்சியும், வாசிப்பின்மையும், கட்டற்ற பாலியல் நுகர்ச்சியும் பட்டங்களுக்காகவும் பணத்திற்காகவும் மட்டுமே படிக்கும் சிந்தனையும் பெருமளவான தமிழர்களின் வாழ்வியலைப் பாதித்துள்ளது. அவற்றின் பாற்பட்டுப் பயணிக்கும் மக்களைப் போராட்டத்திற்கிழுப்பதென்பது அவ்வளவு சாத்தியமானதல்ல!

அதனைச் சாத்தியப்படுத்த வேண்டுமாயின் இப்போதிருந்தே சிறிய, சிறிய போராட்டங்களை தமிழர் தலைமைகள் கிராமிய மட்டங்களில் முன்னெடுக்க வேண்டும். விசேடமாக கிழக்கில் திருகோணமலையிலும் வடக்கின் யாழ்ப்பாணத்திலும் இதன் தேவை மிக உணரப் படுகின்றது. வன்னி மண்ணில் போரின் மனநிலை மிச்ச சொச்சமாக ஒட்டிக்கிடக்கின்றது. அது அழிவடையப் போவதில்லை. ஆனால் கிழக்கில் திருகோணமலையில் போரிடும் உணர்வு பதுங்கியிருந்தாலும் தம்மீதான அடக்கு முறைகளை, தமது தேவைகளைச் சொல்ல எந்தத் தரப்புமின்றி பேசாப் பதர்களாக தமிழர்களின் வாழ்வு இருக்கின்றது. இரு உதாரணங்களைப் பார்க்கலாம். அண்மையில் யானைத் தாக்குதலுக்கு உள்ளான தமிழ் மக்கள் சாலை மறிப்பில் ஈடுபட்டுக் கொண்டே தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவருக்கு அழைப்பை ஏற்படுத்தியபோது அவர் அங்கு வரமுடியாது எனத் தெரிவித்திருந்தார். இரண்டாவது இறைச்சி வெட்டும் இடங்களுக்கு பொதுப்பரிசோதகர்கள் சில நாட்களாகச் செல்லவில்லை என திருமலையின் நிருபர் ஒருவர் தனது பேஸ்புக்கில் இட்ட தகவலுக்கு தமிழ் அரசியல் கட்சியின் பிரதேசத் தலைவர் ஒருவர் நடவடிக்கை எதனையும் எடுக்காமல் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வேலைப்பகிஸ்கரிப்பா செய்கின்றனர்? என்ற கேள்வியுடன் தனது கடமை முடித்துக் கொண்டுள்ளார்.

"எங்களிடம் 'கொடுப்பதற்கு எதுவுமில்லை...மக்களே ஆனால் நாங்கள் உங்களுடன் தான் இருக்கின்றோம்" என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்க வேண்டிய தேவை தமிழ்த் தலைமைகளுக்கு உருவாகிவிட்டது.

எங்களுடைய ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்தில் எதுவுமில்லாதவர்களை ஆயுதப்போராட்டத்தின் முடிவில் உலகே அஞ்சக்கூடிய அளவிற்கு உயர்த்தியவர்கள் மக்கள்.....

அவர்களின் உணர்வு சார்ந்து செயற்பட தமிழரசுக் கட்சி [illegible] மாவை [illegible].....

# பொதுபலசேனாவின் பொய்களில் ஒன்று

விரிவுரையாளர் ஷிப்லி

பொதுபல சேனாவின் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பான கூற்றுக்கு கண்டனம் வெளியிட்டுள்ள அப்பல்கலைக்கழக விரிவுரையாளர் ஷிப்லி "பத்திரிகையாளர்களிடம் கண்டபடி பேசுவதன் மூலம் நாட்டின் கல்வித்துறையையும், பல்கலைக்கழக மொன்றையும் அவமதித்திருப்பது கண்டனத்துக்குரியது. எனத் தெரிவித்துள்ளார்.

இங்கு ஐந்து பீடங்கள்தான் இதுவரை காணப்படுகிறது அதில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடமானது இளம்பட்டதாரிகளுக்கு இஸ்லாம் தொடர்பான கற்கைகளையும், அரபு மொழியியல் கற்கைகளையும் போதிக்கிறது. அது சிங்கள கற்கைகள், பாளி மொழி தொடர்பான கற்கைகள், சைவ சமய கற்கைகள் போன்று ஒரு சமயநெறி சார்ந்த கற்கையே என்பதும் அநேகருக்குத் தெரியும்.

அதுதவிர இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சட்டங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் தென்கிழக்குப் பல்கலைக் கழகமோ, இங்கிருக்கும் பீடங்களோ இயங்கவில்லை. எல்லோருக்கும் வெள்ளிடைமலையாகத்தெரியும் விடயங்கள் பொதுபல சேனாவின் நிறைவேற்று அதிகாரிக்குத் தெரியாமல் போனதுதான் எப்படி என்று விளங்கவில்லை என விரிவுரையாளர் ஷிப்லி மேலும் தெரிவித்துள்ளார்.

# வேல் நடை பஜனைக் குழு வெருகல் நோக்கிப் பயணம்

வெருகலம்பதி முருகன் கோவிலை நோக்கி வருடா வருடம் திருகோணமலையில் இருந்து நடைபெறும் வேல்நடைப் பயணக் குழுவினர் கடந்த 8ம் திகதி தமது நடைப்பயணத்தை திருக்கோணேஸ்வரத்தில் இருந்து ஆரம்பித்தனர். (அச்சுதன்)



# சர்வமத ஒன்றியத்தின் ஒன்றுகூடல் மூதூரில்

நல்லிணக்கத்திற்கான வட கிழக்கு சர்வமத ஒன்றியம் ஏற்பாடு செய்த முஸ்லிம் மற்றும் பௌத்த சமயத் தலைவர்களின் ஒன்று கூடல் கடந்த புதன் கிழமை மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியில் இடம்பெற்றது.

சமயங்களுக்கிடையில் புரிந்துணர்வை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் நல்லிணக்கத்திற்கான வட கிழக்கு சர்வமத ஒன்றியத்தின் தலைவர் வெலியமுவபொத்தான பியரத்ன நாயக்க தேரர், அலுவிஹாரை விமல ரத்ன நாயக்க தேரர், அம்பகஸ்வெவ தம்மரத்ன நாயக்க தேரர், மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரி பிரதி அதிபர் அஷ்ஷெய்க் கே.எம். ஹரீஸ் நத்வி , கந்தளாய் நஜா அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் ஏ.ஆர்.எம். நஸீர் நத்வி, நல்லிணக்கத்திற்கான வட கிழக்கு சர்வமத ஒன்றித்தின் முக்கியஸ்தர் அஷ்ஷெய்க் தஸ்ரீக் நத்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(அச்சுதன்)

# இலங்கையை மீண்டும் சுனாமி தாக்கலாம்

இலங்கை மற்றும் இந்து சமுத்திர நாடுகள் மற்றுமொரு கடுமையான சுனாமிப் பேரலைத் தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடும் என அமெரிக்காவின் மியாமி பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2004ல் ஏற்பட்ட சுனாமியினால், இலங்கை, இந்தியா உட்பட ஆசிய நாடுகளில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். இதனை விட மிகப் பெரிய சுனாமி பேரலை தாக்கத்தை இந்நாடுகள் எதிர்காலத்தில் எதிர்நோக்கக் கூடும் என மியாமி பல்கலைக்கழக கெலி ஜெக்சன் உள்ளிட்ட ஆய்வு குழுவினர் தெரிவித்துள்ளனர். அதேபோல், இந்தியா, ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் புவி தட்டுகளையும் இவர்கள் ஆய்வு செய்துள்ளனர். இன்னும் பல வருடங்களின் பின்னர், இலங்கை உட்பட இந்து சமுத்திர நாடுகளை மற்றுமொரு பாரிய சுனாமி தாக்க வாய்ப்புள்ளதாக அவர்கள் கண்டறிந்துள்ளனர்.



# 'சேனையூர் இரத்தினா' வின் "பொன்னாவரை" கவிதை நூல் வெளியீடு

சேனையூர் இரத்தினாவின் (இரத்தினசிங்கம் சேனையூர் மத்திய கல்லூரி அதிபர்) பொன்னாவரை கவிதை நூல் வெளியீட்டு விழா 14.09.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மூதூர் கிழக்கு சேனையூர் மத்திய கல்லூரி மண்டபத்தில் கவிஞர் வி. நவரத்தினராஜா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக ஆசியுரையினை பிரம்மஸ்ரீ ஸ்ரீராம சுஜிராஜசர்மா வழங்க வரவேற்புரையினை ஆசிரியை திருமதி. இ.ராமலிங்கம் வழங்குவார். கலாபூசணம் கா.வீரசிங்கம் அவர்களின் வாழ்த்துப்பாவுடன் நூல் வெளியீடு ஆரம்பமாகும்.

நூல் வெளியீட்டினை சிறப்பிக்கும் முகமாக நிகழ்வின் முதன்மை அதிதியாக திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரெத்னசிங்கம் கலந்து கொள்கின்றார்.

நூலின் நயவுரையினை மலைமுரசு பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், திருமலை முத்தமிழ்ச் சங்கச் செற்பாட்டாளருமான "மாயன்" இரா. ஸ்ரீ.ஞானேஸ்வரன் நிகழ்த்த அறிமுக உரையினை ஓசை சஞ்சிகையின் ஆசிரியர் மூதூர் முகைதீன் வழங்க ஏற்புரையினை நூலாசிரியர் வழங்குவார்.புரட்சிக் கவி. பு. ஜெயாகரன் தொகுத்து வழங்குவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அச்சுதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## the Sunday times

### புதிய அரசியல் சட்டமொன்று உருவாக்கப்படலாம்

இலங்கைக்கான புதிய அரசியல் சட்டமொன்றை உருவாக்கும் பணியில் அரசின் சட்ட ஆலோசகர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவ் அரசியல் சட்ட உருவாக்க நடவடிக்கைகள் நிறைவேறியவுடன் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் அங்கமாக அதனையும் சேர்த்துக் கொள்ளும் திட்டமிருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தகவல் மூலங்கள் தெரிவித்துள்ளன.



இச் சட்டத்தின் உள்ளடக்க விபரங்கள் தெரியாதுள்ள போதிலும் 13வது திருத்தச் சட்டத்தை மேலும் புத்தாக்கம் செய்யும் நடவடிக்கை இருப்பதை அத் தகவல் மூலங்கள் உறுதி செய்துள்ளன. அத்துடன் சனாதிபதி முறைமையை அவ்வாறே பேணிக் கொண்டு அம் முறைமையிற் சில திருத்தங்களை செய்யவும் முயலப்பட்டுள்ளது. தனக்கு வாக்களிப்பதன் ஊடாக புதிய அரசியல் சட்டத்தை மக்கள் ஏற்றுக்கொண்டு அமுல்படுத்தும் ஆணையை வழங்குமாறு கேட்டுக் கொள்வதே எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் முக்கிய பிரசாரமாக ஐ.ம.சு.முன்னணியின் பிரதான வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ செய்யவுள்ளார்.

### வெளிநாட்டுப் படையினருக்கு பயிற்சி

### எண்ணிக்கையை அதிகரிக்கும் இலங்கை

பாதுகாப்புச் சேவைகள் மற்றும் அதிகாரிகள் கல்லூரியில் கல்வி கற்கும் வெளிநாட்டு வீரர்களுக்கான வாய்ப்பின் எண்ணிக்கையை அதிகரிக்க இலங்கை தீர்மானித்துள்ளது.

இலவசமாகவும் அதேவேளை கட்டணத்துடனும் கல்விப் பயிற்சியை வழங்கும் அனுமதியை சனாதிபதியின் முன்மொழிவினை அடுத்து மந்திரிசபை வழங்கியுள்ளது.

இலவச அனுமதியை அடுத்த வருடத்தில் அவுஸ்திரேலியா, சைனா, இந்தியா, பங்களாதேஷ், மலேசியா, நேபாளம், பாகிஸ்தான், ருவாண்டா, செனகல், சிங்கப்பூர், சூடான், வியட்னாம், துருக்கி ஆகிய நாட்டுப் பாடைகளும், இந்தோனேசியா, மாலைதீவு மற்றும் ஓமான் நாட்டுப் படைகள் கட்டணத்துடனும் இங்கு கல்வி கற்க முடியும்.

### பாஸ்போட்டில் 10 விரல் பதிவு



மரபணுவியல் அடையாளங்களை கடவுச்சீட்டில் பதியும் முறைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதை அடுத்து கடவுச்சீட்டுக்களில் பத்து விரல் அடையாளங்களையும் பதியும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கமைய குடிவரவு, குடியகழ்வுச் சட்டம் திருத்தப்படவுள்ளது. எதிர்வரும் மாதம் முதல் படப்பிடிப்பகங்களுக்கு விசேட மென்பொருளொன்றை வழங்கி அதனூடாக ஒழுங்கமைக்கப்பட்ட புகைப்படங்கள் பெற்றுக்கொள்ளப் படவுள்ளதாகத் தெரிவித்த குடிவரவுக் கட்டுப்பாட்டு அதிகாரியொருவர் அதன் பின்னர் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் பிரதான அலுவலகங்களுக்கு அழைக்கப்பட்டு அவர்களின் பத்துவிரல் அடையாளங்களும் பெற்றுக் கொள்ளப்படும் என மேலும் தெரிவித்தார்.

### இறக்குமதித் தீர்வை அதிகரிக்கப்படும்

'அரைச் சொகுசு உணவு வகைகள்' எனப் பட்டியல் இடப்பட்ட உணவு வகைகளின் இறக்குமதி வரியான 'செஸ்' வரியை அரசு அதிகரிக்கவுள்ளது. இதனால் பால்மா உட்படப் பல பொருட்களின் விலைகள் உள்நாட்டில் அதிகரிக்கவுள்ளது. இப் பொருட்களின் இறக்குமதி வரி மீது 30% அதிகரிப்பை ஏற்படுத்தி தற்போது உழைக்கும் 40 பில்லியன் வரி வருமானத்தை 60 பில்லியனாக அதிகரிக்க ஏற்பாடுகளை எதிர்வரும் நவம்பரில் கொண்டுவரும் பாதீட்டில் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

### நிலக்கரி தீர்ந்தது

### அவசரக் கட்டளை தென்னாபிரிக்கா நோக்கி

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை இயக்கத் தேவையான நிலக்கரி செப்டம்பர் 21ம் திகதி வரைக்கும் மட்டுமே போதுமானதாக உள்ள நிலையில் அவசர இறக்குமதிக் கட்டளையொன்று தென்னாபிரிக்கா நோக்கி விடப்பட்டுள்ளது. நிலக்கரி இறக்குமதி தொடர்பாக நடவடிக்கை எடுத்துவரும் 'லங்கா கோல் கொம்பனி' என்ற மின்சார சபையின் உப நிறுவனம், இறக்குமதியாளருடன் இன்னமும் உடன்பாட்டிற்கு வர முடியாதிருப்பதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

## Sunday Observer

### சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம்

### அரசின் முக்கிய சேவை



சாட்சிகளையும், குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாக்கும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தத்தால் அவர்களுக்கு பெருஞ் சேவையொன்றை அரசு ஆற்றியுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

### நிறைவேற்று அதிகார முறைமை

### இன்றைய நிலைக்கு தேவையானது

சகலவிதமான சவால்களுக்கும் முகம் கொடுத்து நாடு அதீத அபிவிருத்திப் பாதையில் பயணிக்கும் இவ்வேளையில் நிறைவேற்று அதிகார முறைமை கட்டாயம் தேவையானது என தலையக மக்கள் முன்னணித் தலைவர் இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

### பல மில்லியன் ரூபா

### கருக்கலைப்பு மருந்துகள் கைப்பற்றப்பட்டது



2 மில்லியன் பெறுமதியான கருக்கலைப்பு மருந்துகள் உட்பட சட்ட விரேதமாக இறக்குமதி செய்யப்பட்ட பல மில்லியன் ரூபா மருந்துவகைகள் சர்வதேச விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன. 51 பொதிகளில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட இம் மருந்து வகைகளை இறக்குமதி செய்தவர் பதிவு செய்யப்படாத ஓர் இறக்குமதியாளர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

### பேரூந்துத் தரிப்பிடங்களுக்கு - 600மில்லியன்

நாடு முழுவதிலும் உள்ள பேரூந்துத் தரிப்பிடங்களை விருத்தி செய்வதற்காக அரசு சுமார் 600 மில்லியன்களை செலவிடவுள்ளது.

### CEB விரைவில் இலாபமீட்டும்!!

நுரைச்சோலை மின் நிலையத்தின் இறுதிப் பணிகள் பூர்த்தியடையும் நிலைக்கு வந்துள்ளதால் பணிகளின் பின் CEB இலாபமீட்டும் நிறுவனமாக மாறும் என அதன் முகாமைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

## வலைத்தளச் செய்திகள்

### ஹவீரு

### மாலைத்தீவு மக்களுக்கு மருத்துவ குறைப்பு

இலங்கை வைத்தியசாலைகளில் மாலைதீவு மக்களுக்கு வழங்கப்படும் வைத்திய சேவைகளிற்கான கட்டணங்களை குறைக்கும் படியான கோரிக்கையுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. மாலைதீவின் மீன்வளத்துறை அமைச்சர் கலாநிதி.மொஹமட் சைனி இலங்கையுடன் இவ்விடயம் தொடர்பாகப் பேசியிருப்பதை உறுதி செய்தார்.



### ஊவா பிரதி காவல்மா அதிபருக்கு கண்ணில்லையா??

### பவ்ரல் அமைப்பு கேள்வி

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு ஊவா மாகாண பிரதிக் காவல் மா அதிபருக்கு கண் இல்லையா? என கேள்வி எழுப்பியுள்ளது. ஊவாவில் இலக்கத் தகடற்ற வாகனங்கள் பயணிப்பது மற்றும் தேர்தல் செயற்பாட்டில் ஈடுபடுவது தொடர்பாக பவ்ரல் அமைப்பு மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து காவல் அதிபதி றொசான் பெர்ணான்டோ அவ்வாறு எவ்வாகனங்களும் பயணிக்கவில்லை என அறிக்கையிட்டிருந்தார். அதனையடுத்து புகைப்பட ஆதாரங்களை வெளியிட்டுள்ள அமைப்பு காவல் மா பிரதி அதிபதிக்கு கண்ணில்லையா என்று கேள்வி எழுப்பியுள்ளது.

## The Island

### பங்காளிக் கட்சிகள் அமைதி



மூன்றாவது தடவையாகவும் சனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான அரசியல மைப்புச் சட்டம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்கு அரசின் ஆறு பங்காளிக் கட்சிகள் தமது வாயை மூடி மௌனம் சாதித்து வருகின்றன. விமல் வீரவன்சவைத் தலைவராக கொண்ட தேசிய சுதந்திர முன்னணி மட்டுமே தமது கருத்தை வெளியிட்டுள்ளது.

## the Sunday Leader

### ஐ.நா வை எதிர்கொள்ளத் தயாராகும் இலங்கை

27வது ஐ.நா வின் மனித உரிமைக் கூட்டத் தொடரின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் அரசு தனது தரப்பைத் தயாராக்கியுள்ளது. இலங்கைக் குழுவிற்கு ஐ.நா விற்கான இலங்கையின் பிரதிநிதி ரவிநாத ஆரியசிங்க தலைமை யேற்றுச் செல்லவுள்ளார். செப்டம்பர் 24ம் திகதி இலங்கையின் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பான அறிக்கையை வாய்மொழி மூலம் சமர்ப்பிக்கவுள்ள மனித உரிமை ஆணையரின் சமர்ப்பிப்பை நோக்காகக் கொண்டு இலங்கைக் குழவின் எதிர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.




## Elections




### தேர்தல் குழு நியமிக்கப்படவுள்ளது

தேர்தல் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கும் விதமாக அவை தொடர்பாக ஆராய்வதற்கென ஆளும் மற்றும் எதிர்க்கட்சி சட்டத்தரணிகளைக் கொண்ட குழுவொன்றை அமைக்கவிருப்பதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தேர்தல் வரம்புகளை கருத்திற் கொண்டு தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விதமாக அரசியல் கட்சிகளை இக் குழு வழிநடத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சாட்சியமளிப்போர் தொடர்பில் பின்னரே நடவடிக்கை - கெஹலிய

இலங்கைக்கு எதிராக நடைபெறும் விசாரணையில் சாட்சியமளிப்பவர் தொடர்பாக என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஆராய்ந்த பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

'யாராவது சாட்சியமளித்தமை சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டால் அந்தச் சந்தர்ப்பத்தில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதனை எடுப்போம் என்றார் ஹெகலிய.

## the Mirror

### போரால் பாதிக்கப்பட்டவருக்கு உதவிகள் செய்யப்பட வேண்டும் - சி.வி



யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தமது வாழ்வை இழந்திருக்கும் மக்களுக்கு எம்மால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டிய கடமையுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.


முக்கியமானதாக விழிப் புலனற்றோர் தமது வாழ்நாள் முழுவதும் அதே கண்பார்வையற்ற நிலையிலேயே தொடர்ந்து வாழ்கின்றார்கள். அவர்களுக்கும் நிச்சயம் உதவிகள் வழங்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களுக்கான இந்தியாவின் செய்தி:

அரசியல் ஆய்வு

4தமிழ்மீடியா (www.tamilmedia.com)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் பலதரப்பினருக்குமான செய்திகளை கொண்டு வந்திருக்கிறது.

ஈழத்திலுள்ள தமிழ் மக்கள், தமிழ் அரசியற்கட்சிகள், இலங்கை அரசாங்கம், புலம்பெயர் தமிழர்கள் என்று எல்லோருக்குமான விசேட செய்திகளை நரேந்திர மோடி அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின் போது வெளியிட்டிருக்கிறது. அந்தச் செய்திகளில் அநேகமானவை இந்தியாவினால் ஏற்கனவே சொல்லப்பட்டதுதான்.

இலங்கையின் இனப்பிரச்சினைகளுக்கான தீர்வாக, 'இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தல் மற்றும் அதற்கு அப்பால் சென்று அதிகாரங்களைப் பகிரல்' என்கிற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோள்களை இந்திய மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதனை, கொஞ்சம் வலுவான குரலில் வெளியிட்டும் இருக்கிறது. இந்தியாவின் மீது நம்பிக்கை கொண்டிராதவர்களையும் அந்தக் குரல் ஈர்க்க வைத்திருக்கிறது.

இந்த இடத்தில் ஈழத்திலுள்ள தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் தனது அக்கறையை வெளியிட்டுள்ள இந்தியா, புலம்பெயர் தமிழர்களுக்கு கண்டிப்பான செய்தியொன்றையும் வெளியிட்டிருக்கிறது. அதாவது, புலம்பெயர் தமிழர்களிடமிருந்து வன்முறையை ஆதரிக்கும் கருத்து வெளிவராமல் பார்த்துக் கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தம்மிடம் வலியுறுத்தியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 'பிரிவினை' என்ற விடயத்தை இந்தியா என்றைக்குமே ஆதரிக்கவில்லை. அதற்கான முன்னெடுப்புக்கள் அல்லது முட்டுக்கொடுப்புக்கள் எங்கிருந்து ஆரம்பித்தாலும் அதனை இந்தியா வன்மையாக கண்டிக்கிறது அல்லது அதனை நிர்மூலமாக்க ஒத்துழைக்கிறது. இதன் பிரதிபலிப்பே இரா.சம்பந்தனிடம் மோடியால் சொல்லப்பட்ட புலம்பெயர் தமிழர்கள் குறித்த கருத்தும்.

நரேந்திர மோடி தலைமையிலான இந்தியாவின் புதிய மத்திய அரசாங்கம் பதவி ஏற்று சில மாதங்களுக்குள்ளேயே ஈழத்தமிழர்கள் தொடர்பிலான அக்கறையை வெளிப்படுத்தியிருக்கிறது என்று சில தரப்பினர் நம்புகிறார்கள். அதில், தப்பில்லைத்தான். ஆனால், அந்த அக்கறையில் தனது பிராந்திய ஆதிக்கம் மற்றும் ஆணை மனநிலை தங்கியிருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதன் வெளிப்பாடும், இலங்கையை தன்னுடைய கட்டுக்குள் வைத்துக் கொள்ளும் உத்தியுமே அதிகமாக வெளிப்படுகிறது. அந்த உத்தியின் பிரகாரம் ஈழத்தமிழர்கள் ஓரளவுக்கு சுதாகரித்துக் கொண்டு செயலாற்றினால் சில பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

புலம்பெயர் தமிழர்கள் மீது இந்தியா மிகுந்த எரிச்சலான மனநிலையை வெளியிட்டு வந்திருக்கிறது. அதற்கு காரணமும் இருக்கிறது. ஈழத்துக்கான ஆயுத போராட்டங்கள் ஒரு எல்லைக்கு அப்பால் புலம்பெயர் தமிழ் மக்களினால் குறிப்பிட்டளவில் வளர்க்கப்பட்டது. (அதிலுள்ள நன்மை தீமைகள் விவாதத்துக்குரியவை) தமிழீழ விடுதலைப் புலிகளின் கோலொச்சும் வளர்ச்சி என்பது புலம்பெயர் தமிழர்களின் குறிப்பிட்டளவு பங்களிப்போடே சாத்தியமானது. அப்படியான சூழலில் புலம்பெயர் தமிழர்கள் தொடர்பில் இந்தியா எரிச்சல் மனநிலையைக் கொண்டிருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

ஆனால், இதுவரை இந்தியாவின் பிரதமரொருவர் இவ்வளவு வெளிப்படையாக அல்லது கண்டிக்கும் மனநிலையோடு புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கவில்லை. அதனை, மோடி செய்திருக்கிறார். இந்தியா எப்போதுமே தன்னுடைய ஆணையை ஏற்று ஒத்திசையும் சக்திகளையே அரவணைத்து சென்றிருக்கிறது. அப்படியான சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இப்போது கொள்கிறது. அந்தச் சக்தியினூடு தன்னுடைய விமர்சனத்தை புலம்பெயர் தமிழர்கள் மீதும் விடுக்கலாம் என்ற யுக்தியை சரியாக கையாண்டிருக்கிறது.

இந்த இடத்தில் புலம்பெயர் தமிழர்கள் என்று இலங்கைக்கு வெளியிலுள்ள ஈழத்தமிழ்ப் பெரும் சமூகம் குறித்தும் பேச வேண்டி ஏற்படுகிறது. தமிழர்களுக்கு என்று தனிநாடு என்பது எல்லோருடைய கனவாகவும் இருந்தது. இப்போதும் இருக்கிறது. ஆனால், அந்தக் கனவை அடைவதற்கான சாத்தியம் என்பது சூன்யமாக இருக்கிற போது, ஏன் நாங்கள் சூன்யங்களின் மீது நம்பிக்கை கொண்டு, எமது உயிர்களையும், சொத்துக்களையும், உழைப்பையும் வீணடிக்க வேண்டும்?

உலகின் போக்கையும், அரசியலையும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இது, புலம்பெயர் தமிழர்களுக்கு மாத்திரமல்ல, இந்தியாவிலுள்ள உணர்ச்சியூட்டும் போராட்ட இயக்கங்களுக்குமான செய்தி தான். இந்தச் செய்தி ஏற்கனவே பல தடவைகள், பல தரப்பினரால் சொல்லப்பட்டு விட்டது. ஆனால், அதிலுள்ள நியாயத்தைப் புரிந்து கொள்வதில் தான் சிக்கலான மனநிலையை வெளிப்படுத்துகிறார்கள்.

இலங்கையில் பிரிவினை கோரி தனிநாடு அமைப்பது என்ற பேச்சுக்கு இடமில்லை என்பது யதார்த்தம். அந்த யதார்த்தத்தின் போக்கினை சகித்துக் கொள்ள முடியாவிட்டாலும், ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையிலேயே ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள். தனிநாடு இல்லாவிட்டாலும், எமது உரிமைகளைப் பெறுமளவிற்கான அதிகாரங்களை இறுதிவரை கோரி வென்றெடுக்க வேண்டியதே எம்முன் உள்ள பெரும் பொறுப்பு. அதனை, புலம்பெயர் தமிழர்களும் புரிந்து கொண்டு, அதன் போக்கில் தமது அரசியல், இராஜதந்திர போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

அதனைவிடுத்து, தனிநாடு என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டங்களை முன்னெடுக்கிற போது, அவை இலகுவாக மற்ற நாடுகளினால் புறந்தள்ளப்பட்டு விடும். ஆக, யதார்த்தம் என்பது பெருமெடுப்பில் உணரப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஈழத் தமிழர்கள் என்கிற சக்தி இரண்டு வடிவங்களைக் கொண்டிருக்கிறது. முதலாவது, இலங்கையிலுள்ள தமிழ் மக்கள். இரண்டாவது, புலம்பெயர் தமிழர்கள். இந்த இரண்டு வடிவங்களும் தமக்குள் இணக்கமான உறவைக் கொண்டிருக்க வேண்டிய தேவை எப்போதைக்கும் உண்டு. ஏனெனில், இரண்டு தரப்பினரும் இணையும் புள்ளியே எமது பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்த போராட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க வைக்கும். ஆக, ஒரு தரப்பினர், இன்னொரு தரப்பினரை எந்தவொரு தருணத்திலும் புறந்தள்ளிவிட முடியாது. ஆக, எல்லாவற்றையும் உணர்ந்து கொண்டு அடுத்த கட்டத்துக்கு செல்ல வேண்டியதே இப்போதுள்ள தேவை!

# சீனாவில் தங்கும் இலங்கையின் நிதி நிலைமை

2009 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை சீனாவிடமிருந்து 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றமை, இலங்கை சீனாவில் பெருமளவு தங்கியிருப்பதை எடுத்துக்காட்டுவதாக விமர்சகர்கள் எச்சரிக்கிறார்கள். இலங்கையின் புதிய விமான நிலையமாகிய மத்தளை ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்கு சீனா பண உதவியளித்தது. 2009 இல் யுத்தம் நிறைவடைந்ததிலிருந்து 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பணத்தை கடன்கள், கொடைகள் மற்றும் உதவிகளாக சீனாவிடமிருந்து பெற்று நிதி நிலையில் இலங்கை சீனாவில் தங்கியிருப்பது அதிகரித்து வருகிறது.

அரசாங்கம் கடனைப் பேணுவதன் மூலம் அதிகம் தேவைப்படுவதாக சொல்லி உட்கட்டமைப்புத் திட்டங்களை செயற்படுத்தி முடிக்க, எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் நாடு நிதிநிலையில் சீனாவில் தங்கியிருக்கும் பாதையை நோக்கி பயணித்துக்கொண்டிருப்பதாக எச்சரிக்கின்றனர்.

தெற்கு கடற்கரை நகரமான அம்பாந்தோட்டையிலுள்ள ஒரு ஆழ்கடல் துறைமுகம் மற்றும் மத்தளை சர்வதேச விமானநிலையம் போன்ற சுமார் 70 சதவீத இலங்கையின் உட்கட்டமைப்பு திட்டங்களிற்கு சீன வங்கிகள் நிதியுதவியளித்துள்ளன. "உலக வங்கி அல்லது சர்வதேச நாணய நிதியம் போல நிபந்தனைகள் விதிக்காது, சீன வங்கிகள் கடன் வழங்குகிறது" என எதிர்க்கட்சி அரசியல் வாதியான கர்ச டி சில்வா அல்ஜசீராவிற்கு கூறியதோடு நிபந்தனையற்ற உடனடிப்பணத்தை பெறுவதின் விருப்பத்திலேயே அரசாங்கம் நடத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

"சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கியின் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டியிருந்தால், பெரும்பாலான கடன்களிற்கு ஒப்புதல் கிடைக்காது" என மேலும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கைக்கு மிகப் பெரியளவில் கொடை வழங்கும் நாடாக ஜப்பான் இருக்கும் அதே வேளை இலங்கைக்கான சீனாவின் நிதிப்பங்களி ப்புக்கள் சமீபத்திய ஆண்டுகளில் வேகமாக அதிகரித்து ள்ளது.

சீனாவும் இலங்கையும் 1971 ஆம் ஆண்டிலிருந்தே நல்லுறவினைப் பேணி வருவதோடு அன்றிலிருந்து இன்று வரை 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை சீனா நிதியுதவியாக இலங்கைக்கு வழங்கியுள்ளது. ஆனால் 5 வருடங்களிற்கு முன்னர் (2009 இல்) இலங்கையரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான மோதல்கள் முடிவுக்கு வந்த பிற்பாடே பெருமளவான நிதி உதவிகளை சீனா வழங்கி வருகிறது. அரசாங்கம் சீனாவிற்கு முன்னுரிமையளிக்கின்றமையை மறுத்த இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, பல நாடுகளுடன் இலங்கை இருதரப்பு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றமையை சுட்டிக்காட்டினார்.

"இலங்கைக்கு மிகப்பெரியளவில் கடன் வழங்கும் நாடாக ஜப்பான் உள்ளது. நாங்கள் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பது தொடர்பாக டோக்கியோ மிட்சுபிசி வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டோம். எமது அபிவிருத்தித் திட்டங்களிற்கு நிதியுதவியளிக்கப்போகும் மற்றுமொரு நாடாக குவைத் உள்ளது. உடனடி கட்டுமான திட்டங்களில் இலங்கைக்கு உதவுவதில் சீனா முனைப்புடன் ஒப்பந்தங்களை எமது நாட்டுடன் செய்கின்றது", என யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

சீனா மிக உயர்ந்த வட்டி வீதங்களிலேயே கடனுதவிகளை வழங்குவதாக எதிர்க்கட்சி அரசியல் வாதியான டி சில்வா சுட்டிக்காட்டினார். "2014 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ஜப்பான், குவைத் மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் மூன்று முக்கிய முதலீட்டு திட்டங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஜப்பான் மற்றும் குவைத்தின் வட்டி விகிதங்கள் முறைய 0.1 மற்றும் 0.2 சதவீதமாக இருக்கையில், சீனாவின் வட்டி விகிதம் 3.0 சதவீதத்தை கடந்துள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### பொருளாதாரத்தில் சீனாவின் பங்கு

"நாங்கள் சீனாவில் இருந்து பெறப்பட்ட கடன்களைத் திருப்பி செலுத்துவதற்காக கடன் வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். அரசாங்கம் நம்ப வைப்பது போல சீனாவினால் நிதி உதவி செய்யப்பட்ட திட்டங்கள் பயனளிக்கவில்லை." என அரசாங்கத்தின் மோசமான பொருளாதார திட்டமிடலினை மேற்கோள்காட்டி அவர் மேலும் தெரிவித்தார்.

சீனாவிடம் இருந்து பெறப்பட்ட கடன்கள் வரத்தக விகிதத்தில் பெறப்பட்டதாக, அதாவது அதிக வட்டி விகிதத்தில் பெறப்பட்டதாகவும், கடன்கள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நாட்டிற்கு நாடு வேறுபடுவதாகவும் இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளரான எம்.எம்.சி.பெர்ணான்டோ அல்ஜசீராவிற்கு தெரிவித்தார். 209 மில்லியன் அமெரிக்க டொலர்களும் அதற்கான வட்டியுமாக செலவு செய்து புதிதாக கட்டப்பட்ட மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் 16,000 ரூபாய்கள் ($ 120) மட்டுமே வருவாயாக கடந்த வைகாசி மாதம் பெறப்பட்டது என சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன ஏற்றுக்கொண்டார்.

கட்டுமான வேலைகள் சீன நிறுவனங்களிற்கே சென்றதாகவும் எமது நாட்டை சேர்ந்தவர்களிற்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவில்லை எனவும், வேலை தொடங்கும் முன்பே சர்வதேச விமான சேவைகளுடன் ஒப்பந்தம் செய்யத் தவறியமையால் இந்த விமானநிலையம் மிக அருமையாகவே தொழிற்படுவதாகவும் கூறி மத்தள விமானநிலைய திட்டத்தை வி.டி.சில்வா விமர்சித்தார்.

இதற்கு, "இந்த விமானநிலையம் அதன் முழு சம்பாதிக்கும் திறனை அடைய நேரம் எடுக்கும்." என்று கூறி சிவில் விமான போக்குவரத்து அமைச்சரான ஜயரத்ன மறுதளித்து பேசினார்.

இலங்கைக்கு சீனா கடன்களை வழங்குவது தொடர்ந்து அதிகரிக்கையில் நிதி உதவி மற்றும் கொடைகள் வழங்கப்படுவது இந்தியாவுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியா இவ்வாறு 348 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி உதவி செய்துள்ளது.

இந்த இரண்டு தெற்கு ஆசிய நாடுகளுக்கு இடையேயான உறவுகள் ஊசலாடுகின்ற போதிலும், கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்தை எதிர்த்துப்போராடியவர்களும் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பினையுடையவர்களுமான தமிழ் மக்களிற்கு புனர்வாழ் வளிக்கப்படுவதற்கென இந்தியா நிதியுதவிகளை வழங்கி வருகின்றது.

இலங்கையின் சீனாவிற்கான ஏற்றுமதி 1.2 சதவீதமாகவே இருக்கையில், இந்தியாவிற்கான இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 1 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. அதே நேரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் 16 சதவீதம் சீனாவினுடையதாகும்.

நிதிநிலையில் இலங்கை சீனாவில் தங்கியிருப்பதால், இலங்கை சிறிய அளவையே பெறமுடியுமாயிருப்பதாகவும், ஆனால் இலங்கை அரசாங்கம் கவனமாக இல்லாவிடின் அதிகம் இழப்பதற்கு நேரிடும் எனவும் பெரேரா மேலும் எச்சரித்தார்.

இனியவன் (www.globaltamilnews.net)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வச்சாங்கய்யா ஆப்பு – ஊராருக்கு

...நாட்டு நடப்பு...

தேர்தல் காலங்களில் வன்செயல்கள் இடம்பெறுவது சகஜம். சிலர் தங்கள் கட்சியை சார்ந்த வேட்பாளர்களுக்காக உயிரையும் தியாகம் செய்ய பின்நிற்கமாட்டார்கள். தங்கள் குடும்பம், மனைவி, பிள்ளைகள் மற்றும் பெற்றோர், சகோதரர்களின் எதிர்காலத்தைப் பற்றிக் கூட யோசிக்க மாட்டார்கள்.

மகரகம மணிக்கூட்டு கோபுரத்தின் உச்சியில் தனது கட்சிக் கொடியை பறக்கவிடுவதற்காக அதில் ஏறிய போது மாற்றுக் கட்சிக்காரர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அந்த இடத்திலே விழுந்து துடிக்க, துடிக்க இறந்தவன்தான் நிமல்.

அவன் திருமணமாகி ஓரிரு மாதங்களுக்குள் தனது மனைவிக்கு அழகான பெண் குழந்தையொன்றை வாரிசாக கொடுத்து விட்டு



அகால மரணமானாலும் அவனது கட்சித் தலைப்பீடம் மாதாமாதம் அவனது குடும்பத்திற்கு ஒரு கணிசமான தொகையை வழங்க மறக்கவில்லை.

அவ்விதம் பல தியாகிகளின் குடும்பங்கள் நாடளாவிய ரீதியில் அக்கட்சியை சார்ந்தவர்களாக இருந்து வந்தனர். அக்கட்சி அவ்வாறான குடும்பங்களை என்றுமே கைவிடவில்லை. ஆட்சியில் இல்லாத காலங்களில் கூட அவ்விதமான குடும்ப உறுப்பினர்களுக்கு தொழில் வாய்ப்புத் தொடக்கம் சகல உதவிகளிலும் முன்னுரிமை வழங்கி வந்தது அக்கட்சி.

அன்று புலிகள் கூட தங்கள் இயக்க உறுப்பினர்களின் குடும்பங்களை போராளிகள் குடும்பமென பட்டியல்படுத்தி பல செல்வந்தர்களிடம் பணம் பெற்று அவர்களுக்கு உதவி புரிந்தது மாத்திரமல்ல சமூகத்தின் அடிப்படைத் தேவைகளிலும் அவ்விதமான குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கியதை இங்கு சுட்டிக்காட்டுதல் அவசியமானதே.

மகரகம நிமலின் அகாலமரணம் உண்மையில் அவனது கட்சிக்கு பாரிய இழப்பாக இருந்தது. இருப்பினும் அந்த வெற்றிடத்தை அவனது மனைவி நிரப்பியது மாத்திரமல்ல கட்சியின் முழுநேர உறுப்பினராகவும் செயல்பட்டார். மேலும் அவளின் மகளுக்கு கொழும்பில் நல்லதொரு கல்லூரியில் கல்வி கற்கும் வாய்ப்பைக் கூட அக் கட்சியே ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

காலம் சென்ற நிமலின் மனைவி அக்கட்சியின் மிக முக்கிய உறுப்பினராக செயல்பட்டாலும் அவளுக்கென்று சுயமாக ஒரு வருமானத்தை தேடிக் கொள்வதற்காக மகரகம பிரதான சந்தியிலுள்ள கடைத்தொகுதிகளில் ஒரு கடை காமறை யொன்றை அக்கட்சி அவளுக்கு பெற்றுக் கொடுத்திருந்தது.

அவள் அதில் பெண்களுக்கான நவீன ஆடைகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்து வந்தாள். அது மாத்திரமல்ல அயலிலுள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமை புரியும் பலருக்கு காலை, மதிய உணவுகளையும் விற்பனை செய்து வந்தாள். அதனூடாக அவள் அங்குள்ள ப... அறிய வாய்ப்பாக இருந்தது.

சில அலுவலர்கள் இரவு உணவுக்காக அவளின் வீட்டுக்குச் செல்வார்கள். வீட்டில் உணவு தயாரித்து வழங்கக்கூடிய ஒழுங்குகளையும் சிறப்பாக மேற்கொண்டு வந்தார். தற்பொழுது அவளின் மகள் வளர்ந்து பெரியவளாகி விட்டாள். அவளை எப்படியோ படிப்பித்து உயர்தரம் வரை சித்தி பெற வைத்துவிட்டாலும் பல்கலைக்கழகம் செல்லக் கூடிய அளவுக்கு புள்ளிகள் கிடைக்கவில்லை.

அங்கு நிமலின் மனைவி மேல் பலர் கருணை காட்டினாலும் இரவு நேரத்தில் உணவுக்காக அவளின் வீட்டுக்கு சென்றுவரும் மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளம் பணிப்பாளரொருவர் அவள் மேல் விசேட கருணை காட்டினார். அவளுக்கு ஆண் உதவி இல்லாததினால் அவளின் வீட்டு வேலைகளில் பல வேலைகளை அவரே முன்னின்று செய்து கொடுத்து வந்தார்.

மின்சாரம், நீர், வீட்டுவரி, கடைவரி போன்றவற்றுக்கான கட்டணங்களை உரிய அலுவலகங்களில் செலுத்துவதற்கும், வங்கி விடயங்கள் போன்றவற்றிலும் அவளுக்கு உதவிவந்தார். சுருக்கமாக கூறப்போனால் அவளின் கணவரான நிமல் அந்த வீட்டின் வேலைகளை கவனித்தது போன்று அவரும் அந்த குடும்பத்திற்கு உதவிகள் புரிந்து மிக நெருக்கமாகினார்.

அவர் நிமலின் மனைவியை விட வயதில் மிக குறைந்தவர். அவரின் சொந்த ஊர் புத்தளம். முதல் நியமனம் பெற்று இளைஞர் சேவை உத்தியோகத்தராக அவிஸ்சாவளையில் நீண்ட காலம் சிறப்பாக பணிபுரிந்ததால் அவருக்கு மகரகம தேசிய இளைஞர் சேவை மன்ற தலைமையகத்தில் கலாச்சாரப்பிரிவின் பணிப்பாளராக பதவி உயர்வு கிடைத்தது.

மகரகம தலையகத்தில் உடனடி சேவையின் நிமித்தம் தட்டெழுத்தாளர் பதவியை பெற்றுக்கொடுக்கும் படி கேட்கும் முன்னரே எப்படியோ பணிப்பாளர் தனது செல்வாக்கை பிரயோகித்து அவளின் மகளுக்கு அப்பதவியை பெற்றுக் கொடுத்திருந்தார்.

இது போன்று அந்தக் குடும்பத்திற்கு பணிப்பாளர் தேவையானவற்றை அவ்வப்போது செய்து கொடுத்தே வந்தார். தலைமையகத்தில் அவருக்கென்றே சகல வசதிகளைக் கொண்ட விடுதி இருந்தும் க்காலப்போக்கில் அவர் அவளின் வீட்டிலே நிரந்தரமாகத் தங்கிக் கொண்டார்.

அந்த வீட்டில் அவருக்கு சகல வசதிகளும் இருந்தன. அதனால் வழமையாக வார இறுதியில் அவரின் சொந்த ஊரான புத்தளத்திற்கு செல்வதைக் கூட அவர் மறந்தார். நிமலின் மனைவிக்கும் அவருக்கும் இடையிலுள்ள உறவை அங்குள்ளவர்கள் விமர்சிக்க தவறவில்லை.

சிலர் உண்மையில் அவளுக்கு ஓர் ஆணின் உதவி தேவை என்பதை ஏற்றுக்கொண்டாலும் கிசுகிசுப்பை விட்டுக் கொடுக்க முடியுமா என்ன? பணிப்பாளர் திருமணமாகாதவர் இளம் வயதை உடையவர். உத்தியோகத்தின் நிமித்தமே மகரகமைக்குச் சென்றவர். மேலும் அவருக்கு அங்குள்ள ஹொட்டல் சாப்பாடு உடலுக்கு ஒத்துவராத காரணத்தினால் நிமலின் மனைவியிடம் சென்று சாப்பிடத் தொடங்கினார்.

பலர் அந்த வீட்டுக்குச் சென்று வந்தாலும் சாப்பாட்டுடன் உறவை நிறுத்திக் கொண்டனர். அப் பகுதியில் மிகவும் துப்பரவாகவும், வாய்க்கு சுவையாகவும் சாப்பிடக்கூடிய இடம் அது ஒன்றே என்பதால் நிமலின் மனைவியின் சாப்பாடுகளுக்கு அங்கு மவுசு கூடியது. பணிப்பாளர் தனது சொந்த வீட்டையே மறந்து மகரகமவே தஞ்சம் என இருந்துவிட்டார்.

இருப்பினும் அவரின் வீட்டார் அவரை விட்டு வைப்பார்களா? எதற்கும் அவரிடம் பதில் இருந்தது. 'வேலை அதிகம்' என்று பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் அடிக்கடி பொய்யையே கூறி வருவார். பணிப்பாளர் அரசியலில் மாற்றுக் கட்சிக்காரராக இருந்தாலும் நிமலின் மனைவிக்காக தனது அரசியல் பாதையைக் கூட மாற்றிக் கொண்டார்.

சுருங்க கூறின் அவளுக்காக அவர் எதைச் செய்யவும் தயங்கவில்லை. அவளின் கட்சி நடவடிக்கைகளுக்கும் அவர் உதவியாக இருந்தார். அவள் எங்கும் அவருடனே அவரின் காரியே போய் வருவார்.

கட்சி வேலைகள், கடை வேலைகள், வீட்டு வேலைகள் என்று அவளுக்கு எக்கச்சக்கமான வேலைகள் குவிந்து கிடந்தாலும் பணிப்பாளர் அவளுடன் இருப்பதால் அவை அவளுக்கு பெரிதாக தோன்றவில்லை.

அவள் கேட்கும் அத்தனை உதவிகளையும் அவர் செய்து கொடுப்பதில் என்றுமே பின் நின்றதில்லை. இருந்தும் ஒரு நாள் அவள் அவரிடம் கேட்ட கேள்வி அவருக்கு மூச்சுத் திணறவைத்தது. அவரால் அந்த கேள்விக்கு உடனே பதில் செல்ல முடியவில்லை. உண்மையில் அவர் குழம்பிப் போனார். அந்த கேள்வி ஊடாக அவரிடம் ஒரு பெரிய உதவியை அவள் எதிர்பார்த்தாள்.

அவளும் அந்த முடிவை உடனே கூறும்படி கேட்கவில்லை. நன்றாக யோசித்து கூறும்படியே அவரை கேட்டுக்கொண்டாள். அவளுக்கு இன்று எந்தவித பொருளாதார கஷ்டமும் இல்லை. அவள் சார்ந்த கட்சி அவளை என்றுமே கைவிடவில்லை. அவளின் குடும்பத்திற்கு தேவையான அத்தனையையும் பெற்றுக் கொடுத்துக் கொண்டே வந்தது.

மேலும் மகரகம பகுதியில் வீடமைப்பு அதிகார சபையினால் நிறுவப்பட்ட நவீன மாடிவீட்டுத் திட்டத்தில் அவளுக்கும் வீடொன்றை வழங்கி இருந்தது. அக்கட்சி அந்த வீட்டை வழங்கியதன் நோக்கம் அவளது மகளின் எதிர்காலத்தை மிளிர வைப்பதற்காகவே.

நிமலின் மனைவி பணிப்பாளரிடம் கேட்ட அந்த கேள்விக்கு சுமார் ஒரு மாதத்திற்கு பின்னர் நல்லதொரு பதில் அவரிடமிருந்து கிடைத்தது. அந்த பதிலின் பலன் அவள் மனதில் இதுவரை இருந்துவந்த பெரியதொரு சுமையை இறக்கிவைக்க உதவியது.

பணிப்பாளரின் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் ஆகியோரின் பூரண சம்மதத்துடன் மங்களகரமான நிகழ்வு ஒன்று அங்கு இடம்பெற்றது. ஊராரின் கிசுகிசுப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாலும் ஊரார் எதிர்பார்த்தது அங்கு நிகழாததால் கிசுகிசுப்பு திசை மாறிச் சென்றது.

அங்கு இடம்பெற்ற அந்த மங்களகரமான நிகழ்வின் ஊடாக நிமலின் மனைவி பணிப்பாளருக்கு



மாமியானார். புதுத் தம்பதிகள் மகரகம நவீன மாடிவீட்டில் தம் புதிய வாழ்க்கையை ஆரம்பித்தனர். பணிப்பாளர் இளம் வயதைக் கொண்டவராக இருந்ததால் அவளின் மகளுக்கு அவர் மிகவும் பொருத்தமான கணவராக காணப்பட்டார்.

– பாலையூற்றான் –




## ஏன் இந்த கொலவெறி



சீனாவில் பல மில்லியன் டாலர் செலவில் புதிய சாலை ஒன்று அமைக்கப்பட்டது. அந்த சாலைக்காக அந்த பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் தகுந்த நஷ்ட ஈடு கொடுத்து காலி செய்யப்பட்டன. ஆனால் 72 வயது Ye Tan, மற்றும் அவரது மனைவி, ஆகியோர்களுக்கு சொந்தமான பண்ணை வீடு ஒன்று சாலையின் நடுவில் அமைந்துள்ளது. இந்த பண்ணை வீட்டை தேசிய நெடுஞ்சாலை துறையினர் எவ்வளவோ மன்றாடி கேட்டும் அந்த தம்பதியினர் விற்க முன்வரவில்லை.

## என்ன கொடுமையடா



வீட்டுப்பாடங்களை எழுதாததால் தன்னுடைய தாயார் கொடுக்கும் தண்டனையில் இருந்த தப்ப சீனாவை சேர்ந்த 12 வயது சிறுவன் ஒருவன் 11வது மாடியில் உள்ள ஜன்னலை திறந்து வெளியே சென்று ஒளிந்து கொண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சீனாவின் மீட்புப்படையினர் இரண்டு மணிநேரம் போராடி சிறுவனை மீட்டனர்.

## அதிஷ்டம் கதவை தட்டியது



இத்தாலியைச் சேர்ந்த தொழிலதிபர் டி பியான்கோ. இவர் தனது காதலிக்கு ஹொட்டலில் விருந்தளிப்பதற்காக சென்றுள்ளார். தங்களுக்கு பரிமாறப்பட்ட உணவினில் மொத்தம் 5 முத்துகள் இருந்தன. இதன் மதிப்பு ரூ1.5 லட்சம் இதையடுத்து ஹொட்டலுக்கு பில்லை செலுத்திவிட்டு, முத்துகளுடன் டி பியான்கோ வீடு திரும்பியுள்ளார்.

## குளிர்சாதன பெட்டியில் கூலாக இருந்த சிங்கம்

பிரித்தானியாவின் மேற்கு சசெக்ஸ் நகரில் விலங்கியல் பூங்கா ஒன்றின் அருகில் உள்ள உணவகத்தின் குளிர்சாதன பெட்டியில் இறந்த சிங்கம் ஒன்று இருந்துள்ளது. இந்நிலையில் உணவகத்தை மேற்பார்வையிட வந்த சுகாதார துறை அதிகாரிகள் இறந்த நிலையில் சிங்கம் குளிர்சாதன பெட்டியில் வைக்கப்பட்டிருப்பதை பார்த்து அதிர்ந்துள்ளனர். இதனையடுத்து இந்நபர் மீது நடவடிக்கை எடுத்த அதிகாரிகள் உணவகத்தை மூடுமாறு உத்தரவிட்டுள்ளனர்.

## இப்படியும் நடக்கலாமா!!

வடமேற்கு சீனாவில் Qian என்ற 20 வயது கல்லூரி மாணவி அங்குள்ள ஒரு ரெஸ்டாரெண்டில் தனது காதலனுடன் சாப்பிட வந்தார். ஆர்டர் செய்த உணவு சூடாக இல்லை என்று வெயிட்டரிடம் அவர் புகார் கூறியதால் பெண் வெயிட்டர் அவருடைய உணவை சூடுபடுத்த அவரது டேபிளுக்கு அருகிலேயே சூடுபடுத்தும் கருவியை எடுத்து வந்து அவரது உணவை சூடுபடுத்தினார். அப்போது அந்த கருவிக்கு எரிபொருளை அந்த பெண் வெயிட்டர் ஊற்றிய வேளை திடீரென எதிர்பாராத நிலையில் எரிபொருளில் தீப்பிடித்தது. இதனால் பதட்டமடைந்த பெண் வெயிட்டர் அந்த எரிபொருள் பாட்டிலை சாப்பிட்டுக் கொண்டிருந்த Qian மீது பதட்டத்தில் வீசியெறிந்துவிட்டு தப்பியோடிவிட்டார்.

இதனால் உடல் முழுவதும் தீப்பிடித்து எரிந்து தற்போது ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## 2தாய், 1தந்தை

இங்கிலாந்தில் ஒரு தந்தை, இரு தாய்க்கு பிறக்கும் குழந்தையை சட்டப்பூர்வமாக அனுமதிக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக விரைவில் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தி சட்டம் நிறைவேற்றப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி தொடர்கதை

பாதசாரி

காசி கல்யாணம் முடித்து ஒரு வருடம் கூட வாழவில்லை. இரண்டாவது மாதம் ஒரு நாள் மாலையில் கிராமத்து தோட்டத்து வாசலில் வந்து நின்றான். நாமிருவரும் தான் நின்றிருந்தோம்.

அரைக்கிலோ முந்திரிக் கேக்குக்கு உங்க எந்த கவிதைப் புத்தகத்தைக் கொடுக்க என்று கேட்கிறார் மாமனார். கவிதைப் புத்தகங்களை எடைக்குப் போட்டுவிட்டு மூளையை யூஸ் பண்ணி ஏதாச்சும் உழைக்கிற வழியைப் பார் என்கிறார். எனக்கு கடுப்பாகுதுடா! போதாததுக்கு வீட்டோட மாப்பிள்ளையா இருக்கட்டாம். எங்க குடும்பம் நடுத்தர குடும்பம் என்பதால் தன் மகள் கஷ்டப்படுவாளாம். வேணுமென்றால் என் தந்தையையும் வந்திருக்கட்டாம். ஏற்கனவே மூவருக்கு இரண்டு வேலைக்காரர்கள் இருக்கின்றனர். பத்தாததுக்கு இன்னும் 2 பேர் வேணுமாம்.

ஏன் காசி அப்படி நினைக்காறாய்?

இது கூட பரவாயில்ல டா. இவள் என்னைப் படுத்தும் பாடு!! ஒவ்வொரு நாளும் பீச், சினிமா



என்று எங்காவது கூட்டிச் செல்ல வேண்டும். ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போக வேண்டும்.

இது தான் அவளுக்குத் தெரிந்த உலகம். இதுவரை ஒரு லிப் கிஸ் கொடுக்க விடவில்லை. ஏனென்றால் கிளாமர் குறைந்து விடுமாம். என்னால முடியல்லடா குணா. மறுபடியும் என் பழைய பிரச்சினை கிளம்பிருச்சுடா. அவங்க கௌரவத்துக்கு ஈடுகட்ட என்னால முடியல்லடா. நீ ஏதாச்சும் வேலைக்குப் போன்னு அக்கா அக்கறையா சொன்னாள். இருந்த கோபம் எல்லாத்தையும் அக்காவின் மீது காட்டிவிட்டேன். எனக்கோ குற்ற உணர்வு. பக்கட் பக்கட்டாக சிகரெட் புகையானது.

பின்னர் இரு மாதங்களாக அவனைப் பற்றிய தகவல் இல்லை.

பின் எம் இன்னொரு நண்பன் எழுதித்தான் தெரியவந்தது. காசி மீண்டும் கண்ட கண்ட தூக்க மாத்திரைகள் பாவிக்கத் தொடங்ககி விட்டான். பாதி நடிப்பு, மீதி பைத்தியமென திரிகின்றானாம்.

மாமனாரின் பெயரில் இருந்த ஸ்கூட்டரை வேண்டுமென்றே சுவரில் மோதிவிட்டான். மாமனார் விடுவாரா? போதை மாத்திரை அடிமை என செருப்பால் அடிக்கப் போய்விட்டாராம். திடீரென ஒரு நாள் இனி நல்லபடி இருப்பேன் எனக் கூறி அந்த அழகான உதடுகளுக்கு ஐஸ்கிறீம், புதுப்படம், ஸ்கூட்டர் பவனி என ஒரே மாற்றம் தான்.

மீண்டும் காசி தூக்க மாத்திரைகளை விழுங்கிவிட்டான். ஆத்மார்த்தமான தற்கொலை முயற்சி. கடிதம் வேறு எழுதி வைத்துவிட்டு கட்டிலிலேறினான். கதவைத் தாளிட்டிருந்தான். நம்பிக்கையோடு கண்களை மூடிக் கொண்டான். அடுத்த நாள் காலையில் கண்கள் தன்னை ஏமாற்றி விழித்துக் கொண்டதை உணர்ந்தான். ஆத்மார்த்தத்தின் ஏமாற்றம். ஆவெசம் தாங்காமல் கையில் சவர பிளேட்.... இரண்டு வாரங்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான்.

நானும் சென்றேன். இலக்கியமாக எவ்வளவோ நல்ல நல்ல புத்தகங்கள் படித்தும் காசி இவ்வளவு துன்பப்பட்டானே ஏன்!

பின் வீடு வந்ததும் நல்ல பிள்ளை போல் இருந்தான். ஒரு மாதத்தில் எனக்கு நான்கு கடிதங்களாயினும் அனுப்பி விடுவான். விளைவுகள் பற்றி அஞ்சாத காசியின் ஓட்டை வாய் தான் அவனது பலவீனம். இளங்கவியுடன் மிகுந்த நட்புறவு கொண்டிருந்தான். அவனது நாட்கள் மிகவும் களிப்புடன் இலக்கியங்கள் பற்றிப் பேசுவதிலேயே இளங்கவியுடன் கரைந்தன. இருப்பினும் திடீரென ஒரு கெட்ட தருணத்தில் அவனது நட்பு காசிக்கு இல்லாமல் போனது.

பின் ஒன்றரை வருடங்கள் அவனுடன் எனக்குத் தொடர்பில்லாமல் இருந்தது. ஒரு நாள் அவனை சாலை ஓரம் சந்தித்தேன். மிகுந்த சந்தோசத்தில் இருந்தான். என்னடா என்று கேட்டதற்கு, இருமனமொப்பிய திருமண விலக்கு கிடைத்து விட்டதாகச் சொன்னான். இதில் சிறு அதிர்ச்சியோ, சந்தோசமோ எனக்கு ஏற்படவில்லை. பின் ஒரு விசிட்டிங் காட் எடுத்து நீட்டினான். மார்க்கெட்டிங் டைரெக்டர்! அடேயப்பா! எனக்கு மிகுந்த சந்தோசமாய் இருந்தது. எப்படியோ ஒரே தொழிலில் தன்னை இணைத்துக் கொண்டிருந்தான். எப்படி இதெல்லாம் என்று உற்சாகமாக வினவினேன்.

அது... அது அப்படித்தான்டா! என்றான். கேட்கவும், சொல்லவும் நிறைய இருந்தும் இருவருக்கும் இடையில் என்னவோ சிறு தயக்கம் நின்றிருந்தது. சிகரெட்டை நீட்டினான். நிறுத்தியாச்சு, எப்பாலும் இருந்திட்டுத் தான் என்றேன். பீறிட்டுச் சிரித்தான்.

ஏன்டா காசி இப்படி சிரிக்கிறாய்?

நான் போன வாரம் ஒரு நாவல் படித்தேன். அதில் சிகரெட்டை நிறுத்துவதற்கு எவ்வளவெல்லாம் கஷ்டப்படுறாங்க என்று தான் 20 பக்கமு....

நான் என்ட பழைய காசியை பார்த்துவிட்டேன், என்றேன். புன்னகையுடன் தான் இன்னும் முற்றிலும் மாறிவிட்டதாக நினைத்துவிட வேண்டாம் என்று சற்றே நெகிழ்ச்சியாக கூறினான்.

ஒரு பெண்கள் கல்லூரியில் வேலை பார்த்து வந்த இளம் பௌதீகத் துணை பேராசிரியரின் அண்ணனின் நண்பன் எனக்கு நண்பனானான். அவள் ஒரு தேவதைடா. என்ன சிறுவயதிலேயே கணவனைப் பறி கொடுத்துவிட்டாள். ஒரு பெண் குழந்தை வேறு உள்ளது. ஹாஸ்டலில் தான் இருக்கிறாள். என்னுடைய விருப்பத்தை நான்கு முறை கடிதத்தில் கேட்டேன். 4 முறையும் கடிதம் வார்டனின் கையில் அகப்பட்டுவிட்டது.

அப்புறம் என்னாச்சு!!

அப்புறம் என்ன? என் நண்பன் வந்து ஆங்கில கெட்ட வார்த்தைகளில் திட்டிவிட்டு, அவளது அண்ணனிடம் போட்டுக் கொடுத்து விடுவதாக மிரட்டிவிட்டுப் போனான். மூன்று நாட்களாக தொடர்ந்து அப்பெண் அழுது கொண்டே இருப்பதாகவும் கூறினான். ஒரு மாதங் கழித்து அவள் கல்லூரிக்குச் சென்று காலில் விழாத குறையாக மன்னிப்புக் கோட்டுவிட்டு வந்தேன். என்னதான் மன்னிப்புக் கேட்டாலும் தன் உடம்புக்குள் இரத்த ஓட்டத்தில் ஒரு உடையாத குமிழியாக அவள் நினைவுகள் ஓடிக் கொண்டே இருப்பதானது காவிய சோகம் என்றான்.

இன்னமும் பெண்கள் விஷயத்தைத் தவிர ஏனைய அனைத்திலும் தேறிவிட்டான் என்பது அவனது பேச்சிலே தெரிந்தது. ஆனாலும், தனக்கு கல்யாண ஆசை இம்சிக்கிறது இன்னும் என்றான். தனிமை, துவைத்தல், ஹோட்டல் இவைகளையும் திருமணத்திற்கான சாக்குகளில் ஒன்றாக வைத்து யோசிப்பதில் தவறுண்டா என்று என்னிடம் ஒரு சிறுவனைப் போல கேட்டான். சில நாட்கள் கழிவதைப் போல தன் வாழ்க்கைக்கு ஊட்டம் சேகரித்துக் கொள்வதாகக் கூறினான்.

தன் அப்பா இறந்த பிறகும் தான் வாழ்க்கையை தொடரலாம் என்கின்ற நம்பிக்கை சிறுக சிறுக என்னுள் துளிர் விடுவதாக சொன்னான். தன்னுள் உருவாகும் நம்பிக்கை தன்னை வாழச் சொல்வதாகவும் தனக்கென்று ஒரு எதிர்காலம் இருப்பதாக தான் எண்ணுவதாகவும் தன்னுள் ஏதொ ஒரு புத்துணர்வு ஏற்படுவதா கவும் கூறினான்.



அவனுள் ஏற்பட்ட இம்மாற்றத்திற்கான காரணம் தான் எனக்குப் புரியவில்லை என்னைப் பொறுத்தளவில் பழைய காசி எப்போதோ இறந்து விட்டான்.

முற்றும்.. .. ..

---

# இனி எப்போதும் விடியாதா!!

செங்கல் சுமந்து சாலையைக் கடந்தான் சிறுவன். சுவற்றைப் பார்த்து சிரித்தான் - சுவற்றில் "இளமையில் கல்" வாசகம். - கபிலன் வைரமுத்து

சிவந்த வானம் விடியலை கரைத்துக் கொண்டிருந்தது. பசுமை மறந்து போன கிராமத்தில் கழுவிய நீரில் முளைத்துப் போன புற்களின் பனித்துளிகள் லேசாய் சிணுங்கி மறைந்தன. பரபரப்பில் ஆட்பட்டு கிடந்தது கிராமம். தினமும் உண்டாகிற பரபரப்புகள். வேலைக்குப் போகிற அவசரம். ஏழு மணிக்கெல்லாம் பட்டாசுத் தொழிற்சாலை பஸ் வந்துடுமாம்.

சுந்தரம் டேய்! சுந்தரம் எழுந்திருடா! மணி ஆறரை ஆகப்போகுது இன்னும் என்ன தூக்கம் வேண்டிக்கிடக்கு. பாயில் புரண்டவனுக்கு போகிற போக்கில் ஒரு உதை விழுந்தது. அரக்கப் பரக்கப் எழுந்தவன் எப்போதும் போல முகத்தை மட்டும் கழுவிக் கொண்டு சாப்பாட்டுத் தட்டில் கண் விழித்தான். அரைகுறை கஞ்சியோடு, ஏழு மணி பஸ் வந்து நின்றதில் ஓடிப்போய் பஸ் பிடித்தான். இங்கிருந்து நாலு மைலாம் பட்டாசுத் தொழிற்சாலை, ஏழரை மணிக்கெல்லாம் பட்டாசு வாசனையை நுகர ஆரம்பித்தது பஸ்.

எப்போதும் சோர்வாய் இருப்பவனுக்குள் அன்று மட்டும் என்னவோ வழக்கத்திற்கு மாறான சுறுசுறுப்பு. அன்று மட்டும் அரை நேரம் லீவு போட்டுவிட்டு ஜாலியாய் ஊர் சுற்றினான். பஸ்ஸிற்கு கூட காத்திருக்க மறுத்தவனுக்குள் புது வேகம். வீட்டிற்கு வர ஓட்டமும் நடையும் தான். மகிழ்ச்சி தலைகால் புரியாமல் திரிஞ்சான் சுந்தரம். என்னடா! திடீர்னு இவ்வளவு கொண்டாட்டம். நண்பர்கள் சூழ்ந்து கொண்டு கேட்க. "அது ஒன்றுமில்லை போனவாரம் வந்து நம் ஊருக்கு "சிறுவர் சீர்திருத்த பள்ளி" கட்டிக் கொடுக்க வந்தாங்கல்ல அவுங்க இன்னிக்கு வந்து ஏதோ கம்பியெல்லாம் ஊனி அளவெடுத்துக்கிட்டு போனாங்க. நாளைல இருந்து வேலை ஆரம்பமாம். இன்னும் மூணு மாசத்துல வேலை முடிஞ்சிடும்னாங்க. க்கூம்.... இதுதானா என்கிற முனுமுனுப்பும் சலிப்புமாய் எல்லோரும் திக்கு கண்ட பக்கம் ஓடினார்கள். சுந்தரம் நீ வரல? சுந்தரத்திற்கு மனம் லேசாய் கனத்தது. நான் விளையாட வரல. நீங்க வேணா விளையாடிட்டு வாங்க. மேட்டுலேயே உட்கார்ந்திருந்தான். தண்ணீர் என்னவோ வித்தியாசமாய் இருப்பதை போல அதையே உற்றுப் பார்த்தான். ஏன் இவங்களெல்லாம் ஆர்வமில்லாம இருக்காங்க என்பது போல மனம் கேள்வி கேட்க தோணியது.

நல்லா வயசுக்கேத்த உயரம். பன்னிரெண்டு வயசு. ஆறு வயசுல வேலைக்குப் போனவன் பனங்கொட்டை சூப்பிய தலை. எண்ணெய் செக்குல தலையை விட்டா எண்ணெய் மிச்சம் இருக்காது. ஆறு வயசுல இந்த பட்டாசுத் தொழிற்சாலையில் அம்மா சேர்த்து விட்டா, இன்னிக்கு வரைக்கும் அதே வேலைதான். வேலை மேல அவ்வளவு வெறுப்பு இருந்தாலும் விட முடியலையேங்கிற தவிப்பு. அம்மாவிடம் அடிக்கடி சொல்லி இருப்பான். அடி மட்டும் தான் மிஞ்சும். கை ஒருநாள் கூட வெள்ளையா இருந்ததே இல்ல. தினமும் ஜெலட்டினால் கருகிப் போன கை.

இந்த முறை உறுதியான தீர்மானம், எப்படியும் வேலைய விட்டுட்டு பள்ளிக்கூடம் போகப் போறோம்ங்கிற எண்ணம். அதுதான் பட்டாசுத் தொழிற்சாலையையே எடுக்கப் போறாங்கல்ல அப்புறம் எங்க வேலை இருக்கும் என்கிற நினைப்பு, மேலோங்கிய உயர்வோடு மனசுக்குள் என்னவோ புதுசு புதுசா கனவுக் கோட்டை. இதுவரைக்கும் ஜெலட்டின் குச்சி புடிச்ச கை இனி சிலேட்டுப் பென்சில பிடிக்கப் போகுதுங்கற சந்தோஷம்.

அப்பா விட்ட வேலையாம் ஐந்து வயசு இருக்கறப்போ ஒருநாள் இரத்தங் கக்கிக்கிட்டே வீட்டுக்கு வந்தாரு. ஆஸ்பத்திரிக்கெல்லாம் போனாங்க. ஏதோ டி.பி. நோயாம். அடிக்கடி இருமுவாரு. [illegible] இருக்கும். சிலசமயம் நான்கூட கைத்தாங்கலா புடிச்சிருக்கேன். ஒருவாரம் ஆஸ்பத்திரி போனாரு சரியாய்ப் போச்சுனு சொல்லிட்டு மறுபடியும் வேலைக்குப் போனாரு வேலை நேரத்துல அடிக்கடி பீடி குடிப்பாறாம். ஒருநாள் திடீர்னு மறுபடியும் இரத்தம் கக்கினாராம். அப்படியே கண் சொருகி கீழே விழுந்தவரு "என் மகனை காப்பாத்தீருங்கன்னு" சொல்லிக்கிட்டே செத்துப் போயிட்டாராம். அம்மா அழுது புலம்பினா, பிஞ்ச கைல கொடுத்துட்டு மகராசனா போயிட்டியே! மனசுக்குள்ள சோகம். அதைவிட அம்மா அழறதப் பார்க்கறப்போ அழனும்போல தோணிச்சு.

அப்பா செத்ததுக்கப்புறம் ஒரு வருஷம் கழிச்சு என்னை அனுப்பிச்சா இந்த வேலைக்கு. இன்னிக்கு வரைக்கும் வேலை பிடிச்சுப் போகல. குடும்ப வறுமைன்னு வேற வேலை பார்க்க வேண்டியதா இருந்தது. இனிமே நல்லா படிக்கலாம். நல்ல உத்தியோகத்துக்கும் போலாங்கிற கனவு. ரொம்ப நாளா நினைச்சுக்கிட்டு இருந்த இந்த நிறைவேறா கனவு நிறைவேறுதேங்கிற சந்தோஷம்.

யார்க்கிட்டயும் சொல்லவே இல்லை. எழுந்து வேகமாய் ஓடினான் வீட்டிற்கு. ஓடினவன் வீட்டிற்குள் கேரளத்திலிருக்கும் மாமா வந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியோடு மகிழ்ச்சியாய் துள்ளினான். மாமா கொண்டு வந்த புதுச் சட்டையை மாட்டி மாட்டிப்பார்த்தான்.

எலே! சுந்தரம் நல்லா குளிச்சுக்கிட்டு ரெடியா இரு. இன்னிக்கு நைட்டு நீ கேரளாப் போற. அங்க ஒரு நாயர் கடையில டீ டம்ளரு கழுவுற வேலையாம். மாசம் சாப்பாட்டோட ஆயிரம் ரூபா சம்பளமாம்.

போனவாரமே நம்ம பட்டாசு தொழிற்சாலைய எடுக்கறதா பேசிக்கிட்டாங்கல்ல இன்னும் மூணு மாசத்துல காலியாம். மனம் வெயில் பட்ட புழுபோல் துடித்தது. முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது. ஏதோ! இடிவந்து விழுந்ததுபோல் சலனமில்லாமல் நிசப்தமானான். இதயம் சுக்கு நூறாய் சிதைந்தது.

ஏலேய்! என்று அம்மா அதட்ட அவ்வளவுதான் சீக்கிரமாய் ஓடி புறப்பட்டான் கண்களில் கண்ணீரோடு. இனி, இந்த பிஞ்சுக் கண்கள் வெளிச்சத்தை தேடிக் கொண்டே இருக்கும். அது என்றுமே எட்டாத தூரத்தில்.

நன்றி - தமிழ் கூடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## நீ... காற்று ... நான் ...

விழி நீளும் முடிவுவரைத்
தொடரும் தெரு வழியே
நடந்து போகின்றேன் - நான்

முகத்தை எதிர்கொள்ளும் காற்று
மற்றோர் திசையில்
தோள்களை வருடும்.
சுகம் பரப்பும்
தேகமெங்கும். . .

நீயும் காற்றுத்தான்

நம் காதலின் தெருவழியே
முடிவின்றித் தொடரும்
என் கால்கள் . . . . நீ
காற்றாய் தொடுகிறாய் என்னை
முகம் மோதும் காற்று
நாம் முத்தமிட்டதை
உணர்த்தும். . . இதழ்களில்
ஈரம் கசிக்கும் . .

சிலவேளை வியர்வையூறி
உப்புக்கசிந்துவர்த்த எம் முத்தம்
காற்றும் இதழ் மோதித் தரும்

நாக்கால் நிமிண்ட
உவர்க்கும் இதழ். . .

காற்றாய் நீ. . .

இரு கையின் ஐவிரலும்
தோள்களை பற்றிப்
பிடித்திழுத்து இறுக்கிப் பின்
பிடரியிற் பிரலும் உன் விரல்கள்

காற்றும் . . உன் கைவிரலும்
என் காதைத் தொட்டுச்
செய்யும் சில்மிசங்கள்

காற்றே நீதான்

என் மூச்சாய் உட்சென்றுயிராய்
மாறும்
என் காற்றே நீதான்.

கோபம் கொள்ளக்
காற்றும் குணம் மாறும் . . . .

தடாலென முகமறையும்
விழி முன்னே அங்கிங்காய்
அலையும். .

சினம் கொள்ளும்

உடல் நோகப் பலமுறை
உருட்டும்

நான் நடந்தேகும்
தெருவைத் தடுக்கும்

உன்னைப்போல்தான்
காற்றும். .

சினம் கொள்ளும்

முகமறையும் வார்த்தைகளால்
வெறிகொண்டு நீ
வலி வரக் கொல்வாய்
எனை – முகமறையும் வார்த்தைகளால்

பின் என் முன்னலைவாய்
அங்கிங்காய் . . . .

அழுவாய் . . . .
எம் காதல் வழி மறைப்பாய்
தடம் மாறும் வண்ணம்
சினங்கொள்வாய். . .

சமாதானம் சொல்லிப்
பின்னும்
அழுவாய்

என் பெண்ணே
காற்றைப் போல் நீயும். .

அழுது...
அலைக்கழித்து. .
அழவைத்துப்
போய்விட்டாய். .

காற்றை என்னுடன்
வாழவிட்டு . . .

## குறி

குறி வைத்து
சில கற்களை
எறிவதற்காய்
கைகளில்
சில கற்களை
எடுத்துக் கொண்டவர்கள்

தமது
நோக்கத்திற் கேற்றாற் போல்
சில கற்களை
குறிவைத்தார்கள்

பக்கமாக
நேராக
கண்ணெதிரே
தெளிவாக
தமது கருத்தியலை
வைத்து எறிந்தார்கள்

குறி தவறிப்பட்ட
கற்களிலும்
தமது பார்வையை
திருப்பியவாறு கூறினார்கள்

குறி வைக்கப்படாத அலையும்
தம்மால் குறி வைக்கப்பட்டவை
என்று

– தி.பவித்ரன் –
[நூல் - ஊசி இடல்]



# கவிதையுலகின் சூரியன் பாரதி நினைவு நாள் சிறப்பு பகிர்வு

தமிழ் நிலத்தில் ஈரம் பாய்ச்சி வீரம் விதைத்த சொல் உழவன். மண்ணுள்ள காலம் வரை மறக்க முடியாத கவிஞன். மக்கள் மனங்களில் வாழும் ஒருவன். இளம் வயதில் அம்மாவின் பாசம் என்னவென்று தெரியாமல் அப்பாவின் வளர்ப்பில் வளர்ந்த அவருக்கு அப்பொழுது கணக்கு என்றால் பிணக்கு. இது வெகு காலத்துக்கு கல்விமுறையின் மீது வெறுப்பாகவே மாறியது. ஒரு சிறுவன் இளமையில் கல் என்று ஓயாமல் மனனம் செய்து சொல்லிக்கொண்டு இருந்த பொழுது 'முதுமையில் மண்' என்று சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தார் இவர்.



அற்புதமான கவிதையாற்றல் பாரதி எனும் கலைவாணியை குறிக்கும் பட்டத்தை தந்தது. பாரதி சின்னப்பயல் என்று கவிதை பாட சொல்ல பார் அதி சின்னப்பயல் என எள்ளல் குறையாமல் பாடியது பாரதி தான். இளம் வயதில் பாரதிக்கு ஒரு காதல் இருந்தது. அந்த பெண்ணை சகுந்தலை என்று அடையாளமிட்டு குறிக்கிறார். தன் மகளுக்கு அதே பெயரை வைத்தார் அவர்.

மதுரை தமிழ் சங்கம் நடத்திய போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது அவரின் கவிதை. அந்தக்கவிதை தான் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே'. எக்கச்சக்க வறுமையிலும் குருவிக்கு தானியங்களை கொடுத்துவிட்டு சிரித்த நேசிப்பாளன். வாட்டிய பசியிலும், "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!" என்று பாடிய பெருங்கவிஞன் அவன்.

நாட்டை தட்டி எழுப்ப கவிதை எழுதிய அந்த சிந்துக்கு தந்தை எப்பொழுதும் தாலாட்டு மட்டும் பாடியதே இல்லை. நாடு உறங்க இது தருணமன்று என்கிற எண்ணமே காரணம். பாரதியும் பாரதிதாசனும் சேர்ந்து ஒருநாள் அடுப்பு பற்ற வைத்தார்கள். அடுப்பு பற்றவே இல்லையாம். சமையல் செய்யப் பெண்கள் எவ்வளவு துன்புறுகிறார்கள் என்பதை உணர்ந்து பெண்கள் வாழ்கவென்று கூத்திடுவோமடா' என்ற பாட்டை அன்று தான் எழுதினார் பாரதி.

'கடமை அறியோம் தொழில் அறியோம் !" என்று பறவையின் மனப்பான்மையிலும், 'தீக்குள் விரலை வைத்தால் நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா' என்றும் பாரதியால் தான் பாட முடியும் வறுமையில் வாடிப்போன அவர் "பராசக்தி! இந்த உலகின் ஆன்மா நீ. உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள்தோறும் உன்மீது பாட்டுப் பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களையெல்லாம் கொடுத்துவிடக் கூடாதா? கடன்காரன் தொல்லை தாங்க முடியவில்லையே. குழந்தைக்கு ஜூரம் வந்தது. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணம் இல்லை. பாரதி காந்திக்கு கடிதம் வரைகிற பொழுது அவர் சென்னையில் ஆங்கிலத்தில் பேசியதை விடுத்து ஏதேனும் இந்திய மொழியில் பேசி இருக்கலாமே என்று கேட்ட பொழுது அவர் அவ்வாறே செய்கிறேன் என்றார். ஆனால்,கடிதத்தை ஏன் ஆங்கிலத்தில் எழுதினீர்கள் என்று கேட்ட பொழுது. 'பிறரை புண்படுத்தும் பொழுது அன்னை மொழியை பயன்படுத்தி பழக்கமில்லை.' என்று தெறித்து வந்தது பதில். சென்னை கிருஷ்ணாம்பேட்டையில் பாரதி உறங்கிக்கொண்டு இருக்கிறான். அவனின் கீதங்கள் அக்கினி குஞ்சுகளை ஈந்துக்கொண்டே இருக்கின்றன. வேடிக்கை மனிதரைப்போல வீழாத அந்த என்றும் இளைஞன் இறக்கிற பொழுதும் வெள்ளையனை தலை முடியில் கூட அண்ட விடாமல் நல்லதொரு வீணையாக நாட்டை மீட்டி மறைந்தான். அவனின் இறுதி அஞ்சலிக்கு வந்தது இருபதுக்கும் குறைவானோர்.

# கொட்டியாபுரத்து சிங்கம்

**சம்பூர் சதீஸின்**

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி .. ..

தங்கள் தரப்புக்குத் தான் வெற்றி என கண்டிப் இராஜசிங்கனுடைய வரவுமே காரணமாகும்.

இனி .. ..

மறுநாள் காலை சண்டை தொடங்கியது ஆரம்பத்தில் இரு தரப்புமே மிக வீரமாக சண்டையிட்டுக் கொண்டிருந்தன. கண்டிப்படைகளின் அம்புகள் பட்டு பறங்கியர் பலர் உயிரிழந்து கொண்டிருந்தனர். மறுபுறத்தில் சுடகவன் களாலும், பீரங்கிகளாகும் பறங்கியர் இழப்பை ஏற்படுத்திக் கொண்டேயிருந்தனர். இதை அவதானித்த இளஞ்சிங்கன் இராஜசிங்கனிடம் தான் பீரங்கிப் படையினருடன் சண்டை செய்ய அனுமதி கேட்டான். அதற்கு மறுத்த இராஜசிங்கன் நண்பா நீர் எங்கள் விருந்தினர். எங்கள் பாதுகாப்பில் போர் புரிவதையே நான் விரும்புகின்றேன் என்றான். அதற்குப் பதிலளித்த இளஞ்சிங்கன் இங்கு தமிழ், சிங்களம் என்றோ கண்டி, கொட்டியாரப்பற்று என்றோ பார்ப்பதற்கில்லை பறங்கியர் இந் நாட்டவரான எங்களுக்குப் பொதுவான எதிரி. அதை விட இந்த டீ சா பொல்லாதவன் இரக்கமில்லாதவன். இவன் தான் எங்கள் கோணேஸ்வரர் ஆலயத்தை இடித்து நிர்மூலம் செய்தவன் என்று வாதிட்டு போர் புரிவதற்கான அனுமதியை பெற்று மகிழ்ச்சியுடன் தனது காற்று வேகப் புரவிப் படையினருடன் உறையிலெடுத்த வாளும் கையுமாக பறங்கியரின் சுடுகலன்களுக்கு அகப்படாதவாறு மிக லாவகமாக புரவியைச் செலுத்தி பீரங்கிகளுக்கு மருந்துகள் போட்டுக் கொண்டிருந்தவர்களை நெருங்கினான்.

சிறுவயதிலிருந்தே வாட்போரில் வல்லவனான இளஞ்சிங்கனுக்கு தன்னை உலகம் சிறந்தவொரு போர் வீரனாக ஏற்றுக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாகக் கருதினான். [illegible] பீரங்கிகளை இயக்கிக் கொண்டிருந்தவர்களை வாளால் வெட்டிச் சாய்த்தான். தலைவனுக்கொப்பாகவே புரவிப் படையினரும் செயற்பட்டு பறங்கியருக்கு அதிகளவு சேதமேற்படுத்தினான். அன்றைய சண்டையில் இளஞ்சிங்கனே கதாநாயகனாகப் போற்றப்பட்டான்.

அன்றிரவு இளஞ்சிங்கனின் கூடாரத்துக்கு இராஜசிங்கனுடன் வந்த செனரத் மன்னன் அங்கே இளஞ்சிங்கனைக் கண்டு அவனது வீரத்தை வியந்து பாராட்டினான். உலகம் போற்றக் கூடிய உன்னைப் போன்ற வீரர்களிலிருந்தும் நமது நாடு இவ்வாறு அடிமையாகிக் கிடக்கின்றதே என்று கூறி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினான். பின் கண்டி இராச்சியம் கொட்டியாரப்பற்றுக்கு என்றுமே துணையாக இருக்கும் என்றும் வாக்குறுதி அளித்ததுடன் அடுத்த நாள் போர் பற்றியும் ஆலோசனைகள் செய்த பின் கூடாத்தை விட்டகன்றான். இராஜசிங்கனும் தன் நண்பன் வீரத்தை மெச்சினான்.

பறங்கியர் பாசறையிலும் கூட இளஞ்சிங்கனைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. டீ சா அவனது வீரத்தைப் புகழ்ந்து பேசினான். தமிழன் ஒருவன் கண்டியருடன் சேர்ந்து வீரப்போர் புரிந்து தமது வெற்றியின் திசையையே மாற்றியது பற்றி தன் உள்ளக்குமுறலை வெளியிட்டான். எனினும் அடுத்த நாள் போருக்கான ஆயத்தங்கள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. கொழும்பின் சுற்றுப்புறங்களில் கண்டிய சேனைப் பிரிவொன்று வெளிப்பட்டு குழப்பம் விளைவிக்கின்றமை பற்றிய செய்தி டீ சாவை கவலையடையச் செய்தது. படைகள் குறைந்த நேரத்தில் கொழும்பு கைப்பற்றப்படக்கூடும் என்ற தகவல் அவன் மனதை குழப்பத்தில் ஆழ்த்தியது. படைத்தளபதிகள் பலரும் இப்போது பின்வாங்கி கொழும்பைப் பாதுகாப்போம். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் மீண்டும் கண்டியைக் கைப்பற்ற போர் தொடுப்போம் என்றனர். ஆனால் அவன் ஆத்திரத்தினால் நிதானமிழந்தான். என்ன விலை கொடுத்தாவது கண்டியைக் கைப்பற்றுவேன் என்று உரக்கக் கத்தினான்.

போர்த்துக்கீசப் படைகள் களைப்புற்றிருப்பதையும் இனம் புரியாத நோயொன்றினால் பாதிக்கப்பட்டு வருவதையும், பறங்கிப் படைகளிலுள்ள சுதேசிகள் மத்தியிலான குழப்பங்களை எடுத்துக் கூறியும் டீ சா அவற்றையெல்லாம் கவனிக்காதது போல் போர் நாளையும் தொடரும் என்று கூறி தளபதிகளை வெளியே செல்லுமாறு பணித்தான்.

### கொன்ஸ்ரான்ஸ்டைன் டீ சா

மறு நாள் காலை போருக்குத் தயாரான வேளையில் வானிலை மாற்றம் பெறத் தொடங்கியது. சில நாழிகைகளுக்கு தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டேயிருந்தது. பறங்கியரின் பீரங்கிளும் வெடி மருந்துப் பொருட்களும் மழையில் நனைந்தன. இதனால் பீரங்கிகள் ஒழுங்காக செயற்பட மறுத்தன. மருந்துப் பொருட்களும் மழையில் கரையத் தொடங்கியது. இவற்றைப் பாதுகாக்கவே பறங்கியருக்கு அதிக நேரம் தேவைப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய கண்டிப் படைகள் வலிந்த தாக்குதலைத் தொடங்கின.

... பாகம் 17
தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## ரஜனியின் ஆதரவில் "கத்தி"

கத்தி படத்திற்கு நாளுக்கு நாள் புதிது புதிதாக பிரச்சனை வந்து கொண்டே இருக்கிறது. இந்நிலையில் இப்படத்தின் ஆடியோ உரிமையை ஈராஸ் நிறுவனம் சார்பில் சௌந்தர்யா ரஜினிகாந்த் வாங்கியுள்ளார். படத்தை வெளியிட விடமாட்டோம் என்று சில தரப்புகள் கூறினாலும், சௌந்தர்யா தன் அப்பாவின் ஆதரவோடு இதை ரிலிஸ் செய்தே காட்டுவேன் என்று சபதம் எடுத்துள்ளதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.



## காமெடி கிங் - 49ஓ

கிருஷ்ணா மா.கா.ப.ஆனந்த் நடிப்பில் 12ல் வெளியாகிய படம் வானவராயன் வல்லவராயன். இப்படத்தின் பாடல்கள் மற்றும் ட்ரைலர் ஏற்கனவே வரவேற்பு பெற்றுள்ளதால் இப்படத்திற்கு நல்ல எதிர்பார்ப்பு உள்ளது. இந்நிலையில் இப்படத்தின் இடைவேளையில் 'காமெடி கிங்' கவுண்டமணி நடித்த 49 ஓ படத்தின் ட்ரைலர் இடம்பெறுகிறது என தெரிவித்துள்ளனர்.

## டைட்டில் கூறப்போவதில்லை

ஆரம்பம் படத்தில் இருந்தே அஜீத் படங்களுக்கு உடனடியாக தலைப்பு சொல்வதில்லை என்ற ஒரு சபதத்தை எடுத்துள்ளார்கள், அவரை வைத்து படம் பண்ணும் இயக்குனர்கள். இப்போது அஜீத்தின் 55வது படத்தை இயக்கி வரும் கௌதம்மேனன், ஆரம்பத்தில் ஆயிரம் தோட்டாக்கள் என்ற பெயரை வைத்திருப்பதாக இலைமறை காய் மறையாக சொன்னார். அதேசமயம், இப்போதைக்கு என்ன டைட்டில் என்பதை அவர் சொல்லப்போவதாக இல்லையாம்.



## தமன்னா அதிர்ச்சியில்

கூகுள் தேடுபொறியில் இந்திய நிர்வாண நடிகைகள் என தேடினால் முதல் பக்கத்தில் வருபவை பெரும்பாலானவை தமன்னாவின் படங்களாகவே இருக்கின்றது என்ற தகவல் அவருக்கு மிக சமீபத்தில்தான் தெரிந்துள்ளது. தன்னுடைய இமேஜ் இதனால் பாதிக்கின்றது என்பதால் இதுகுறித்து தமன்னா சைபர் க்ரைம் போலீசில் புகார் செய்துள்ளார். இவருடைய புகாருக்கு பின்னர்தான் தமன்னாவின் நிர்வாண படங்களை இணையவாசிகள் அதிகம் தேடுவதாகவும் ஒரு கருத்து நிலவி வருகிறது. இதனால் தமன்னா அதிர்ச்சி அடைந்துள்ளார்.

## உதயநிதிக்கு ஆப்படித்த காஜல்



உதயநிதி கொடுக்கப்பட்ட 40 லட்சம் ரூபாய் முன்பணத்தை பலமுறை கேட்டும் காஜல் திருப்பித் தரவில்லை. அவர் தர ஒப்புக் கொண்டாலும் அவரது அம்மா கொடுக்க கூடாது என்பதில் பிடிவாதமாக இருப்பதாக கூறப்படுகிறது. "நண்பேன்டா படத்திற்கு கொடுத்த தேதியை அவர்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. நண்பேன்டாவுக்கு தேதி ஒதுக்கியதால் அந்த நேரத்தில் வந்த ஜுனியர் என்.டி.ஆர் படத்தில் நடிக்க முடியாமல் போய்விட்டது. இதனால் எங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. அதனால் முன் பணத்தை திருப்பித் தரமுடியாது" என்று காஜல் அகர்வால் தரப்பில் கூறப்பட்டதாக தெரிகிறது.



## எதற்காக பரிகார பூஜை

அனுஷ்கா ருத்ரமாதேவியாக நடிப்பதால் ஒரிஜினில் தங்க நகை அணிந்து நடித்து வருகிறார். இதற்காக எப்போதும் 3 கிலோ தங்க நகைகள் தயாராக இருக்கும். அதை பாதுகாக்க தனி பாதுகாவலர்களும் உண்டு. அப்படி இருந்தும் கடந்த மாதம் அந்த நகைளில் ஒரு பகுதி சுமார் ஒரு கிலோ திருட்டு போய்விட்டது.

இதனால் கலக்கம் அடைந்தவர் தனது குடும்ப ஜோதிடரின் ஆலோசனைப்படி ஒரு வாரம் விரதம் இருந்து ஆந்திராவில் உள்ள ருத்ரமாதேவி கோவில்ல் கடந்த வாரம் பரிகாரபூஜை செய்தார். ஆனால் அனுஷ்கா திருமண பரிகார பூஜை நடத்தினார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கன.

## யார் இந்த தேவதை!!

## கண்டு பிடியுங்கள்

## பார்ப்போம்...



## திரை விமர்சனம் ஜீவா ஷங்கரின் அமர காவியம்



விஜய் ஆண்டனியின் முதல்படமான "நான்" படத்தை இயக்கிய ஜீவா ஷங்கரின் இரண்டாவது படம். ஆர்யாவின் தம்பி நடித்த படம். தான் நடிக்கும் படங்களின் புரமோஷன்களுக்கே வராத நயன்தாரா இந்த படத்தின் புரமோஷனுக்கு வந்ததோடு மட்டுமின்றி இந்த படத்தின் கிளைமாக்ஸை பார்த்து கதறி அழுதார் என ஊடகங்கள் கிளப்பிய இலவச விளம்பரம் ஆகியவை அனைத்தும் சேர்ந்து படத்திற்கு பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

முதல் காட்சியிலேயே சத்யாவை ஜெயிலில் இருந்து கோர்ட்டுக்கு போலீஸார் அழைத்து செல்கின்றனர். செல்லும் வழியில் சத்யாவின் பிளாஷ்பேக்தான் கதை. சத்யாவும், மியா ஜார்ஜும் பள்ளியில் படிக்கும் மாணவர்கள். சத்யாவின் நண்பன் மியாவை காதலிக்கிறார். நண்பனின் காதலுக்கு தூது போக சென்ற சத்யாவுக்கு மியா கொடுக்கும் அதிர்ச்சி, மியா சத்யாவை காதலிக்கிறார் என்பதுதான். இதனால் ஏற்படும் குழப்பங்கள், பிரச்சனைகள் தான் கதை. சத்யா ஏன் ஜெயிலுக்கு போனார் என்பதையும் கிளைமாக்ஸில் சொல்கிறார்கள்.

படத்தில் உருப்படியாக இருப்பது கடைசி அரைமணி நேரம் மட்டுமே. யாரும் எதிர்பாராத டுவிஸ்டுடன் கூடிய கிளைமாக்ஸ். பள்ளிக்கூட பருவத்தில் வரும் காதல், அவர்கள் போட்டிருக்கும் கிளாமர் உடைகள் இதையெல்லாம் எந்த ஊரில் உள்ள பள்ளியில் அனுமதிக்கின்றார்கள் என்று தெரியவில்லை. முதல் ஒருமணி நேரம் சாதாரண காதல் காட்சியிலேயே படத்தை ஓட்டிவிடுகிறார் இயக்குனர்.



சத்யா, மியா இருவருமே நன்றாக நடித்துள்ளனர். இன்னொரு ஆர்யா உருவாகிவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். மியா ஜார்ஜ் நல்ல கதையை தேர்வு செய்து நடித்தால் கண்டிப்பாக நல்ல எதிர்காலம் உண்டு. கடைசி அரைமணி நேரத்தில் கொடுத்த விறுவிறுப்பை இயக்குனர் ஆரம்பத்தில் இருந்து கொடுத்திருந்தால் படம் எங்கேயோ போயிருக்கும்.

மொத்தத்தில் இது அமரகாவியம் இல்லை. அழிந்த காவியம். ஆர்யாவுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

## சினிமா குறுஞ் செய்திகள்

தொடர்ந்து விஜய் சிம்புதேவன் இயக்கும் புதிய படத்தில் விஜய் நடிக்க உள்ளார். விஜய்க்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன்-ஹன்சிகா இருவரும் நடிக்க உள்ளனர்.

அனிருத்தின் வளர்ச்சியை பொறுமையாக பார்த்து வந்த ஆண்ட்ரியா இனி நாமும் களத்தில் இறங்க வேண்டும் என்று ராம் இயக்கத்தில் நடித்து வரும் தரமணி படத்தில் ஒரு பாடலை தானே எழுதி, இசையமைத்தும் பாடியுள்ளார்.

தமிழ் சினிமாவில் எல்லோருக்கும் பிடித்த நட்சத்திர தம்பதிகள் பிரசன்னா-சினேகா தான். தற்போது சினேகா கர்ப்பமாக இருப்பதாக கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.



சூர்யாவுடன் படப்பிடிப்பை ஏன் சூர்யா நிறுத்தினார் என்று இன்று வரை தெரியவில்லை, இருந்தாலும் அவர் என்னை ஒதுக்கியதால் தான் அஜித் படத்தின் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்த விதத்தில் எனக்கு சந்தோஷம் தான்' என்று கூறினார் கௌதம்மேனன்.

முரகதாஸ் திட்டம் போட்டே உடல்நிலையை காரணம் காட்டி படத்தில் இருந்து விலகினாரா? அல்லது முருகதாஸின் உடல்நிலையை சாதகமாக பயன்படுத்திகொண்டு முருகதாஸை விஜய் வெளியேற்றினாரா? என்பது தெரியாமல் உதவி இயக்குனர்கள் பெரும் குழப்பத்தில் உள்ளனர்.

தற்போது ஒரு விருது விழாவிற்கு வெளிநாடு சென்ற ராணா-த்ரிஷா ஜோடி, அங்கு பல இடங்களில் ஒன்றாக சென்று வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விரைவில் படம் இயக்க உள்ளார், ஜெயம் ரவி. இதுகுறித்து அவர் கூறியதாவது:சில படங்களில் மென்மையான காதல் ஹீரோவாக நடித்தேன். இதனால் எனக்கு சாக்லெட் பாய் இமேஜ் இருந்தது. 'ஆதிபகவன்', 'நிமிர்ந்து நில்' படங்களை தொடர்ந்து ஆக்ஷன் ஹீரோ இமேஜ் ஏற்பட்டுள்ளது.

சுசீந்திரன் இயக்கத்தில் விஷால் நடிக்கவிருக்கும் படத்தில் தனது நெருங்கிய நண்பரான ஆர்யாவுடன் மீண்டும் இணைந்து நடிக்கவுள்ளார். பாலா இயக்கத்தில் அவன்-இவன் படத்தில் இருவரும் இணைந்து நடித்தனர். தற்போது இப்படத்தில் விஷால்தான் நாயகன் என்றாலும், ஆர்யா ஒரு சிறப்பு தோற்றத்தில் வந்து நடிக்கவுள்ளாராம்.

சமந்தா, தனக்கு படங்கள் கிடைக்காமல் போகும் போது சினிமாவை விட்டு விலகுவதைவிட, பிசியாக நடித்துக் கொண்டிருக்கும்போதே சினிமாவை விட்டு விலகப் போகிறேன் என்று தடாலடியாக தெரிவித்துள்ளார்.

தமிழ் சினிமாவில் இதுவரை கிரிக்கெட்டை மையப்படுத்தி பல படங்கள் வந்துள்ளன. ஆனால் முழுக்க முழுக்க யதார்த்தமாக சுசீந்திரன் இயக்கத்தில் வி'ணு-ஸ்ரீதிவ்யா நடித்திருக்கும் படம் ஜீவா.இப்படத்தை ஆர்யா மற்றும் வி'ாலும் தமிழகம் முழுவதும் வெளியிட உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுப்படுத்தும் பிரேஸ்லெட்



ஊஉைசநவ நிறுவனம் புத்தம் புதிய ஞஅயசவ டீசயஉநடநவ் ஒன்றினை வடிவமைத்துள்ளது.

இச்சாதனமானது ஸ்மார்ட் கைப்பேசிகளை கட்டுப்படுத்தக்கூடிய வகையிலும், தோலின் மேற்பரப்பில் திரைபோன்று காட்சிகளை தோற்றுவிக்கக்கூடிய வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனால் கையின் தோலில் தோன்றும் காட்சித் திரையில் தொடுவதன் மூலம் இச்சாதனத்தை இயக்கக்கூடியதாக காணப்படுகின்றது.

## Ring tone — வாசனை



செல்போன்களில் அழைப்பை ஏற்படுத்தும் போது உருவாகும் Ringtone வாசனையை உணர iScent Atomizer எனும் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. புளூடூத் மூலம் இணைப்பினை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் இச்சாதனத்தின் மூலம் Ringtone தவிர்ந்த ஏனைய ஒலிகளின் வாசனையையும் உணர முடியும். இச்சாதனமானது தற்போது நிதி திரட்டல் மற்றும் விளம்பர நோக்கத்துடன் Kickstarter இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## மணிக் கைக் கடிகாரம்

LG G Watch R, Moto 360 மற்றும் Asus ZenWatch ஆகிய ஸ்மார்ட் கைக்கடிகாரங்கள் அறிமுகமாகியுள்ள வேளையில் சோனி நிறுவனமும் வித்தியாசமான வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட SmartWatch 3 இனை அறிமுகம் செய்யவுள்ளது. இந்த கடிகாரமானது விளையாட்டு நிகழ்வுகளின் போதும், ஆடம்பரமாக அணியக்கூடியவாறும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் திசைகாட்டி உட்பட GPS தொழில்நுட்பம் மற்றும் நீர், தூசிகள் உட்புகாத தொழில்நுட்பம்



என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் அன்ரோயிட் இயங்கு தளத்தினைக் கொண்டுள்ள இக்கடிகாரத்தின் திரையானது 1.6 அங்குல அளவு, 320 x 320 Pixel Resolution உடையதாகக் காணப்படுகின்றது.

## மடிக்கக் கூடிய கீபோர்ட்



தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக புதிதாக அறிமுகமாகும் சாதனங்களின் அளவு சிறிதாகிக்கொண்டே செல்கின்றது. இவற்றின் மற்றுமொரு அங்கமாக பாக்கெட்டில் வைத்து பயன்படுத்தக்கூடிய Flyshark எனும் வயர்லெஸ் கீபோர்ட் ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது. இந்த கீபோர்ட் ஆனது டேப்லட் மற்றும் ஸ்மார்ட் கைப்பேசி பாவனையாளர்களுக்கு பெரிதும் உதவக்கூடியதாக காணப்படுகின்றது. இதேவேளை Android, iOS சாதனங்களில் மட்டுமே இந்த கீபோர்ட் பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றமை

## கேம் பிரியரா!?

இதுவரை கணனிகளில் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த SimCity ஹேம் ஆனது தற்போது iOS மற்றும் Android சாதனங்களில் வரவுள்ளது. பல வருடங்களாக பிரபலமாகக் காணப்படும் இக்ஹேமினை மொபைல் சாதங்களில் அறிமுகம் செய்யவுள்ளதாக EA நிறுவனம் அறிவித்துள்ளது. Pinch, Zoom, மற்றும் 360 டிகிரியில் நகரங்களை சுழற்றக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்ஹேமானது பயனர்களை

# விளையாட்டுப் பையன்

## கூகுளின் சேட்டை அம்பலம்

தொழில்நுட்ப உலகில் 15 ஆண்டுகள் கடந்தும் ஒரு தேடல் தளம் மக்களின் நம்பகத் தன்மையுடன் இருப்பது கூகுள் மட்டுமே. பல்வேறு தேடல் தளங்கள் வந்து விட்ட நிலையிலும் மக்களை சுண்டி இழுக்கும் தொழில்நுட்பத்தை கொண்டுள்ளது கூகுள்.

தகவல்களை விரைவாகத் தேடித்தருவதில் கூகுளின் வேகம் மற்றும் துல்லிய... பற்றி நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. நாம் நினைக்கும் விடயங்களை எவ்வாறு கூகுளால் கொடுக்க முடிகிறது என்பது ஆச்சரியப்படுத்தும் வகையில் இருக்கிறது. இதற்கு முன்பிருந்தே இணையத் தேடல் வசதியைத் தந்து கொண்டிருக்கும் யாகூ, அல்ட்ராவிஸ்டா போன்ற தேடல் தளங்களால் தர முடியாத தகவல்களைக் கூட, அதுவும் நமக்கு எது தேவையோ அதனை சரியாக அடையாளம் கண்டு தரும் தன்மை கூகுளிடம் மட்டும் இருப்பதுதான் சிறப்பம்சமாக இருக்கிறது.

கூகுளின் ஜிமெயில் கணக்குக்கு செல்வதாகட்டும், ∴பேஸ்புக் கணக்கில் நுழைவதாக இருந்தாலும், நேரடியாக அட்ரஸ் பாரில் முகவரியைக் கொடுத்து நுழையாமல், கூகுள் தேடலில் பெயரைக் கொடுத்து, சர்ச் செய்து, லிங்க் பெற்று அந்தத் தளங்களில் நுழைவதுதான் இன்று பெருவாரியான மக்களின் செயல்பாடாக மாறியிருக்கிறது.

### கூகுள் இரகசியம் :-

இந்த விடயங்கள் எப்படி கூகுளால் மட்டும் சாத்தியமாகியது என்று பார்த்தால், அதற்குப் பின் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமானது, இணைய வலைப்பின்னலைப் போன்றே மிகச் சிக்கலான கட்டமைப்பில் உருவாக்கப்பட்டதாக இருக்கிறது. இதன் தொழில்நுட்பமும், முழுவிபரமும் இரகசியமானதாக வைக்கப்பட்டிருந்தாலும், அதில் சில தகவல்களை பார்க்கலாம்.

தகவல்களைத் தேட கூகுள் பாட் என்ற ஒற்றன் வகை மென்பொருள் ஒன்றை பயன்படுத்தி இணையதளத் தகவல்களை திரட்டி தன்னுடைய சர்வரில் அவற்றை வரிசைப்படுத்தி சேகரித்து வைத்துக் கொள்கிறது. ஒரு இணையதளத்தில் நுழைந்து தகவல்களைத் திரட்டியபின் அது சார்ந்த இணையதளங்களுக்கு சென்றும் தேடும் வகையில் இது உருவாக்கப்பட்டிருக்கிறது.



தேடுபவர்கள் குறிப்பிடும் வார்த்தைகளை மட்டும் தேடாமல் அதன் பொருள், அந்தக் குறிப்பிட்ட வார்த்தை சரியான வார்த்தையா, அந்த வார்த்தைக்குத் தொடர்பான மற்ற வார்த்தைகள் என்று ஒரு டிக்ஷனரியைப் படித்து தேடுவதுபோல விபரங்களைத் தேடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அதாவது பயனர் ஒருவர் தேடிய விபரங்களை மூன்று மாதங்கள் வரை அவர் கணக்கில் கூகுள் சேமித்து வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த அளவு முன்பு 11 மாதங்களாக இருந்தது. சொல்லப் போனால் நம்மை நோட்டமிடும் பணியை சிறப்பாக செய்கிறது.

இந்த விபரங்களை சேகரித்து வைப்பதை அனைத்து தேடல் நிறுவனங்களுமே மேற்கொள்கின்றன. இந்த பணியானது பிரைவஸி பாதிப்பதாக வந்த புகார்களால் நினைவில் வைத்திருக்கும் இந்தக் கால அளவு தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

இந்த உண்மை விடயத்தை பயனர் விரும்பமாட்டார்கள் என்பதாலும், அடுத்த முறை தங்களது சேவையைப் பயன்படுத்தமாட்டார்கள் என்பதாலும் இணையதளங்கள் இதுகுறித்த உண்மை விபரங்களை வெளியிடாமல் மறைக்கின்றன.

# ஒரு கொலையின் கதை

3-7 மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

கடந்த வாரத் தொடர்ச்சி ..........

அவ்வார்த்தைகள் அச்சொட்டாக " உங்கள நாய்க்கு வந்தமாதிரிக் கிழிச்சு முடிஞ்சு என்ட வீட்டாக்களையும் கதைச்சு முடிஞ்சு... சரியா.... கேதீஸ இண்டைக்குத்தான் பாக்கிற கடைசி எண்டு சொல்லி நடந்நதது.... எண்டு சொன்னது எனக்குத் தெரியும்" என அப்பதிவின் 13 நிமிடம் 31 வினாடிகளில் அவளொரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருந்தாள்.......
.............................. இனி இந்த வாரம்

அவ்வொப்புதல் வாக்குமூலத்தின் ஊடாக அவளுக்கு கொலை நடந்த விடயம் அல்லது கொலைஞர்கள் தொடர்பாகத் தெரிந்திருந்தது என்பது வெளிப்படையாகப் புலனாய்வாளர்களுக்குப் புரிந்தது.

அவளது தொடர்பாடல்கள் தெளிவற்றதாகவும் தடுமாற்றம் மிகுந்ததாகவும் இருந்ததை அக்குறிப்புக்கள் காட்டின. தனக்குத் தெரியும் எனப் பலதடவைகள் அத் தொடர்பாடலில் அவள் தெரிவித்திருந்தாள்... ஆனால் எப்போதெல்லாம் கொலையுண்டவரின் தகப்பனார் உனக்குத் தெரிந்த விடயங்களைக் கூறு எனக் கேட்கும் போதெல்லாம் அவள் அதனைத் தவிர்ப்பதற்காக ' எனக்கு உங்களில் நம்பிக்கையில்லை' ' அத உங்களிடம் சொல்ல முடியாது' 'நான் புலனாய்வாளர்களிடம் மட்டுமே கதைப்பேன்' ' அவர்களிட்ட நீங்கள் கேட்டுச் சொல்லுங்க' ' எனக்குப் பயமா இருக்கு' எனப் பலவழிகளில் அவள் தனக்குத் தெரிந்தவற்றை வெளிச்சொல்ல தவிர்த்திருப்பதை அக்குறிப்புக்கள் வெளிக்காட்டின.....

எனினும் கொலையுண்டவரின் தகப்பனாரின் இடைவிடாத முயற்சி.... அவளது வாயிலிருந்து ஓர் ஒப்புதல் வாக்குமூலத்தைக் கொண்டு வந்தது ...
எனினும் கேதீஸைக் காண்பது இன்றுதான் கடைசி என்று சொன்னவர்கள் யார் என்பதை அவள் தெரிவிக்கவேயில்லை.....

காவல்துறையிடம் மட்டுமே அதனைத் தெரிவிப்பேன் எனத் தெரிவித்த அவள் அதனையடுத்து பெரிய குண்டொன்றை அத் தொடர்பாடலில் தெரிவித்திருந்தாள்.

" நாளைக்கு கோர்ட்சுல அங்கு (இலங்கையில்) பிரச்சனையைத் தீர்கஇல்ல எண்டால் நான் லண்டன்ல ஸ்கொட்லண்ட்யார்ட்ல வழக்குப் போடுவன்" என்பதே அந்தக் குண்டாக இருந்தது.

தொடர்ந்த அந்தத் தொடர்பாடலில் அவள் அளித்த அடுத்த வாக்குமூலம் கொழும்பிலுள்ள முகவரின் ஊடாக தானே 1750 பவுண்களை வைப்பிலிடுமாறு அனுப்பியதாகத் தெரிவித்தது......

"ஹிம்சா.... சரி கேதீஸக் காண மாட்டம் எண்டு சொன்னவங்கள் ஆரெண்டு நீ சொல்ல விரும்பிறாயில்ல.... அத விடு... நீ இந்தக் காசு போட்ட விசயத்தில ஆருக்குக் காசு போட்டனி எண்டாவது சொல்லன்?" மாமனாரின் கேள்விக்கு அதிரடியாக இறங்கியது அவளின் பதில்.....

" எனக்கு ஆரெண்டு தெரியாது.... நான் காசு போட்டதோட ஆருக்குப் போட்டன் எண்டுறத மறந்திட்டன்....எனக்கு அந்த எக்கவுண்ட நம்பரும் தெரியாது..."

" என்னடி... நீதான் காசு போட்டிருக்கிறாய் பிறகு எக்கவுண்ட நம்பர் தெரியாது எண்டுறாய்...? "

" காசு போட்ட எக்கவுண்ட நம்பர் எல்லாம் என்ன[illegible] அவன் சொன்னான்..........
சொன்னோன்ன நான் காசப் போட்டிருக்கலாம்...."

"நீ சொன்ன உடனே போட்டனி... போட்டவண்ட பேரும் கூடவா உனக்குத் தெரியா?... ஒரு இடத்திலயாவது குறிக்காமலா போட்டிருப்பாய்..... என்ன விசரி மாதிரிக் கதைக்கிறாய்..."

" மாமா... எனக்கு விளங்குது என்ன லெட்டர் எங்க ஓப்பன் பன்னுப்பட்டு நீங்க இப்பிடி கதைக்கிறீங்கள் எண்டு.... செய்யறது எல்லாம் அநியாயம்...நான் ஸ்கொட்லண்ட் யார்டலயே போடுவன்..."

என்று தொடர்ந்தது அவளின் தொடர்பாடல்கள்.....

அந்தத் தொகுப்பின் அடுத்த பக்கத்தில் அவள் கூறிய முக்கிய விடயமொன்று..... "நான் எதைச் சொல்வதென்றாலும் தனது தம்பியிடம் கேட்டுவிட்டே சொல்லுவேன்" எனத் தெரிவித்திருந்தாள்......

அதனைச் செவிமடுத்திருந்த மாமனார் அடுத்துக் கேட்ட கேள்வி....
" அப்ப உண்ட தம்பிக்கும் இந்த விசயங்கள் தெரியுமா?" என்பதே.....

அந்தக் கேள்விக்கு அவள் பதிலளித்தவிதம் அவனுக்கு எதுவுமே தெரியாது... இனித்தான் சொல்லப் போறன் என்பதாக முடிந்திருந்தது.

அடுத்து எந்தவொரு தொடர்பாடலிலும் அவள் அவளது தம்பியிடம் தன்னாள் பேசமுடியவில்லை என்றே தெரிவித்திருந்தாள்.....

" நான் காதலிச்சுக் கலியாணம் கட்டினதுக்கு இண்டு வரைக்கும் நான் அனுபவிச்சுக் கொண்டே இருக்கிறன்.....நீங்கள் எங்க போகச் சொல்றீங்களோ அங்க நான் போறன்........ என்னட்ட எந்த ஒளிவு மறைவும் இல்ல....."

இதையடுத்து அவளது தம்பியுடனான தொடர்பாடல்கள் தொகுக்கப்பட்டிருந்தன..... அத்தொகுப்பில். அவளது வாக்குமூலங்களில் இருந்த முரண்கள் வெளிப்பட்டன........

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் -18

# திகைக்க வைக்கும் திருட்டுக்கள்

(வி.என்.சந்திரகாந்தி)



பற்பல வர்ணங்கள், பல வகைப்பூக்கள், பலவித பழங்கள் போன்று திகைக்க வைக்குமளவிலான பற்பல திருட்டுக்களும் இருக்கின்றன என்று கூறினால் நீங்கள் சற்று அசந்துதான் போவீர்கள்!

நாம் எவ்வளவுதான் முன்னெச்சரிக்கையாக இருந்தாலும் சில சில சந்தர்ப்பங்களில் எமது சொத்துக்கள் திருடப்படுவதை தவிர்க்க முடியாமல் இருப்பதற்கு காரணம் திருட்டுக்களின் பல்வேறுபட்ட தன்மையும் வகைகளுமாகும். சந்தர்ப்ப சூழ்நிலைகள் சதி செய்தாலன்றி திருட்டுக்கள் பற்றிய அறிவு எம்மை நிச்சயம் காப்பாற்றும். எனவே அவை பற்றி சிறிது ஆராய்வோம்.

சிறு திருட்டுக்கள் அல்லது இரகசியமாக திருடுதல் : (STEAL) இவ்வகைத் திருட்டுக்கள் கண்மூடித்திறப்பதற்குள் நடந்து முடிந்து விடும். சிலருக்கு இது ஒரு மனநோயாகவும் இருக்கின்றது. இப்போதெல்லாம் பல்பொருள் அங்காடிகளில் (SUPER MARKET) நிறைய பொருட்களை பரப்பிவைத்து வியாபாரம் செய்கிறார்கள். அங்கு இப்படியான களவுகள் நடப்பதற்கு அதிக சந்தர்ப்பம் உண்டு. ஆனாலும் சீ.சீ.ரி.வி. கமெராக்கள் (CCTV Camera) மூலம் இப்போது இக்களவுகள் தடுக்கப்படுகின்றன.

திருட்டு அல்லது களவு (THEFT) திருட்டுக்களிலேயே நன்கு அறியப்பட்டதும் பல்வேறுபட்ட திருட்டுக்களுக்கும் உடந்தையாக இருப்பதும் பல சந்தர்ப்பங்களில் இடம்பெறுவதும் இவ் வகை திருட்டுக்களே. திருடன் (THIEF) என்ற சொல்லை நீங்கள் நன்றாகவே அறிந்திருப்பீர்கள். துணிவுடன் திட்டமிட்டு திருடிவிட்டு தப்பி ஓடிவிடுவதும் சமூகத்தில் தன்னை அடையாளப் படுத்தாத அளவுக்கு எச்சரிக்கையாக இருப்பதும் அவனது திறமை.

பெரும் திருட்டு அல்லது கொள்ளை: (ROBBERY) சாதாரண திருடனைப் போலன்றி இவன் (ROBBER) சற்று தைரியசாலியாக இருப்பான். சில சமயம் 'ரைபிள்' போன்ற ஆயதங்களையும் பயன்படுத்த முயல்வான். வங்கி, நகைக்கடைகள், தனவந்தர் வீடுகள் போன்ற இடங்களுக்கு துணிவுடன் நேரில் சென்று பெருமளவில் பணம் நகைகளை கொள்ளையிடுவான். மற்றவர்கள் அடையாளம் காண்பதை தவிர்க்க முகமூடி அல்லது தலைக்கவசத்தை அணிவான். தனக்கு உதவியாக சிலரை அழைத்து செல்வான். சிறிய ரக வாகனங்களை பயன்படுத்தி, கொள்ளையிட்ட பொருட்களை எடுத்து செல்வான்.

சூறையாடுதல்: (PLUNDER) அங்காடிகள், கிராமங்கள், கடைத்தொகுதிகள் ஆகியவற்றுக்கு குதிரைகள், உந்துருளிகள், 'ஜீப்' வண்டிகள் போன்றவற்றில் மக்களை அச்சுறுத்தும் வகையில் விரைந்து சென்று அவர்களை தாக்கி காயப்படுத்தியும் கொன்றும் மொத்தப் பொருட்களையும் சூறையாடுவது இவ் வகை திருட்டு. இந்தியாவில் இவ்வகை திருட்டுக்கள் நடைபெறுவது சகஜம். அப்படியான கொள்ளையர்களையிட்டு (PLUNDERER) மக்கள் கிலி கொண்டிருப்பர். பொருட்களும் உடமைகளும் பலவந்தமாக அபகரிக்கப்படுவதே சூறையாடுதலாகும் (LOOTING).

அதே நேரத்தில் யுத்தத்தால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் மக்கள் தப்பி ஓடிவிட்ட நிலையில் அல்லது அச்சமுற்று இருக்கையில் அவர்களது சொத்துக்களை சூறையாடுதலும் இவ்வகையில் அடங்கும். எமது நாட்டிலும் யுத்தம் நீடித்த பிரதேசங்களில் மக்கள் திரும்ப திரும்ப சூறையாடப்பட்டார்கள். இப்படியாக சூறையாடப்பட்ட பொருட்களை (BOOTY) பலர் தமக்குள் பங்கிட்டுக்கொள்வர்.

கன்னமிட்டு திருடுதல் : (BURGLARY) கன்னம் வைத்த அல்லது பூட்டை உடைத்து வீடு புகுந்து திருடுவதும் ஒரு வகையாகும். வீட்டில் எவரும் இல்லை என்பதை தெரிந்து கொண்டு அல்லது வீட்டில் இருப்பவர்கள் அறியாமல் திருடர்கள் (HOUSE BREAKER) தமது கைவரிசையை காட்டுவர். பணம், நகை மற்றும் இலகுவில் எடுத்துச் செல்லக் கூடிய பொருட்களே இவர்களது இலக்காக இருக்கும்.

முடிச்சுமாறி, ஜேப்படி கொள்ளை: (PICK POCKET) வாகனங்களில் பிரயாணம் செய்யும் போதும் திருவிழாக்களை ஒத்த சன நெரிசலான இடங்களிலும் தனிநபராகவோ அல்லது ஓரிருவர் துணையுடனோ தற்காலிக உடமைகளை பிடுங்கிக் கொள்ளல். நீண்ட இரயில் பயணங்களின் போது மக்கள் தூங்கிவிடும் சந்தர்ப்பங்களில் முடிச்சுமாறி தனது கைவரிசையை காட்டுவது பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வழிப்பறி கொள்ளை: மக்கள் தமது வாகனங்களில் அல்லது வாடகைக்கு அமர்த்திய வாகனங்களில் பிரயாணம் செய்யும் போது வழிப்பறி கொள்ளையர்கள் (HIGHWAY MAN) அவர்களை யாரும் அற்ற இடங்களில், வெட்ட வெளிகளில், காட்டுப்பகுதிகளில் தடுத்து நிறுத்தி சொத்துக்களை அபகரிப்பது அவ்வகையாகும். பிரயாணிகளின் அநாதரவான நிலைகளில் அப்படியான கொள்ளைகள் இன்னமும் நடைபெறுகின்றன.

வங்கோலைக் கள்வன்:- தோலிருக்க சுழைவாங்கிக் கள்வன் இவனே! அரச திணைக்களங்களில் ஒப்பந்த அடிப்படையிலான வேலைகளை வழங்குவதிலும் பெறுவதிலும் அதிகாரிகளுக்கும் ஒப்பந்தகாரருக்குமிடையிலான பணக்கைமாற்று. அதனால் பாதிப்புக்குள்ளாவது பயனாளிகளான மக்களே. கோபம் கொள்ளும் கிராமத்து மக்கள் மத்தியில் இச் சொல் பாவிக்கப்படுகின்றது.

விமானக்கடத்தல்: (HIJACK) விமானம் பறக்கையில் விமானியை பயமுறுத்தி திசை மாற்றி கொண்டு செல்வர். இவ் வகை ஆபத்தான கடத்தல் காரரை HIJACKER என ஆங்கிலத்தில் குறிப்பிடுவர்.

கடற் கொள்ளை : கடலில் கொள்ளையில் ஈடுபடும் நபர்களும், கடற்கொள்ளை கப்பல்களும் PIRATE என அழைக்கப்படுவதுண்டு. கடற்கொள்ளைக்காரன் (SEE ROBBER) இதனை ஒரு தொழிலாகவே செய்கின்றான். கொள்ளைக்கென ஈடுபடுத்தப்படும் கப்பல்கள், எண்ணெய்க்கப்பல்கள், வியாபாரக் கப்பல்கள் ஆகியவற்றை கடத்திச் செல்வதுண்டு. பிரயாணிகள் கப்பல் கடற் கொள்ளையர்களால் தாக்குதலுக்குள்ளாவது முண்டு.

இப்போ நீங்கள் சற்று கண்களை மூடி எவ்வகை களவுகளில் நீங்கள் சிக்குண்டீர்கள் என்று சிந்தித்து பார்க்கலாம். நான் எனது நண்பரை விசாரிக்கையில், அவர் கூறியதாவது, 'நான் கடந்த 26, 27ம் திகதிகளில் (ஆவணி 2014) எனது இல்லத்தில் தங்க இயலவில்லை. 28 காலை நான் வீட்டுக்கு வந்த போது கூரைக்கு இடப்பட்ட 'சீற்' அகற்றப்பட்டு, கதவு, அலுமாரி ஆகியன உடைக்கப் பட்டிருந்தன. கணனி அது சார்ந்த கருவிகள் மற்றும் DVD Player களவாடப்பட்டிருந்தன.

நண்பரை குற்றம் கூறி பயன் இல்லை. அந்த அளவில் அவர் நகை, பணம் என்று கோட்டை விடவில்லையல்லவா? அதுவே பெரிய காரியம்!

# தேசிய SMS செய்திகள்

- **முன்னாள் போராளி. ரி.ஐ.டி யிடம் ஒப்படைப்பு**

கிளிநொச்சி பகுதியில் இடம்பெற்ற குற்ற செயல்களுடன் தொடர்புடையவர் என கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி ஒருவர், பயங்கரவாத குற்ற தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் நேற்று வியாழக்கிழமை (11) தெரிவித்தனர்.

- **40 வயதான காதலனுக்கு விளக்கமறியல்**

21 வயதான காதலியை ஏமாற்றி அவளை கர்ப்பமாக்கி அவளிடமிருந்து 16 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளை மோசடி செய்த இரண்டு குழந்தைகளின் தந்தையான 40 வயதான தந்தையை எதிர்வரும் 25ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

- **மாணவர்களை வல்லுறவு புரிந்த ஆளும் கட்சி பிரதேச சபை உறுப்பினருக்கு தேடுதலில்**

கல்விச் சுற்றுலா சென்ற 7 மாணவர்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் வனாத்தவில்லு பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வனாத்தவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

- **கூடுதல் பிரதேசங்களிலிருந்து வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளது**

வடமாகாணத்தில் 96 சதவீத பிரதேசங்களிலிருந்து வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

- **பாகிஸ்தானுக்காக உளவுபார்த்த இலங்கையர் கைது**

பாகிஸ்தானுக்காக இந்தியாவில் உளவுபார்த்ததாக இலங்கை நபரொருவர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார். அருண் செல்வராஜ் என்ற இலங்கையரே தேசிய புலனாய்வு அமைப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

- **மூடி மறைத்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது**

இங்கிரிய நாயகந்த பாலத்திற்கு அருகில் பொலிஸ் ஜீப் ஒன்று மோதி இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை மூடி மறைக்க முற்பட்ட இங்கிரிய பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

- **வடமாகாண ஆளுநர் பதவியிலிருந்து என்னை அனுப்ப முடியாது**

தகுந்த காரணங்கள் இல்லாமல் வடமாகாண சபையினர் என்னை மாற்றுவதற்கு முடியாது என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார். வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

- **வடமாகாணத்துக்கு அடுத்த வருடம் பல மில்லியன்**

ஊடகவியலாளர்கள் சந்திப்பின் வடமாகாணத்தின் அபிவிருத்திக்கு அடுத்த வருடம் 6000 மில்லியன் ரூபாய் நிதி வழங்குவதாக நிதி அமைச்சின் செயலாளர் ஜயசுந்தர உறுதியளித்ததாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

- **இலங்கை கடற்பரப்பினுள் 73 இந்திய மீன்பிடிப்படகுகள் பிடிபட்டன**

இவ்வருடம் மே முதல் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 73 இந்திய படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தேசிய மீனவர் சம்மேளனத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.சதாசிவம் தெரிவித்துள்ளதுடன், கடந்த புதன்கிழமை அதிகாலை 63 அடி நீளமுள்ளதாய் கலமொன்றையும் 23 மீனவர்களையும் கைது செய்துள்ளதாகவும் கூறினார்.

- **கூட்டமைப்புடன் பேச தயார்: ஜனாதிபதி**

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பகிரங்க பேச்சுக்கு தான் தயார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

- **உண்டியலை உடைக்கவில்லை: சஷீந்திர**

தொலைக்காட்சி விவாதங்களில் என்னால் பங்குபற்ற முடியாது. அவ்வாறான விவாதங்களில் சேறு பூசும் நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவித்துள்ள ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சரும் வேட்டாளருமான சஷீந்திர ராஜபக்ஷ, கதிர்காமம் உண்டியலை உடைக்கும் அளவிற்கு தான் ஏழை இல்லை என்றும் அந்த உண்டியலை தான் உடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

- **துப்பாக்கியுடன் வந்து யுவதியை காதலிக்குமாறு மிரட்டிய நபர் கைது**

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்களை ஒரே மேடைக்கு கொண்டுவர முடியுமாவென அரசாங்கத் தரப்பினர் விடுத்த சவாலை வெற்றிகொண்டது போல் அரசமைக்கும் சவாலையும் வெற்றிகொள்வேனென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சூளுரைத்துள்ளார்.

# நிகழ்வுகள்

## சிறுவர் சந்தை

செய்தி : சசிகுமார்

குச்சவெளி அன் நூறியா கனிஸ்ட பிரிவு பாடசாலை மாணவர்களின் மாதிரி சந்தை நிகழ்வு புதன்கிழமை 10.09.2014 காலை நடைபெற்றது.

அதிபர் என்.எம்.அமீர் தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ. எம்.ஆசீக் அதிதியாக கலந்து சிறப்பித்தார் இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருந்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோரகளும் கலந்து கொண்டனர். பாடத் திட்டத்தின் ஒரு நிகழ்வாக இது நடத்தப் பட்டது.



-கதிரவன்-




## திருமலை பௌர்ணமி நிகழ்வு

## "நீங்களும் எழுதலாம்"

"நீங்களும் எழுதலாம்" கவிதைச் சஞ்சிகையின் வாசகர் வட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பௌர்ணமி தின நிகழ்வுகள் அச்சஞ்சிகையின் ஆசிரியர் திரு.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. 08.09.2014 மாலை 4.30 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் அனேகர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் மறைந்த எழுத்தாளர்கள் சாரல்நாடான், U.S.ஆனந்தமூர்த்தி, தொழிற்சங்கவாதி பாலா தம்பு ஆகியோருக்கான அஞ்சலி உரைகளை முறையே எழுத்தாளர் இராஜதர்மராஜா, அரசியல் விமர்சகர் யதீந்திரா, இலக்கிய ஆர்வலர் வே.பார்த்தீபன் ஆகியோர் நிகழ்த்தினர். அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து ஈழத்தில் தமிழில் நிகழ்ந்த பாலஸ்தீன மொழிபெயர்ப்பு முயற்சிகள் என்னும் பொருளில் புலோலியூர் வேல்நந்தகுமார் அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது.

இதனைத்தொடர்ந்து கவியரங்கு இடம்பெற்றது. இவற்றினை அடுத்து திருகோணமலைப் பொது வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர் திரு.லலிதகோபன் அவர்களால் கவிதைகள் வாசிக்கப்பட்டது. இவற்றுடன் "நீங்களும் எழுதலாம்" பௌர்ணமி தின நிகழ்வுகள் இனிது நிறைவுபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முருங்கையின் சிறப்பு



முருங்கையில் நாம் நினைப்பதை விட எண்ணற்ற சத்துக்கள் கொட்டிக் கிடக்கின்றன. முருங்கை கீரையில் கல்சியம், இரும்பு சத்து, வைட்டமின் பி, பி-2, வைட்டமின் -சி ஆகிய சத்துகள் அதிகம் உள்ளன.

பூக்களை அதில் உள்ள பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டால் உடலுக்கு பலன் கிடைக்கும். காய்களை அன்றாட உணவில் சேர்த்துக்கொண்டால் சளி குறையும். சிறுநீரை பெருக்கவும், மலமிளக்கவும் முருங்கை பயன்படுகிறது. முருங்கை கீரை தலை நோய்க்கு நல்ல மருந்தாகும். பூக்கள் கண்களுக்கு நல்ல குளிர்ச்சி தரும். நாக்கு சுவையின்மையை குணமாக்கும்.

முருங்கை இலைகளில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்பு சத்து இவை இருக்கின்றன. இந்த இலைகளை நெய்யில் பொரித்துச் சாப்பிட்டால், ரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் ஊறும், தோல் வியாதிகள் தீரும். முருங்கைப் பட்டை, உலோகச் சத்துக்கள் நிறைந்தது.

கடுமையான ரத்த, சீதபேதி, வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப்புண் இந்த வியாதிகளுக்கெல்லாம் முருங்கைக் காய் கை கண்ட மருந்து. ஆரஞ்சை போல் 7 மடங்கு வைட்டமின் சி அடங்கியது . பாலில் இருப்பதை போல் 4 மடங்கு சுண்ணாம்பு சத்து அடங்கியது. காரட்டில் இருப்பதைப் போல் 4 மடங்கு வைட்டமின் A அடங்கியது. வாழை பழத்தை போல் 3 மடங்கு பொட்டாசியம் அடங்கியது. தயிரில் இருப்பதை விட 2 மடங்கு புரோட்டின் அடங்கியது. இரும்பு சத்து அமரிமிதமாக உள்ளது. எந்த கீரையையும் விட 75 மடங்கு இரும்பு சத்து அதிகம்.

## குடல்புண் (அல்சர்)

- உடல் எடை குறைய, அல்சர், கொலஸ்ட்ரால் குறைய, நரம்புத்தளர்ச்சி நீங்க, ரத்தப்புற்று குணமடைய அருகம்புல் ஒரு சிறந்த டானிக். ரத்தத்தில் ஹீமோகுளோபின் அதிகரிக்கச் செய்வதில் சிறந்தது அருகம்புல்தான்.
- கொத்தமல்லியை தினமும் உணவில் சேர்த்து சாப்பிடலாம். அல்சர் இருப்பவர்களுக்கு இது நல்ல டானிக் ஆகும். பசியை தூண்டும், பித்தம் குறையும். காய்ச்சல், சளி, இருமல், மூலம், வாதம், நரம்புத்தளர்ச்சி குணமாகும்.
- மஞ்சள் காமாலை, அல்சர், தொழுநோய், யானைக்கால் வியாதி, பேதி, நரம்புத்தளர்ச்சி, ஞாபக சக்தி முதலியவற்றிற்கு சிறந்தது வல்லாரை. தினமும் 2 வேளை சிறிதளவு இலைகளை சாப்பிடலாம்.
- மணத்தக்காளி கீரையை சமைத்து சாப்பிடுவதன் மூலம் ஜீரணக் கோளாறுகள், புற்றுநோய், அல்சர், ஈரல் கோளாறுகள், இருமல், அனீமியா, தோல் வியாதிகள் முதலியவற்றை கட்டுப்படுத்தலாம்.

ஒருவருக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் ஏற்பட்டிருந்தால், அதன் அறிகுறிகள் ஏதும் வெளியே தெரியாது. கர்ப்பப்பை வாய் புற்றுநோய் முற்றிய நிலையை அடைய 10 ஆண்டுகள் ஆகும். இதனால்தான் குறிப்பிட்ட கால இடைவெளியில் டாக்டரிடம் ஆலோசனை பெற வேண்டியது அவசியம் என்று வலியுறுத்துகிறோம்.



பிரச்சினை முற்றும் நிலையில், தாம்பத்தியத்தில் ஈடுபடும்போது அதிக வலி அல்லது இரத்தப்போக்கு ஏற்படலாம், வழக்கத்துக்கு மாறாக வெள்ளைப்படுதல், மாதவிலக்கின்போது ரத்தம் கட்டியாக வெளிப்படுதல் அல்லது மிகக் குறைந்த அளவில் உதிரப்போக்கு போன்றவை இதன் அறிகுறிகள். மெனோபாசுக்குப்பிறகு உதிரப்போக்கு இருந்தால் நிச்சயம் டாக்டரிடம் ஆலோசனை பெற வேண்டும்.

– தொடரும் –

# குறுக்கெழுத்து புதிர் 026

முடிவுத் திகதி : 18.09.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | | | | ■ | 2 அ | 14 | |
| | | ■ | ■ | ■ | 3 | | | |
| 4 | | | னை | ■ | ளை | 5 | | பு |
| 6 | ரா | 15 | ■ | 16 | | | | ■ |
| 7 | | | | | | 8 | 17 | 18 |
| 9 | | | | | ■ | ■ | | |
| | | 23 | | ஞ் | 20 | ■ | | 19 |
| | 11 | 10 | | 22 | | | 21 | |
| | ■ | ம் | ■ | ■ | | 12 | டு | |

### இடமிருந்து வலமாக

1. இஸ்லாமிய தீவிரவாதப் படையொன்று
2. உப்பில்லாமல் அவிக்கும் அரிசி
3. மாடு மேய்ப்பவன்
4. இதனை மனம் செய்தால் தீவினை அகன்றிடும் - குழம்பியுள்ளது
5. பெண்கள் கைகளில் அணிவது
6. நீதியின் அடையாளம்
7. அலுவலகம் ஒன்றின் உயர் அதிகாரி
8. குதிரைக்கு ஒத்த சொல்
9. பெரிய நிறுவனங்கள் தம்மை பிரபல்யப்படுத்தச் செய்வது - குழம்பியுள்ளது
10. கட்டபொம்மனின் தலைநகரம்
11. மேளத்துடன் இணைத்து வாசிக்கப்படுவது
12. நெருப்பில் கை வைத்தால்.............
22. கூடுதல் தவத்தினால் கிடைப்பது

### மேலிருந்து கீழாக

1. கலாநிதி ரஜனி திரணகமையினால் போர் தொடர்பாக எழுதப்பட்ட நூல்
2. முட்டையிட்டால் கோழிகள் இதைச் செய்யும்
3. இளவயதினர்
13. இந்தியப் பெண் அரசிகளில் மிகப் பிரபலமானவர்
14. ஆச்சரியத்திற்கு ஒத்த சொல்
15. அதிகாலையில் ஒலிக்கும் இறைவனின் இசை
16. அர்ச்சனை செய்தால் அரைப்பாதி தேங்காயுடன் கிடைக்கும் பிரசாதம் - கடைசிசொல் குழம்பியுள்ளது
17. பர்மாவின் தலைநகரம் - கடைசி எழுத்து குழம்பியுள்ளது
18. இறந்த பின் செல்வது
19. இது இல்லாவிட்டால் சாவில்லை
20. பசுக்கள் புல் மேயும் இடம்
21. குருவிகள் கட்டுவது
23. சிவனொளிபாதமலையில் சிவனது இது இருக்கிறது.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

### புதிர் 025 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பூ | 14 மா | லை | ■ | 2 செ | ந் | ம | 15 தா | ரை |
| 3 ம | ர் | லி | ன் | ம | ன் | 4 றோ | மி | யோ |
| ரா | ப | ■ | 16 க | வி | தை | ■ | ர | ■ |
| ங் | க | ■ | ட | ■ | 5 க | ட | ம் | ■ |
| ■ | ம் | ■ | வு | ■ | ல | ■ | 6 நீ | று |
| 7 ம | ட | 17 ம் | ச் | ■ | வி | ■ | க் | ■ |
| த | ம் | த | 8 சீ | வ | ன் | ■ | 9 ரோ | ம் |
| யா | ■ | 10 பு | ட் | டு | பா | ■ | ■ | ■ |
| னை | ■ | றா | டு | 11 பு | 12 கை | தி | 13 யோ | கி |

### பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

*திரு. தே. வினோஜன்,*
*இல.143, நிலாவெளி வீதி, அலஸ்தோட்டம்.*

*செல்வி. சு. கேஷானி*
*64, டொக்யாட் வீதி, திருகோணமலை.*




### சிந்திக்க .. ..

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பது மேல்

பிரதேஷ்

குட்டிக்கதை

## அறிவுரைகள் ஆபத்தை உருவாக்குமா??

ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய விஷமுள்ள பாம்பு வாழ்ந்து வந்தது. ஊர் மக்கள் யாராவது அதன் புற்றின் பக்கம் போனால் சீறி வந்து கொத்தி விடும். பாம்புப் புற்று இருந்த பாதை அந்த ஊருக்கும் பக்கத்து சந்தைக்கும் குறுக்கு வழி. பாம்புக்கு பயந்தே ஊர் மக்கள் பல தொலைவு சுற்றி அந்த சந்தைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். வேறு வழியில்லாததால் சலிப்புடனேயே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு யோகி வந்தார். அவர் மிருகங்களிடம் பேசக் கூடிய வரம் பெற்றவர். ஊர் மக்கள் தங்கள் குறையை அவரிடம் முறையிட்டனர். அவர் பாம்பிடம் பேசி அதற்கு ஊர் மக்களை கடிக்கக் கூடாது என்று கட்டளை இட்டு விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார். பாம்பும் அவர் கட்டளைக்குக் கட்டுப் பட்டு நடந்தது.


ஆனால் ஊர் மக்கள் சும்மாயில்லை. வழியே போகும் சிறுவனுக்குக் கூட பாம்பிடம் இருந்த பயம் போய் விட்டது. பாம்பைக் கண்டால் அதைக் கல்லால் அடிப்பது, துன்புறுத்துவது, விரட்டியடிப்பது என்று அதன் வாழ்க்கையை நிம்மதியில்லாமல் செய்து கொண்டிருந்தனர். உடம்பில் பல காயங்களுடன் குற்றுயிரும் குலையுயிருமாகி விட்டது பாம்பு.



யோகி ஒரு நாள் பாம்புப் புற்று இருந்த வழியாக ஊருக்குள் திரும்ப வரும் போது பாம்பின் பரிதாபமான நிலையைக் கண்டு அதனை விசாரித்தார். பாம்பும் நடந்த கதையையெல்லாம் கூறி அழுதது.

யோகி பாம்பைப் பார்த்து "அட முட்டாள் பாம்பே! உன்னை மக்களைக் கடிக்கவேண்டாம் என்றுதானே கூறிச் சென்றேன். பக்கத்தில் வருபவனைப் பார்த்து சீறாதே என்று ஒரு போதும் சொல்லவில்லையே" என்று கேட்டார். இதற்குப் பின் பாம்பும் பிழைத்துக் கொண்டது.

– அறிவுரைகளை ஆராய்ந்து செயல்படுதல் அவசியம் –



அ.நூசியா ராளியா, திருகோணமலை.



ஏ.எச்.றில்வான், கிண்ணியா, திருமலை.

### பழமொழிகளும் அதன் கருத்துக்களும்

1. அடாது செய்தவர் படாது படுவர். தீயன செய்பவர் துன்பப்படுவர்
2. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு எதனையும் அளவோடு செய்தல் வேண்டும்
3. ஆழம் அறியாமல் காலை விடாதே. எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்
4. இட்டுக் கெட்டார் எங்குமில்லை. கொடை கொடுத்தவர் துன்புறமாட்டார்.
5. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நலம் தரும்

– கு.ஜகதாத்ரி –
தரம் - 4, [illegible] வித்தியாலயம் திருமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. பின்வரும் தசம எண்களைப் பின்னங்களாக எழுதுக.
1. 0.8 2. 0.375 3. 12.35 4. 112.125

02. ஒரு மாணவனுக்கு 0.75 மீற்றர் சீருடைத் துணி வழங்கப்படுகிறதாயின், 42 மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான துணியின் மொத்த நீளத்தைக் காண்க.

03. பாலனின் வயது, சந்திரனின் வயதிலும் இரு மடங்காகும். இவ்விருவரினதும் வயதுகளின் வர்க்கங்களின் கூட்டுத்தொகை 500 ஆகும். பாலனின் வயது x எனவும், சந்திரனின் வயது y எனவும் கொண்டு இரு சமன்பாடுகளை அமைக்க. இருவரினதும் வயதுகளைக் காண்க.

03. பசு ஒன்றையும் இரு ஆட்டுக் குட்டிகளையும் ரூ11250 இற்கு வாங்கலாம். அத்தகைய 7 ஆட்டுக் குட்டிகளை வாங்கச் செலவிடும் பணத்திற்கு அத்தகைய பசு ஒன்றை வாங்கலாம்.
1. பசுவின் விலையை ரூx எனவும், ஆட்டுக்குட்டி ஒன்றின் விலையை ரூy எனவும் கொண்டு மேற்குறித்த தகவல்களைப் பயன்படுத்தி இரு ஒருங்கமை சமன்பாடுகளை உருவாக்குக.
2. பசுவின் விலையையும் ஆட்டுக் குட்டி ஒன்றின் விலையையும் காண்க.

04. நாற்பக்கல் ஒன்றின் ஒரு சோடி எதிர்ப் பக்கங்கள் சமனும் சமாந்தரமும் ஆயின், அது ஓர் இணைகரம் ஆகுமென நிறுவுக.

05. ஒரு கிராமத்தைச் சேர்ந்த 40 விவசாயிகளுள் 23 பேர் பூசணியையும், 19 பேர் வெண்டியையும், 9 பேர் இவ்விரண்டையும் பயிர் செய்கின்றனர்.
1. பொருத்தமான வென்வரிப் படம் ஒன்றை வரைக.
2. இவ்விரண்டில் எதையுமே பயிர் செய்யாதோர் எத்தனை பேர்?
3. வெண்டியை மாத்திரம் பயிர் செய்வோர் எத்தனை பேர்?
4. பூசணியை மாத்திரம் பயிர் செய்வோர் எத்தனை பேர்?
5. வெண்டி அல்லது பூசணியை பயிர் செய்வோர் எத்தனை பேர்?

06. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி மடக்கையைக் காண்க.
1. 3.456 2. 684.3 3. 39.32 4. 67.54

07. $3y-9x^2=0$ எனும் சார்பை வரையாமல் பின்வருவனவற்றிற்கு விடை தருக.
1. சமச்சீர் அச்சின் சமன்பாடு 2. திரும்பற் புள்ளியின் ஆள்கூறு
3. இழிவு அல்லது உயர்வு பெறுமானம்?
4. இச் சார்பின் பிரதிவிம்பத்தின் இழிவு அல்லது உயர்வுப் பெறுமானம்?

08. கூட்டல் விருத்தி ஒன்றின் முதலாம் உறுப்பு 50, 21 ஆம் உறுப்பு 10 எனின், அவ்விருத்தியின்,
1. பொதுவித்தியாசம் 2. 12ம் உறுப்பு
ஆகியவற்றைக் காண்க.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
30.08.2014 முதல் பிரதி சனி தோறும் மு.ப10-12 வரை G.C.E (O/L) மாணவர்களுக்கான மாதிரி வினாப் பரீட்சை நடைபெறவுள்ளது. முன்கூட்டியே பதிவு செய்து பங்குபற்றவும்.

## பாடம் : விஞ்ஞானம்

01. குழந்தைப் பருவத்தில் வயதிற்கு ஏற்ற உயரம் இல்லாத ஒரு பிள்ளைக்கு ஓமோனைத் தொடர்ச்சியாக உட்செலுத்திய போது அது சாதாரண உயரத்துடன் வளர்ந்தது. இந்த ஓமொன்
1. புரோலக்ரின் 2. அதிரீனலின் 3. தைரொட்சின்
4. சோமாற்றோரொபின்

02. இறப்பரை வல்கனைசுப்படுத்தவும் பங்கசு கொல்லியாகவும் பயன்படுத்தப்படும் மூலகம் எது?
1. C 2. N 3. Na 4. S

03. யூரியா $CO(NH_2)_2$ மூலக்கூறு ஒன்றில் காபன், ஒட்சிசன், நைதரசன், ஐதரசன் அணுக்களின் எண்ணிக்கைகள் முறையே.
1. 1, 1, 1, 2 ஆகும் 2. 2, 2, 2, 4 ஆகும் 3. 1, 1, 2, 4 ஆகும்
4. 1, 1, 2, 2 ஆகும்

04. உடனலமுள்ள வளர்ந்த ஒருவரின் குருதியில்உள்ள சிறுமணியற்ற வெண்குழிய வகை எது?
1. இயோசீனாடி 2. மூலநாடி 3. நடுநிலைநாடி 4. மொனோசைற்று

05. பின்வருவனவற்றுள் எது ஈரூடகவாழி (உபயவாழி) விலங்காகும்?
1. நீர்ப்பாம்பு 2. நீர்நாய் 3. தேரை 4. ஆமை

06. பின்வருவனவற்றுள் எது அயன் பிணைப்பை ஏற்படுத்தும் கூட்டமாகும்?
1. NaCl, HCl 2. $CCl_4$, NaCl 3. HCl, MgCl 4. NaCl, MgCl

07. இரசாயனத் தாக்கங்களில் தாக்க வீதத்தில் பங்களிப்புச் செய்யும் ஒரு காரணி அல்லாதது எது?
1. தாக்கிகளின் பௌதீக நிலை 2. தாக்கிகளின் செறிவு
3. தாக்கிகளின் வெப்பநிலை 4. தாக்கிகளின் நிறம்

08. 1955 ஆம் ஆண்டில் வில்பத்து சரணாலயத்தில் வாழ்ந்த மான்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 550 எனின், அம்மான்களின் கூட்டத்திற்கு வழங்கும் மிகப் பொருத்தமான பெயர் எது?
1. இனம் 2. சூழல் தொகுதி 3. சாகியம் 4. குடித்தொகை

09. இலத்திரன்களை அகற்றுவதன் மூலம் மாத்திரம் விழுமிய வாயு நிலையமைப்பு அடையப்படும் மூலகங்கள் இடம்பெறும் விடை யாது?
1. H, Li, C 2. Na, K, Ca 3. H, F, Cl 4. C, O, N

10. மேற்பரப்பைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்கள் பல நிறங்களைக் கொண்டு காணப்படுகின்றன. இந்நிறங்களுக்குக் காரணமான பல நிறப் பொருட்கள் காணப்படுகின்றன. மஞ்சள் நிறத்திற்குக் காரணமான நிறப் பொருள் எது?
1. தைத்தேனியம் ஒட்சைட்டு 2. ஈயகுரோமேற்று
3. குரோமியம் ஒட்சைட்டு 4. காபன்

11. தூண்டல் கிடைக்கப்பெறும் திசையை நோக்கி ஏதேனும் தாவரப்பகுதி வளைகின்றது எனின், அவ்வசைவு?
1. முன்னிலை அசைவு என அழைக்கப்படும்
2. திருப்ப அசைவு என அழைக்கப்படும்
3. உறக்க அசைவு என அழைக்கப்படும்
4. இரசனை அசைவு என அழைக்கப்படும்

## பாடம் : வரலாறு

01. பின்வரும் சாசனங்கள் குறிப்பிடும் விடயங்களைத் தருக.
1. பனாகடுவ செப்புசாசனம் - (1ம் விஜயபாகுவின் – காணிகள் பகிர்ந்தளிப்பு)
2. வல்லிபுர பொற்சாசனம் - (வசபனின்) யாழ்ப்பாணம் ஆட்சிபரம்பல்

02. துட்டகைமுனுவின் 10 தளபதிகள் பற்றி மகாவம்சம் குறிப்பிடும் விடயங்களை உறுதிப்படுத்தும் கல்வெட்டுக்கள் எவை?
சிதுல்பவ்வ
சங்கபால விகாரை

03. ஆராமை நிர்வாகம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள்
மிகிந்தலை அபயகிரி சமஸ்கிருத
களுதியபொகுண

04. குறுநில மன்னர், பிரதேச ஆட்சியாளர் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுக்கள்
குசேலன்கந்த ஹென்னன்னேகல
பம்பரகல யடஹலென

05. ஐந்து அமைச்சர் பரம்பரை பற்றி குறிப்பிடும் கல்வெட்டு எது?

06. பின்வரும் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்தும் விடயங்களைத் தருக?
கொடவாய –
பதுளை –
பெரிமியன் குளம் -
சிதுல்பவ்வ –

07. தொல் பொருள் மூலாதாரத்தின் காலத்தை அறிய உதவும் விஞ்ஞான முறை எது?

08. ஆரியரின் தாயகம் எது?

09. ஆரியர் இந்தியாவுக்குள் வந்தவழி எது?

10. ஆரியர் இந்திய வருகை பற்றி குறிப்பிடும் மூலாதாரங்கள் எவை?

11. ஆரியர் அந்தியா வரும் போது நிலவிய நாகரிகம் எது?

12. இந் நாகரிக முக்கிய நகரங்கள் எவை?

13. ஆரியர் முதலில் குடியேறிய பிரதேசம் எது?

14. ஆரிய தாம் கைப்பற்றிய பிரதேசத்திற்கு இட்ட பெயர்?

15. ஆரியர் ஆட்சியில் பலம் பொருந்திய குடியேற்றங்கள் எவை?

16. ஆரியரின் ஆட்சியில் "கண" அல்லது குடியாட்சி நிலவிய இராச்சியங்கள் எவை?

17. 16 குடியேற்றங்களில் பலம் பொருந்திய இராச்சியம் எது?

18. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்றால் என்ன?

ஆசிரியர் : அகிலன்

## Grammar

Ex 01: Complete these sentences using today/ this year/ this term etc.
1. I saw Tom yesterday but ..............................
2. I read a news paper yesterday but I ..........................
3. Last year the company made a profit but this year ..............................
4. Tracy worked hard at school last term but ..................
5. It snowed a lot last winter but ......................
6. Our football team won a lot of games last season but we ............................

Ex 02: Read the situations and write sentences as shown in the example.

1. Jack is driving a car but he's very nervous and not sure what to do.
You ask: Have you driven a car before?
He says : No, this is the first time I've driven a car.

2. Len is playing tennis. He's not very good and he doesn't know the rules.
You ask: ..............................................
He says: ..............................................

3. Sue is riding a horse. She doesn't look very confident or comfortable.
You ask : ..............................................
She says: ..............................................

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தென்கிழக்கு.....

அத்துடன் இஸ்லாமிய கற்கைகளுக்கான பிரிவு, இஸ்லாமிய சிந்தனைக்கும், கலாசாரத்து- க்குமான பிரிவு, இஸ்லாமிய ஷரி-ஆ சட்டப் பிரிவு, இஸ்லாமிய வங்கி மற்றும் நிதி முறைமைப் பிரிவு என்ற பெயர்களில் பல்வேறு பீடங்கள் இயங்குகின்றன.

நாட்டில் உள்ள ஷரி-ஆ சட்டம் பாரிய பிரச்சினையாக உள்ளதாகவும் அதனை நீக்க வேண்டுமேனவும் பொதுபல சேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ள போதே இத்தகவலைத் தெரிவித்துள்ளது.

பொதுபல சேனாவின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவ்வமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் ஷரி-ஆ சட்டத்தின் அடிப்படையில் இயங்கும் வங்கி முறைமை தடை செய்யப்பட வேண்டும். இதற்காக நாடளாவிய ரீதியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையால் நாட்டில் பிரச்சினை இல்லை. ஆனால், அதனைவிடப் பயங்கரமாகவுள்ள இஸ்லாமிய ஷரி-ஆ சட்டத்தை நீக்க வேண்டும். இதுவே எமது பாரிய

## இந்தியாவில் ஓர்.....

நுட்பங்கள் மூலம் அனுப்ப முயற்சித்த போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு வர்த்தகராக கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிற்கு வருகை தந்து தனது வர்த்தகத்தை நடாத்திவந்த அருண் செல்வராஜ் கைது செய்யப்படும் இந்தியத் தேசியப் பாதுகாப்பு நிலைகளான தமிழ்நாட்டின் கரையோரக் காவற்படை மையங்கள், பயிலுனர் படையியல் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றினதும் ஆந்திர மாநிலத்தின் விசாகப்பட்டின படைக்குவிப்பு மையத்தின் புகைப்படங்களையும் சலனப் படங்களையும் தன்னகத்தே வைத்திருந்துள்ளார்.

கொழும்பில் உள்ள பாகிஸ்தானிய ஒளவாளியொருவருடன் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அருண் அவ்வுளவாளியின் வங்கிக் கணக்கில் இருந்து தன்னியக்க அட்டை மூலம் பல லட்சங்களைப் பெற்றுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனினும் இலங்கைத்தமிழரை உளவாளியாக தாம் எப்போதுமே பயன்படுத்தவில்லை என பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். இதே வேளை இவரொரு விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

## புலிகளை உருவாக்க ...

நபரிடமிருந்து மீட்டுள்ளனர்.

சந்தேக நபரையும் மீட்கப்பட்ட பொருட்களையும் விசேட அதிரடிப்படையினர் காவல்துறையிடம் ஒப்படைத்துள்ளனர்.

## வன்புணர்வின் பின்...

மழை பெய்த போது, சிறுமியின் வீட்டுக்கு வந்த குறித்த அயலவருக்கு சிறுமியின் தாய் குடையொன்றை கொடுத்ததுடன், குடையை வாங்கி வருமாறு கூறி சிறுமியையும் அனுப்பியுள்ளார்.

எனினும் நீண்ட நேரமாக சிறுமி வீட்டுக்கு வராததையடுத்து, சிறுமியின் குடும்பத்தினரும் அயலவர்களும் சிறுமியை தேடியுள்ளனர்.

நீண்ட நேர தேடுதலுக்கு பின்னர் பை ஒன்றினால் கட்டப்பட்ட நிலையில் சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமி உயிரிழந்த நிலையிலேயே வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் சிறுமியின் மரணம் தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொண்டு வருவதாக, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் எம்.எஸ்.இப்றாலெவ்வை தெரிவித்தார். மூன்று பிள்ளைகளின் தந்தையான அந்த அயலவன் கைதாகியுள்ளார்.

## இனமுறுகலை ....

அளவில் இரு இன முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கும் இடையில் கடந்த 8ம் திகதி இரவு வாய்த்தர்க்கமும் கைகலப்பும் நடைபெற்றதை அடுத்து இவ்விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இவ்விடயம் பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினராலும் சில சைவக் கோயில்களின் குருக்கள்களாலும் பிரதேசச் செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்ட போது விடயத்தை பிரதேசச் சபைக்குத் தெரியப்படுத்துமாறு உதவிப் பிரதேசச் செயலாளர் அவர்களுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து விடயம் பிரதேச சபைத் தவிசாளரின் கவனத்திற்குக கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதையடுத்து பிரதேச சபைத் தலைவர் உரியவர்களிடம் பேசி இவ்விடயத்தைச் சுமுகமாகத் தீர்க்க முனைந்ததாக தெரிகின்றது.

பாரம்பரியத் தமிழ்க் கிராமமான பாரதிபுரம் மூதூரின் எல்லைக் கிராமங்களில் ஒன்றாக இருப்பதால் கடந்த பல தசாப்தங்களாக பல்வேறு அழிவுகளுக்கும் உட்பட்டு வந்துள்ளது.

போரோய்ந்துள்ள இக்காலத்தில் பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையிலுள்ள இக்கிராமத்தில் இரண்டு இன மக்களும் சுமகமாக வாழ்ந்து வருவதைப் பொறுக்க முடியாத சிலரின் நடவடிக்கையாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது என ஊர்த்தலைவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

## கடற்படை ....

நெடுந்தீவில் மேய்ச்சல் நிலங்களில் குதிரைகளைப் பார்வையிட்ட அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதேசசபை அதிகாரிகள், கடற்படைமுகாமைச் சேர்ந்த லெப்டினன்ட் கொமாண்டர் கருணாரட்ன மற்றும் பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்தபோதே கடத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட நான்கு குதிரைகளும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியுடன் கடற்படையினரால் திருகோணமலைக் கடற்படைமுகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தவறான முன்னுதாரணமாக இந்தச் சம்பவம் அமைந்துவிடக்கூடாது என்பதால் எடுத்துச் சென்ற குதிரைகளை மீளவும் நெடுந்தீவிலேயே கொண்டுவந்து விட்டுவிடுமாறு திருகோணமலைக் கடற்படை உயர் அதிகாரிக்கு உத்தியோகபூர்வமாக விரைவில் அறிவிக்கவுள்ளோம். கடற்படையினர் தங்களுக்குக் குதிரைகள் தேவையென்று கருதினால், இலங்கைக் காவல்துறையில் ஒரு பிரிவாகவுள்ள குதிரைப்படைப்பிரிவில் இருந்து இளைப்பாறும் குதிரைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

## கிழக்கு மாகாண..

தொடர்பில் இங்கு தூதுவரின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

சர்வதச விசாரணைக்குச் சாட்சியமளிக்க கிழக்கு வாழ் மக்களிற் பெருமளவானார் தயாராக இருக்கின்ற போதிலும் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தினால் அவர்கள் சாட்சியமளிக்க முன்வராதுள்ளனர் என்பதை த.தே.கூ வினர் சுட்டிக் காட்டியதுடன் கிழக்கில் நிகழும் கடுமையான சிங்களக் குடியேற்றங்கள், அதனூடாக பாராளுமன்ற உறுப்புரிமையின் எண்ணிக்கையைத் திருகோணமலையிலும், அம்பாறையிலும் தமிழர்களிடமிருந்து குறைத்தமை, கிழக்கு மாகாணசபையின் நியமனங்களில் தமிழ் மக்களைப் புறக்கணித்தமை போன்ற விடயங்களை எடுத்துக் கூறியதுடன் இவற்றிற்கு டேவிட் கமரூன் தலைமையிலான பிரித்தானிய அரசு ஒரு தீர்வினைப் பெற்றுத்தர முயற்சிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக் கட்சியின்....

தமிழரசுக் கட்சியால் வெளியிடப்பட்ட தீமானங்களை 2003ம் ஆண்டின் நொவம்பர் மாதத்தில் விடுதலைப் புலிகளால் இடைக்கால அரசு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையுடன் ஒப்பு நோக்கக்கூடியதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளியிடப்பட்டுள்ள பல தீர்மானங்களால் புதிதாக அரசியல் நெருக்கடியொன்றை உருவாக்கும காரணிகள் வெளிப்படுவதாகவும் அவ்வாறு தோன்றக் கூடிய நெருக்கடிகளையும் தமிழரசுக் கட்சியின் சவால்களையும் சமாளிப்பதற்கு தெளிவானதும், உறுதியானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

1988ம் ஆண்டில் வடக்கும் கிழக்கும் ஒன்றாக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்பதாலேயே அவை 2006ம் ஆண்டில் மீயுயர் நீதிமன்றத் தீர்ப்பினால் பிரிக்கப்பட்டது. அப்பிரிப்பில் அரசியல் காரணிகள் எவையும் இருக்கவில்லை. அம் மாகாணங்கள் இரண்டையும் மீள இணைப்பதென்ற கேள்வியானது மீயுயர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு அப்பாட்டது என்பதை வலியுறுத்திய அவர் த.தே.கூ மற்றும் தமிழரசுக் கட்சி ஆகியவற்றுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தொடர்பை 2005ம் ஆண்டில் சனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு புலிகளின் சார்பில் அவர்கள் கோரியதிலிருந்து தெரிந்துயொள்ளலாம் என்றும் செவ்வியுள்ளார்.

## போராடுவோம்.....

போராட்டமாகவே நிகழும் என அறிவித்த அவர் அனைத்துத் தமிழ் மக்களும் தமது விடுதலைக்காகப் போராட வரவேண்டும் என்ற அழைப்பையும் விடுத்தார்.

உலகம் முழுவதும் சிதறிக்கிடக்கும் ஈழத்தமிழர்களினதும், இந்தியாவில் தமிழருக்காக எழுந்துள்ள குரல்களை அரவணைத்துக் கொண்டும் முன்நகரப் போகும் எமது சாத்வீகப் போராட்டத்தை எதிர்வரும் தை மாதத்தில் நாம் தொடக்க சித்தம் கொண்டுள்ளோம். இன்றிலிருந்து அடுத்துவரும் மூன்று மாத காலத்திற்குள் இந்த அரசு தமிழ் மக்கள் விரோதப் போக்கைக் கைவிட்டு திறந்த மனதுடன் தமிழ் மக்களுக்கோர் நிரந்தரத் தீர்வை வழங்க முன்வருவதற்கான காலக்கெடுவாக நாம் அறிவிக்கின்றோம். அக்காலக்கெடுவைப் பயன்படுததத்த தவறுமிடத்து எமது சாத்வீகப் போராட்டங்கள் ஆரம்பமாகும் என அவர் மேலும்

உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா?
செய்திகளை எமக்குச் சொல்லுங்கள்
நாங்கள் மீள் நிரப்புகின்றோம்
0777 555 738

## வடக்கிலும், கிழக்கிலும்..

ஆண்டில் ஒரு இந்திய இராணுவ உயரதிகாரி என் நண்பர் ஒருவருக்கு கூறினாராம் "நாங்கள் இலங்கைக்கு வந்து விட்டோம். இனி 100 வருடங்களுக்கு இலங்கையை விட்டுப் போகமாட்டோம்" என்று.

ஆனால் அடுத்த வருடமே இந்தியாவின் பிரதமராக வீ.பீ.சிங் வந்தவுடன், இந்திய இராணுவம் வாபஸ் பெறப்பட்டது. இதனை Man proposes God disposes என்பார்கள். அதாவது, மனிதன் முன்மொழிவான் இறைவன் முடித்து வைப்பான் என்பதின் அர்த்தத்தை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இறை நம்பிக்கை கொண்டவர்கள் வட, கிழக்கு மாகாணத்தவர்கள். இஸ்லாமியரோ, கிறிஸ்தவரோ, இந்துக்களோ இறை நம்பிக்கையில் வாழ்பவர்கள். முடித்து வைப்பவன் இறைவன் என்பதில் சந்தேகமில்லாதவர்களே எம்மக்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## லியோ கழக..

கழகத்தினர் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலைப் பொதுவைத்தியசாலையில் பல தன்னார்வத் தொண்டுத் திட்டங்களைச் செயற்படுத்தியுள்ள இவர்கள் திருகோணமலை கடற்கரையைக் காலாண்டுக்கு ஒருமுறை சுத்தமாக்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் நகர லியோக் கழகம் ஈடுபட்டுள்ளது. தமது சேவைகளுக்காக நகர லியோ கழகத்தினர் தேசிய மட்டத்தில் பல பரிசில்களைப் பெற்றிருக்கின்றனர்.




## இரவு தொழுகை இரண்டு. இரண்டா!!

அதில் உட்கார்ந்து அத்தஹியாத்து ஓதி ஸலாம் கொடுப்பார்கள். (முஸ்லிம் 746) மற்றொரு அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் (ஒரே ஸலாமில்) இரவில் ஏழு ரக்அத்துகள் தொழுவார்கள்.

அதேப் போல "உமர் (ரலி) அவர்களின் காலத்தில் உபை இப்னு க.ப் (ரலி) மற்றும், தமீமுத் தாரி அன்சாரி (ரலி) அவர்களை மக்களுக்கு பதினொன்று ரக்அத்துகள் தொழுவிக்குமாறு உமர் (ரலி) அவர்கள் ஏவினார்கள். (ஆதாரம் முஅத்தா பாடம் : ரமலானில் தொழுகை) மேற்ச் சுட்டிக் காட்டிய ஹதீஸ்களில் முதலாவது கவனிக்க வேண்டியது இரவுத் தொழுகையும், அதன் எண்ணிக்கைகளும். நபி (ஸல்) அவர்கள் பதினொன்று ரக்அத்துகள் தான் தொழுதுள்ளார்கள் என்பது தெளிவான சான்றாகும். இரண்டாவது." உங்களில் ஒருவர் இரவிலே எழுந்து தொழுதால் சுருக்கமாக (இலேசாக) இரண்டு ரக்அத்துகள் தொழுது கொள்ளட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் 767) எனவே இந்த ஹதீஸின் மூலம் இரவுத் தொழுகையை ஆரம்பிக்கும் முன் இரண்டு ரக்அத்துகள் சுருக்கமாக தொழுது கொள்ளலாம். எனவே தான் நபி (ஸல்) அவர்கள் இரவிலே பதிமூன்று ரக்அத்துகள் தொழுதுள்ளார்கள் என்பதைக் காணலாம்.



இங்கு நமக்கு பிரச்சனை என்னவென்றால் இரவுத் தொழுகை இரண்டு, இரண்டு என்பதின் மூலம் நாம் நினைத்த அளவு எண்ணிக்கை குறிப்பிடாமல் தொழலாமா என்றால் கூடாது. ஏன் என்றால் இரவுத் தொழுகை இரண்டு, இரண்டு என்ற ஹதீஸை நடைமுறைப் படுத்தியவர்கள் நபி (ஸல்) அவர்களும், ஸஹாபாக்களும் தான். நபி (ஸல்) அவர்கள் அமல் விடயமாக ஒரு விடயத்தை ஏவுகிறார்கள் என்றால் முதலில் அவர்கள் தான் நடைமுறைப் படுத்துவார்கள். அதனைத் தொடர்ந்து ஸஹாபாக்களும் நடைமுறைப் படுத்துவார்கள். ஆகவே இரவுத் தொழுகை இரண்டு, இரண்டு என்பதை பதினொன்று ரக்அத்துகள் தொழுது, நமக்கு வழி காட்டியுள்ளார்கள்.

அதனால் தான் உமர் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்திலும் கூட பதினொன்று ரக்அத்துகளை தொழுவிக்குமாறு ஏவியுள்ளார்கள்.

தொடரும் .. ..

## வாரமொரு ஜோக்




- அருணன் -

வெளிநாட்டவர் சிலர் பிரம்மாவிடம் தங்களை அழைத்து செல்ல உதவுமாறு வேண்டினர். நமது இலங்கைத் தமிழரும் மகிழ்வுடன் சம்மதிக்கவே அனைவரும் ஒரு ஸ்பெஷல் ரொக்கட்டில் பிரம்மாவை தரிசிக்க கிளம்பினர். நீண்ட நேர பயணத்தின் பின் ஒருவாறு ரொக்கட் பிரம்மாவின் வாசஸ்தலத்தின் வரவேற்பு பகுதியில் தரையிறங்கியது. பூலோகவாசிகள் சிலர் தன்னை காணவந்த விடயத்தை தனது தூதர்கள் மூலம் அறிந்த பிரம்மா தனது வரவேற்பறையில் அவர்களுக்கு காட்சியளித்தார். ஒவ்வொருவராக தங்களின் விருப்புகளை கூறுமாறு கேட்டுக்கொண்டார்.

அவரின் பாதங்களை வணங்கியபின் முதலாவதாக அமெரிக்கர் பிரம்மாவை நோக்கி சுவாமி! எமது நாடு உலகிலேயே முழு வல்லரசாக மாறும் காலம் எப்போது வரும் என வினவினர். கண்களை மூடி தியானித்த பிரம்மா இன்னும் ஐம்பது வருடங்களில் என பதிலளித்தார். உடனே கண்கலங்கிய அமெரிக்கர் அந்நாளை காண நான் அவ்வளவு நாட்கள் உயிர்வாழ மாட்டேனே எனினும் என் மக்களாவது அதை காணட்டும் என பிரம்மாவிற்கு நன்றி கூறி விடைபெற்றார்.



அடுத்ததாக ஜப்பான் நாட்டவர் ஐயனே எமது நாடு தொழில்நுட்பத்தில் அனைத்து நாடுகளையும் மிஞ்சும் காலம் எப்போது வரும் என வினவ அறுபது வருடங்கள் ஆகும் என பதிலளித்தார். நன்றி கூறிய ஜப்பானியர் அதை காண்பதற்கு நானும் அவ்வளவு காலம் உயிர் வாழமாட்டேனே என சென்றார். இவ்வாறு ஒவ்வொரு நாட்டவரும் தங்கள் நாட்டின் எதிர்காலம் பற்றி பிரம்மாவிடம் கேட்டதும் அவரிடம் நன்றியும் கூறி விடைபெற்றனர். பிரம்மாவும் தன் கடமை முடிந்து தன் இருப்பிடம் நோக்கி திரும்ப எத்தனைக்கையில் தான் ஓர் மூலையில் பல்லிமாதிரி ஒட்டிக்கொண்டிருந்த நமது இலங்கை தமிழர் அவர் கண்ணில் பட்டார். தன்னை வழிபடும் பக்தனல்லவா! ஓடோடிசென்று கட்டியணைத்து, மெய் அன்பனே! நீ என்னை நாடி வந்த காரணம் யாதோ என அன்புடன் வினவினார். நம்மவரோ தலையை சொறிந்தவாறு சும்மா வந்தனான் ஐயா என்றார்.




## ஈரல் பிரட்டல்

**தேவையான பொருட்கள்**

ஆட்டு ஈரல் - 500 கிராம், வெங்காயம் - 2, பச்சை மிளகாய் - 2, வர மிளகாய் - 4, இஞ்சி - பூண்டு விழுது 1 தே.க, மிளகு - 1 மே.க, சீரகம் - 1 தே.க, சோம்பு - 1 தே.க, மஞ்சள் பொடி - 1 தே.க, கறிவேப்பிலை - தேவையான அளவு, எண்ணை – 3 மே.க, பட்டை, இலை - தாளிக்க

**செய்முறை**



ஈரலை நன்கு கழுவி சிறிய துண்டுகளாக வெட்டி இருநூறு மி.லி தண்ணீர் விட்டு முக்கால் பருவத்திற்கு வேக வைக்க வேண்டும். தண்ணீர் முழுவதும் சுண்டி விட வேண்டும். பின்னர் மிளகு, சீரகம், சோம்பு, வர மிளகாய் நான்கையும் பத்து நிமிடம் ஊற வைத்து ஒரு மே.கரண்டி உப்பு சேர்த்து விழுதாக அரைத்து ஈரலில் போட்டு பிசறி அரை மணி நேரம் வைக்க வேண்டும். வெங்காயத்தை நீள நீளமாகவும், பச்சை மிளகாயை சிறிது சிறிதாகவும் நறுக்கி வைக்க வேண்டும். அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணை ஊற்றி பட்டை, இலை தாளிக்க வேண்டும். வாசனை வந்ததும் வெங்காயம் போட்டு வதக்கி, சிவந்ததும் ப. மிளகாய், கறிவேப்பிலை போட வேண்டும். பின் இரண்டு நிமிடம் கழித்து இஞ்சி - பூண்டு விழுது, ம.பொடி, ஒரு தே.கரண்டி உப்பு மூன்றையும் சேர்த்து வதக்க வேண்டும். வதங்கியதும் ஈரல் கலவையைப் போட்டு ஐந்து நிமிடம் வதக்கி, அரை டம்ளர் தண்ணீர் ஊற்றி அடுப்பை லேசான தணலில் வைக்க வேண்டும். அடிக்கடி திறந்து கிளறி விட வேண்டும். தண்ணீர் வற்றியதும் இறக்க வேண்டும்.

## கொலுசு அணிவது ஏன்



நகைகள் என்பது நம் மூதாதையர்கள் காலத்தில் இருந்து மிக முக்கியம் வாய்ந்தவையாக கருதப்பட்டு வந்துள்ளது. நகைகள் நம் உடலில் உள்ள முக்கிய வர்மப் புள்ளிகளைத்தூண்டி நம் உடலின் ஒவ்வொரு உறுப்புகளையும் பராமரிக்கிறது.

பொதுவாக எல்லா நகைகளையும் தங்கத்தில் அணியும் நாம், காலில் அணியும் நகைகளை வெள்ளியில் தான் அணிகிறோம். தங்கத்தில் மகாலட்சுமி இருப்பதால் நாம் காலில் அணிவதில்லை என கூறப்படுவதுண்டு. வெள்ளி நகைகள் நம் ஆயுளை விருத்தி செய்யக் கூடியவை. நம் உடல் சூட்டை அகற்றி குளிர்ச்சியாக்கி சருமத்தை ஆரோக்கியமாக்கும்.



உணர்ச்சி வசப்படுதல் என்பது எப்பொழுதும் ஆண்களை விட பெண்களுக்கு அதிகம். வெள்ளி கொலுசு குதிகால் நரம்பினை தொட்டுகொண்டிருப்பதால் குதிகால் பின் நரம்பின் வழியாக மூளைக்கு செல்லும் உணர்ச்சிகளைக் குறைத்து கட்டுப்படுத்துகிறது.

மேலும் பெண்களின் இடுப்பு பகுதியை ஸ்திரப்படுத்தவும் கொலுசு பயன்படுகிறது.

## ஆபரணங்களும் ஆடைகளும்



## மூக்கு சொர சொரப்பை நீக்க சில டிப்ஸ்

முகப்பரு, கரும்புள்ளிகள் போன்றவை பெண்களின் அழகை பாழாக்கக்கூடியவை. குறிப்பாக இவை சருமத்தின் மென்மைத்தன்மையை பாதிக்கும். இதற்கு முக்கிய காரணம் சருமத்தில் அதிகப்படியான எண்ணெய் இருப்பதால், அவ்விடத்தில் அழுக்குகள் மற்றும் இறந்த செல்கள் அப்படியே தங்கி, சருமத் துளைகளை அடைத்து, நாளடைவில் அவ்விடத்தில் வெள்ளை அல்லது மஞ்சள் நிறத்தில் புள்ளிகளாக மாறும்.

இவற்றை எளிதில் ஒருசில இயற்கை வைத்தியங்களின் மூலம் போக்கலாம். அதோபோன்று மூக்கின் மீது சொரசொரவென்று வெள்ளையாக இருக்கும். அந்த வெள்ளைப்புள்ளிகளை எப்படி போக்குவது என்று பார்ப்போம்.

**ஆவிப்பிடிப்பது**

வெள்ளைப்புள்ளிகளை போக்க நல்ல சூடான நீரில் ஆவிப்பிடிக்கலாம், அதிலும் அப்படி ஆவி பிடித்த பின்னர், முகத்தை காட்டன் கொண்டு நன்கு அழுத்தி துடைத்து எடுத்தால், வெள்ளைப்புள்ளிகளானது போய்விடும்.

தொடரும் .. ..

## அதிகமாக கொட்டுகிறதா தலைமுடி

இளம் தலைமுறையினர் முதல் பெரியவர்கள் வரை கவலைத் தரக்கூடிய பிரச்னைகளில் ஒன்று முடி கொட்டுவது.

இதற்காக பல்வேறு எண்ணெய்கள், மருந்துகளை பயன்படுத்துவோம், ஆனால் நம் அன்றாட உணவுகளில் ஒரு சில சத்துள்ள பொருட்களை சேர்த்துக் கொள்வதன் மூலமே இப்பிரச்னையை எளிதாக சரிசெய்யலாம்.



**சால்மன் மீன்**

சால்மன் மீனில் வைட்டமின் டி சத்துக்கள் நிறைந்துள்ளன, அதுமட்டுமின்றி முடி வளர்ச்சிக்கு தேவையான கொழுப்பு அமிலங்கள் உள்ளது.

மற்ற பிற கடல் உணவுப் பொருட்களை விட இதில் ஜிங்க் சத்து அதிகம் உள்ளது, சால்மன் மீன்களை உண்பதால் முடி கொட்டும் பிரச்னைக்கு பாதுகாப்பு அளித்து முடிக்கு ஈரப்பதத்தை அளிக்கும்.



**சோயா**

உடலில் இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறையும் போது முடி கொட்டத் தொடங்கும். சோயாவில் சிவப்பணுக்களை உற்பத்தி செய்ய தேவையான தாமிரம் நிறைந்துள்ளது, தினமும் ஒரு கப் சோயா பால் அருந்துவது, சிறிது தயிர் மற்றும் சோயா சீஸ்களை எடுத்துக் கொள்வதால் இப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்கலாம்.

**ப்ளூபெர்ரி**

ப்ளூபெர்ரியில் வைட்டமின் சி சத்துக்கள் அதிகம் நிறைந்துள்ளது, வைட்டமின் சி சத்துக்கள் குறையும் பட்சத்தில் முடியில் வெடிப்புகள் ஏற்பட்டு ஆரோக்கியமற்ற நிலையில் உடைந்து விடும். மேலும் உடலுக்கு தேவையான ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் அதிகம் நிறைந்துள்ளதால், தினசரி உணவுகளில் எடுத்துக் கொள்ளலாம்.

**முட்டை**



புரோட்டீன் அதிகம் உள்ள முட்டைகளை உட்கொள்வதன் மூலம் முடி கொட்டுவதை தவிர்க்கலாம். திசு வளர்ச்சிக்கும், தலைச்சருமத்திற்கும் புரோட்டீன்கள் மிகவும் முக்கிய சத்தாகும். இவை முடி உற்பத்தி, இழந்த முடியை ஈடுசெய்தல், முடி வளர்ச்சிக்கு உதவுதல் ஆகியவற்றில் முக்கிய பங்காற்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செய்தி : கதிரவன்

## உடற்பயிற்சிப் போட்டியில் இரண்டாம் இடம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 19 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான உடற்பயிற்சி போட்டியில் திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளீர் கல்லூரி அணியினர் இரண்டாம் இடத்தினை பெற்று வெள்ளிப்பதக்கத்தினை தமதாக்கி கொண்டுள்ளனர். இவர்கள் கடந்த வருடமும் இரண்டாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



உடற்பயிற்சி குழுவினர் அதிபர், பிரதி அதிபர்கள், பயிற்றுநர் விளையாட்டு ஆசிரியைகளுடன் காணப்படுவதை படத்தில் காணலாம்.

## உதைப்பந்தாட்ட பயிற்சிப் முகாம்



மண்முனை தென்மேற்கு பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் திரு.ந.தயாசீலன் அவர்களின் ஏற்பாட்டில் இளைஞர் சம்மேளன உதைப்பந்தாட்ட மாவட்டப் போட்டியில் வெற்றியீட்டி தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகி உள்ள முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக்கழக அணியின் வீரர்களுக்கான உதைப்பந்தாட்டப் பயிற்சி முகாம் 08.09 அன்று ஆரம்பமானது. இப்பயிற்சி முகாமானது தொடர்ந்து இடம்பெற உள்ளதுடன் இப்பயிற்சியினை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு.ஈஸ்வரன், ஆரையம்பதி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் திரு.சுரேஸ் ஆகியோர் இணைந்து வழங்குகின்றனர்.

## முத்தையாவின் பந்து வீச்சு – பிரசன்னா



இவரது பந்து வீச்சை விவரிப்பது அவ்வளவு சுலபமல்ல, தரன் ஒரு வினோதமான பந்து வீச்சாளர். இவரது பந்து முறை குறித்து சர்ச்சைகள் இருந்தாலும், ஸ்பின் உலகின் சிறந்த பந்துவீச்சாளர் இவர். இவரது பந்துகள் பல முறையற்றவை என்று கருதப்பட்டது. ஆனால் 800 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அவரது பந்து வீச்சின் அனுகூலங்களை மட்டும் நான் கூற விரும்புகிறேன். அவரது பந்து வீச்சு முறை முற்றிலும் வேறுபட்டது. அவர் பந்துகளை பயங்கரமாகத் திருப்பக் கூடியவர் என்பதே பிரதானமாக இருந்து வருகிறது என்கிறார் இந்திய முன்னாள் பந்து வீச்சாளர் பிரசன்னா.

## ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி



சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் மகளிருக்கான ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை அணி, மலேஷியாவுக்கு எதிரான போட்டியிலும் வெற்றிபெற்று, அரையிறுதிச் சுற்றுக்கும் தகுதிபெற்றுள்ளது. குழு நிலைப் போட்டிகளில் 'பி' பிரிவில் இடம்பிடித்த இலங்கை அணி, ஏற்கனவே தான் எதிர்கொண்ட அணிகளான சீனத்தைபே, மியன்மார் மற்றும் புருனேயை வெற்றிகொண்டது குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணி அபார வெற்றி



உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் வீரர்களை சூதாட்டத்தில் இழுக்க பல்வேறு முயற்சிகள் நடக்கலாம் என்பதால் நியூசிலாந்து பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி 2015ம் ஆண்டு பிப்ரவரி 14ம் திகதி முதல் மார்ச் 20ம் திகதி வரை அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடக்கிறது. இந்நிலையில் அழகிகளை வைத்து வீரர்களை மயக்க சூதாட்டக்கா ரர்கள் திட்டமிட்டு இருப்பதாக நியூசிலாந்து பொலிசார் எச்சரித்துள்ளனர்.

## சானியா மிர்சா - ஸ்பியர்ஸ் ஜோடி வெற்றி



அமெரிக்கன் ஓபன் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவு பட்டத்தை இந்தியாவின் சானியா மிர்சா - பிரேசிலின் புருனோ சோரெஸ் ஜோடி கைப்பற்றியுள்ளது. நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் அமெரிக்கா, மெக்ஸிகோ ஜோடியான அபிகாலில் ஸ்பியர்ஸ் - சாண்டியாகோ கோன்சலேஸ் ஆகியோரை 6-1, 2-6, 11-9 எனும் விகிதத்தில் தோற்கடித்து கோப்பையை வென்றது சானியா அணி.

## சுயசரிதை – சர்சையாகுமா!

கடந்த வருடம் நவம்பர் மாதம் 16ம் திகதி தமது கிரிக்கெட் வாழ்விலிருந்து ஓய்வுப்பெற்றார் சச்சின். அதன் நினைவாக இந்த வருடம் நவம்பர் மாதம் தமது சுய சரிதைப் புத்தகத்தை அவர் வெளியிடவுள்ளார். சுய சரிதைப் புத்தகம் எனும்போது அதில் என்னதான் நெருடல் தருபவையாக இருந்தாலும் உண்மைத் தகவல்கள் இடம்பெற வேண்டும் என்பது விதி.

# சர்வதேசச் செய்திகள்

### • சூரிய புயல் – பூமி நோக்கி

பூமியை நோக்கி மணிக்கு 4.02 மில்லியன் கிலோ மீற்றர் வேகத்தில் வலுவான சூரியப் புயல் வந்து கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சூரியனின் மையப் பகுதியிலிருந்து புறப்படும் இந்தச் சூரியப் புயல் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இந்த புயலினால் பூமியின் காந்தப் புலத்தில் மாற்றங்கள் ஏற்படலாம், மின் வினியோக அமைப்புகளில் பாதிப்பு ஏற்படுவதோடு செயற்கை கோள்கள், ரேடியோ ஒலிபரப்புகளில் சிறிய அளவு தொந்தரவு ஏற்படலாம்.

### • மோடி – சந்திப்பு – பராக்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது அமெரிக்க பயணத்தின் போது அந்தநாட்டின் ஜனாதிபதி பாராக் ஒபாமாவைச் சந்திக்க உள்ளார் என அமெரிக்க அதிகாரிகள் உறுதிசெய்துள்ளனர். இந்த சந்திப்பைத் தொடர்ந்து இருநாட்டு உறவுகள் மற்றும் சர்வதேச அரசில் நிலைப்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இரண்டு நாட்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### • ஐஎஸ்ஐஎஸ் ஐ வீழ்த்த திட்டம்

புதன்கிழமை இரவு வெள்ளை மாளிகையில் இருந்து அமெரிக்க மக்களுக்கு உரையாற்றிய அதிபர் ஒபாமா கூறுகையில், சிரியாவிலும் ஈராக்கிலும் ஐளுஐளு அமைப்பை வீழ்த்துவதற்குத் அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் இதற்குத் தனக்கு அதிகாரமும் உள்ளது எனினும் செனட் சபையும் மக்களும் இதற்கு சம்மதம் அளித்தால் நேட்டோ அமைப்புடன் இணைந்து விரைந்து செயற்பட முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

### • சிரியாவால் விற்கப்பட்டாரா

ஈராக்கின் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளால் தலை துண்டித்துக் கொல்லப்பட்ட அமெரிக்க பத்திரிகையாளர் ஸ்டீவன் சோட்லாப் சிரிய புரட்சியாளரால் விற்கப்பட்டார் என தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

### • நெதர்லாந்து சிறை வாடகைக்கு

நார்வே நாட்டில் நாளுக்கு நாள் குற்றங்கள் பெருகிக்கொண்டே போவதால், கைது செய்யப்படும் குற்றவாளிகளை அடைத்துவைக்க சிறைச்சாலையில் இடம் போதவில்லை. எனவே பக்கத்து நாட்டின் சிறைச்சாலையை வாடகைக்கு எடுக்க நார்வே அரசு முடிவு செய்துள்ளது.

### • செல்லமாட்டோம்

பிரான்ஸை சேர்ந்த ஏர் பிரான்ஸ் விமான நிறுவனத்தில் பணிபுரியும் விமான உதவியாளர்கள் எபோலா நோய் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு செல்லமாட்டோம் என்று கடந்த வாரம் மறுப்பு தெரிவித்துள்ளனர். இதையடுத்து தற்போது ஏர் பிரான்ஸ் விமானிகளும் இந்த முடிவை எடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### • ஹாக்கி வீராங்கனைகளை நிர்வாணப் படம் எடுத்த பயிற்சியாளர்

நெதர்லாந்து நாட்டில் உள்ள ஹாக்கி விளையாடும் வீராங்கனைகளை ரகசிய கேமரா மூலம் நிர்வாண படம் எடுத்த ஹாக்கி பயிற்சியாளர் அதிரடியாக கைது செய்யப்பட்டார். இவர் அந்நாட்டின் சிறந்த பயிற்சியாளர் விருதை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### • அதிசய குழந்தை

உகாண்டாவில் குழந்தை ஒன்று நான்கு கை மற்றும் நான்கு கால்களுடன் பிறந்துள்ளது. இதையடுத்து முலாங்கோ மருத்துவமனையில் குழந்தையை அனுமதித்தபோது, அதன் இரண்டு கை கால்கள், முதுகு எலும்பு, கல்லீரல் மற்றும் இருதயம் இடம் மாறி இருப்பதை மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர். இந்நிலையில் குழந்தைக்கு சிகிச்சை செய்ய வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காக மூன்று மாதம் வரை அதன் உறுப்புகளை வளரவிட்டு பின்பு மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்துள்ளனர்.


### • ஸ்கொட்லாந்து விடுதலை பெறுமா?

எதிர்வரும் செப்டம்பர் 18 ஆம் திகதி ஸ்காட்லாந்தில் அந்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் முக்கியமான வாக்கெடுப்பு நிகழ்கின்றது. இந்த வாக்கெடுப்பில் பெரும்பான்மையான மக்கள் ஸ்காட்லாந்துக்கு சுதந்திரம் வேண்டும் என விரும்பி "Yes" என்று வாக்களித்தால் சுமார் 307 வருடங்களாக இங்கிலாந்துடனும் வேல்ஸ்டனும் சேர்ந்திருக்கும் ஸ்காட்லாந்து பிரிந்து தனி நாடாக சுதந்திரம் பெற்று விடும்.

### • திருமணத்தில் குழந்தை பெற்ற சம்பவம்

கனடா நாட்டைச் சேர்ந்த சாகச செயல்வீரர் ஒருவர் எரிமலையின் அருகில் நின்று துணிச்சலுடன் செல்பி ஒன்றை எடுத்துள்ளார். தெற்கு பசிபிக் கடலில் உள்ள வனுவாட்டுவில் அமைந்துள்ள ஆம்பிரிம் என்ற எரிமலையின் வாய்ப்பகுதியினுள் சென்ற இவர் தன்னைத்தானே புகைப்படம் எடுத்து கொண்டுள்ளார். இவர் புகைப்படம் எடுத்த வேளையில் சுமார் 1200 அடி மட்டத்தில் லாவா குழம்பானது கொதித்துக் கொண்டிருந்துள்ளது. ஆனால் எரிமலை வாயின் உட்புறத்தையும், தன்னையும் படம் எடுக்க உதவிய அந்த கமெரா வெப்பத்தில் உருகிவிட்டது என்றும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர் அணிந்திருந்த உடையானது எரிமலையிலிருந்து வெளியான அமில மழையில் முற்றிலுமாக அழிந்துவிட்டது எனவும் டிவிட்டரில் தெரிவித்துள்ளார்.

### • போதையில் சிறுமி கற்பழிப்பு



சீனாவில் உள்ள நதி ஒன்றில் 3000 ஆண்டுகளுக்கு முந்தைய வெண்கல வாள் ஒன்றை 11 வயது சிறுவன் ஒருவன் தற்செயலாக கண்டெடுத்துள்ளான். இந்த வெண்கல வாள் தற்போது மில்லியன் கணக்கில் விலைபோகும் என்றாலும், அந்த சிறுவனின் தந்தையார் அந்த வாளை தொல்பொருள் ஆய்வாளர்களிடம் நேர்மையாக ஒப்படைத்துள்ளார்.

### • விண்கல் வீழ்ந்து பாரிய குழி

கடந்த சனிக்கிழமை இரவு ஓர் சிறிய விண்கல் நிக்காரகுவாவின் மனகுவாவில் வீழ்ந்ததில் மிகப் பெரிய வெடிப்பு சத்தமும் 12 மீட்டர் விட்டமும் 5 மீட்டர் ஆழமும் உள்ள பாரிய குழி ஒன்று ஏற்பட்டதாகவும் அந்நாட்டு அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக AP ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

### • நாய் முடியில் விற்பனை

அமெரிக்காவில் உள்ள ஒரு பெண் நாயின் முடியில் மணிப்பர்ஸ் தயாரித்து அதனை $1000 விலைக்கு விற்பனை செய்து வருகிறார். இந்த புதிய தொழிலின் மூலம் அவர் நல்ல லாபம் கிடைப்பதாக கூறியுள்ளார்.

### • எனது வான் தளத்தைப் பாவிக்க தடை விதிப்பேன்.

ரஷ்யா மீது முக்கியமாக அதன் எரிசக்தி நிறுவனங்களைப் பாதிக்கும் விதத்தில் ஐரோப்பிய யூனியன் புதிய தடைகளை விதிக்கக் கூடுமானால் அதற்குப் பதிலடியாக மேற்குலக ஏர்லைன்ஸ் விமானங்களுக்குத் தனது வான் பாதையைப் பாவிக்கும் உரிமையை நீக்குவோம் என ர்'யப் பிரதமர் டிமிட்ரி மெட்வெடேவ் சூளுரைத்துள்ளார்.

### • சம்பள விகிதம்

ஜேர்மனியில் படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் வழங்கப்படும் ஊதிய விகிதம் அதிகளவில் மாறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

### • இங்கிலாந்து மகிழ்ச்சியில்



இங்கிலாந்து இளவரசர் வில்லியம் மற்றும் கேட் தம்பதியினர் 2 ஆவது குழந்தையை எதிர் நோக்கியுள்ள செய்தி பிரிட்டன் மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கிலும் வடக்கிலும் தமிழர்கள் வாழ்ந்தார்கள்!!!

இன்னும் பல ஆண்டுகளுக்கு கிழக்கையும் வடக்கையும் இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து அங்கு பெருமளவிலான சிங்களவர்களைக் குடியேற்றிய பின்னர் "முன்னொரு காலத்தில் கிழக்கிலும் வடக்கிலும் தமிழர்கள் வாழ்ந்தார்கள்" என்று சொல்லும் நிலைக்கு சிங்களவர்களைக் கொண்டுவரும் திட்டத்துடனேயே அரசின் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எனக்குக் கிடைத்த தகவலின் படி 2008ஆம் ஆண்டிலேயே அரசாங்கம் சார்ந்த உயர் அதிகாரி ஒருவர் "போர் விரைவில் முடிந்து விடும். ஆனால் எமது இராணுவம் குறைந்தது 25 வருடங்களாவது வட, கிழக்கு மாகாணங்களில் நிலைநிறுத்தப்பட்டு தமிழ் பேசும் மக்களை தலையெடுக்கவிடாமல் பண்ண வேண்டும்" என்று கூறியுள்ளாராம்.

அவரின் குறிப்பிட்ட கூற்றுக்கு ஏற்பவே நடவடிக்கைகள் நடந்து வருவதாக தென்படுகிறது. அவர்களுக்கு ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன். 1988ஆம் 13

# வன்புணர்வின் பின் குழந்தை கொலை



மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஞ்சந்தொடுவாயில் 9 வயது சிறுமி பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் 8ம்திகதி பிற்பகல் சுமார் 4.45 அளவில் இடம்பெற்றுள்ளது.

மஞ்சந்தொடுவாய் - ஜின்னா வீதியைச் சேர்ந்த, எம்.ஆர்.சஹாப்தீன் பாத்திமா சீமா என்ற சிறுமியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருதாவது, குறித்த பிரதேசத்தில் 13

# புலிகளை உருவாக்க முயற்சி! பழைய துணுக்குகளுடன் பயணித்தவர் கைது

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு உயிரூட்ட முயற்சித்தார்!!!! எனக் கூறி ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் களுவாஞ்சிக்குடி களுதாவளை பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இக்கைது குறித்த நபர் அட்டாளைச்சேனையிலிருந்து கொழும்பு நோக்கி வான் ஒன்றில் சென்று கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேகநபர்களின் கைதுகள் தொடர்பான கடிதங்கள், அவற்றின் பத்திரிகை செய்திகள், கனடா முகவரியிடப்பட்ட கடித உரை போன்றவைற்றை விசேட அதிரடிப்படையினர் சந்தேக 13

# தமிழரசுக் கட்சியினால் கௌரவிப்பு




திருகோணமலையில் 50 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் பணியாற்றியமைக்காக சிரேட்ட ஊடகவியலாளர் குருநாதன் ஐயா அவர்களும் (கீழேயுள்ள படம்) தமிழரசுக் கட்சியின் மூத்த செயற்பாட்டாளர்களுள் ஒருவரான திரு. காளிக்குட்டி ஐயா அவர்களும் (அருகிலுள்ள படம்) தமிழரசுக் கட்சியின் 15வது தேசிய மாநாட்டில்




இன்று காலை ஆரம்பம்
aat SRI LANKA
6000.00 for 6 Months
Veal Business College
No.159, Sea View Road, Trincomalee
026 222 76 22 - 077 02 03 201

# "கிழக்கு மாகாண சபையின் தமிழர் விரோதப் போக்கு"

## பொன் செல்வராசா பிரதி உயர்ஸ்தானிகரிடம் தெரிவிப்பு



தமிழா் விரோதப் போக்குடன் இயங்கிவரும் கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை பிரித்தானியப் பிரதி உயர்ஸ்தானிகருக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தலைமையிலான குழுவினர் விளக்கியுள்ளனர்.

மட்டக்களப்புக்கு கடந்த வியாழக்கிழமை வருகை தந்திருந்த இலங்கைக்கான பிரித்தானிய பிரதி தூதுவர் திருமதி லயோரா பேவிஸ் அம்மையாரை மட்டு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன்,பா.அரியநேத்திரன் ஆகியோர் சந்தித்திருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அத்துமீறிய குடியேற்றங்கள்,கிழக்கு மாகாணசபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழர் புறக்கணிப்பு செயற்பாடுகள்,புலனாய்வுத்துறையினரால் இயல்பு நடவடிக்கைகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் 13

# இன்று திருமலை நகர லியோ கழக தெரிவுகள்

திருகோணமலை நகர லியோ கழக நிர்வாக அங்கத்தவர்களின் தெரிவும் 2014-15ம் ஆண்டுக்கான நிர்வாகிகளின் பதவியேற்பும் இன்று நடைபெறவுள்ளது.

கடந்த 09 வருடங்களாகச் சிறப்பான சமூக சேவைச் செயற்பாடுகளில் திருகோணமலை நகர லியோ 13

மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 06.09.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம் 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org